R. No. 27/67
MADRAS RECORD OFFICE
2 MAR 1967
EGMORE, MADRAS

மேழிச்செல்வம்







- பராபவ ஹு -

தை, மாசி மீ தொகுப்பிதழ்
(ஜனவரி-பிப்ரவரி, பிப்ரவரி-மார்ச் 1967)

விலை 50 காசு

விசேஷ வேண்டுகோள்

“வறட்சி, மழையின்மை, கொடும் பசி. மீண்டும் இவ் வருடம் கோடிக்கணக்கான நம் நாட்டு மக்களின் சுக வாழ்வுக்கு இடையூறு ஏற்பட்டிருக்கிறது. சில இடங்களில் உயிர் வாழ்வதே கடினமாக இருக்கிறது . . . .

“பசியால் வாடி பற்றுக்குறையினுல் பீடிக்கப்படும் நம் நாட்டு மக்களுக்கு பெருமளவில் உதவி புரியுங்கள். முடிந்தவரை உதவி செய்ய நான் ஒவ்வொருவரையும் வேண்டிக்கொள்ளுகிறேன்.

“பணம், பொருள், தானியம், துணிமணிகள் எதுவானுலும் கொடையாக அளிக்கலாம்.

அனுப்பவேண்டிய விலாசம்:

பிரதம மந்திரியின் வறட்சி நிவாரண நிதி,
காபினட் செக்ரடேரியட்,
ராஷ்டிரபதி பவன்,
புது டில்லி-4.

இந்திரா காந்தி,
பிரதம மந்திரி.

R Rmo 27. /67

உள்ளுரை

	பக்கம்
ஐரோப்பாவில் ஐந்து வாரங்கள் ..	5
தேசிய நிருபணங்கள் ..	12
அமோக விளைச்சலுக்கு இந்திய ஜப்பானிகா ஒட்டு நெல் கல்சர் 2410 ..	15
உற்பத்தியை அதிகரிக்க இயந்திர சாதனங்கள் ..	19
மலைகளில் மட்டுமல் சமவெளிகளிலும் உருளைக்கிழங்கு சாகுபடி செய்யலாம் ..	21
நேற்று—இன்று—நாளை ..	23
பெல்லாரி வெங்காயம் சாகுபடி ..	25
வீரிய ஒட்டுச் சோளத்தில் மறுதாம்பு பயிர்.	28
ஏக்கருக்கு 4 255 கிலோ நெல் விளைவித்த ரகசியம் ..	31
பாழ்நிலம் பொன் விளையும் பூமியானது ..	32
வாசனைத் திரவியங்கள் வரிசையிலே.. ..	34
வானொலி மன்ற வார விழா ..	39
கேள்வியும் பதிலும் ..	42
1966-ம் ஆண்டு நவம்பர் மாதத்திய காலநிலை அறிக்கை ..	47
1966-ம் ஆண்டு டிசம்பர் மாதத்திய காலநிலை அறிக்கை —	49
தமிழ்நாட்டு வர்த்தகப் பயிர்களின் 1966-ம் வருடத்திய அக்டோபர், நவம்பர் மாதத்திய விற்பனை விவரங்கள் ..	50
அரசாங்க ஆணை 2064-ன் தொடர்ச்சி. ..	58

விளம்பரங்கள் :

விசேஷ வேண்டுகோள் (D.A.V.P.)—	2
அமெரிக்கன் ஸ்பிரிங் அண்டு ப்ரசிங் ஒர்க்ஸ் ..	4
ஸீமென்ஸ் இண்டியா ..	18
ராஜா பர்ம் நர்சரி ..	22
ரோகார் பூச்சி மருந்துகள் ..	27
கிர்லோஸ்கர் என்ஜின் ..	46

உழவர்செல்வம்

வருடாந்தர சந்தா	..	ரூ. 3·00
தனிப் பிரதி	..	ரூ. 0·25
ஆண்டு மலர்	..	ரூ. 0·50

இயற்கை உரத் தயாரிப்பு போட்டி

மதுரையின் சாதனை

1964—65-ம் ஆண்டுக்கான அகில இந்திய நகர இயற்கை உரத் தயாரிப்பு திட்டப் போட்டியில், மதுரை நகராட்சியின் சாதனையை மெச்சி, அந் நகரத்தை இத் திட்டத்தில் இந்தியாவிலேயே சிறந்த முறையில் செயலாற்றும் நகரமாக இந்திய அரசாங்கம் தேர்ந்தெடுத்துள்ளது. இதற்கான பரிசுத் தொகை ரூ. 5,000-மும் அந்நகர எரு அலுவலருக்கு ஒரு வெள்ளிக் கோப்பையும் வரும் மார்ச்சு மாதம் 6-ம் தேதி மத்திய அரசாங்க விவசாய உணவு மந்திரி அவர்களால், மதுரையில் நடக்கவிருக்கும் விழாவில் பரிசாக வழங்கப்படும்.

முதன்முறையாக நடக்கும் இந்த அகில இந்திய போட்டியில் மதுரையின் சாதனை மெச்சத்தக்கது. மற்ற நகரங்களும் மதுரையைப் பின்பற்றும் என நம்புகிறோம்.

பயிர் பாதுகாப்பே அபார விளைச்சல்

மதிப்பு வாய்ந்த பயிர்கள், பயிர் நாச கிருமிகளாலும், பயிர் நோய்களினுலும் நாசமடைவது தேசீய நஷ்டமாகும்.

"ஆஸ்பி"

உபகரணங்கள் அதை நிச்சயமாகவும் திறமையாகவும் தடுக்க வல்லது.



மருத் பேட்டரி ஸ்ப்ரேயர்



மருத் சார்ஜ் பம்ப்



கேடார்-யுடிலிடி ராகிங் ஸ்ப்ரேயர் ஹைஜெட் டிரிக்கர் இயக்கத்தோடு கூடிய ஸ்ப்ரேகன் (கேடார்-யுடிலிடி அசைத்தியக்கும் திரவ மருந்து பீச்சும் இயந்திரம்)



ஆஸ்பி ஹாண்ட் ரோடரி டஸ்டர் (கையினுல் சுழற்றும் பௌடர் மருந்து தூவும் இயந்திரம்)

அமெரிக்கன் ஸ்பிரிங் அண்டு பிரசிங் ஒர்க்ஸ் பிரைவேட் லிமிடெட்,

மாலாட் :: பம்பாய்-64

போன் : 692331 (5 லைன்கள்)

தந்தி : "கில்லோகஸ்ட்" மாலாட் - பம்பாய்.

சென்னை, மைசூர் ராஜ்ய விநியோகஸ்தர்கள் :

எஸ். வி. ரங்கசாமி அண்டு கம்பெனி பிரைவேட் லிமிடெட்,
75, கலாசிபாளையம் நியூ எக்ஸ்டென்ஷன்.
தபால் பெட்டி எண். 589,
பெங்களூர்-2.

சென்னை காரியாலயம்
நெ. 20, ஒய். எம். சி. ஏ. கட்டிடம்,
வெஸ்ட்காட் ரோடு.
ராயப்பேட்டை, சென்னை-14.

மேழிச்செல்வம்

சுழன்று மேர்ப்பின்ன துலகம் அதனா
லுழந்தும் உழவே தலை.

மலர் 23 | பராபவ௵ தை-மாசி௴ 1967—ஜனவரி-பிப்ரவரி, பிப்ரவரி-மார்ச் | இதழ் 13–14

ஐரோப்பாவில் ஐந்து வாரங்கள்

[வே. கார்த்திகேயன், ஐ. ஏ. எஸ்.]

சென்ற ஜூலை மாதம் 17-ம் தேதியிலிருந்து ஆகஸ்டு மாதம் 20-ம் தேதி வரை நான் மேற்கு ஜெர்மனி, பெல்ஜியம், இங்கிலாந்து, பிரான்சு, இத்தாலி ஆகிய ஐந்து நாடுகளில், ஐந்து வார காலம் சுற்றுப் பிரயாணம் செய்தேன். மேற்கு ஜெர்மனியில் மட்டும் நான்கு வாரங்களைக் கழித்தேன். அந்த ஒரு மாதமும் விடுமுறை நாட்களைப்போல் கழிந்தது என்றுதான் சொல்ல வேண்டும். ஏனென்றால், அங்கு அலுவலகத் தொல்லைகள் இல்லை; குடும்பத் தொல்லைகளும் இல்லை. காலமும் நேரமும் இனிது கழிந்தன. அலுவலகக் கோப்புகள் (Office Files) எங்கோ ஓடி ஒளிந்துவிட்டன. ஜெர்மனி சென்றவுடன் ஏதோ ஒரு புதிய உலகத்தில் காலடி வைத்ததுபோன்ற உணர்ச்சி ஏற்பட்டது. ஆனால் இங்கே திரும்பி வந்தபிறகு, அலுவலக வேலையோ வட்டியோடு முதலுமாகச் சேர்ந்து கொண்டது.

இன்றைய ஜெர்மனியைப் பற்றிச் சில வார்த்தைகள். பெர்லின், ஹிட்லர் காலத்திலே ஜெர்மனியின் தலைநகராக இருந்தது. இரண்டாவது உலகப் போருக்குப் பிறகு அமெரிக்கா, பிரிட்டன், பிரான்சு, ரஷியா ஆகிய நாடுகள் ஜெர்மனியை இரண்டாகப் பிரித்து, ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசு (Federal Republic of Germany) என்று மேற்கு ஜெர்மனியையும், ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு (German Democratic Repuplic) என்று கிழக்கு ஜெர்மனியையும் தனித்தனியாக அழைக்கலானார்கள். மேற்கு ஜெர்மனியில் அரசாட்சி ஜனநாயக முறையில் நடந்து வருகிறது. கிழக்கு ஜெர்மனியில் கம்யூனிஸ்டு ஆட்சி நடந்து வருகிறது. கிழக்கு ஜெர்மனி விவசாயப் பகுதி. மேற்கு ஜெர்மனி தொழில் பகுதி. கிழக்கு ஜெர்மனியிலே பெர்லின் தீவைப்போல் இருக்கிறது. பழைய பெர்லின் நகர் இன்று மேற்கு பெர்லின், கிழக்கு பெர்லின் என்று இரு நகரங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. மேற்குப் பெர்லினிலிருந்து மேற்கு ஜெர்மனிக்கு வர வேண்டுமென்றால் 180 கிலோ மீட்டர் கடந்துதான் வர வேண்டும். பெர்லின் நிலப் பகுதியில் மூன்றில் ஒரு பாகம் கிழக்குப் பெர்லினாக இருக்கிறது. கிழக்குப் பெர்லின் கிழக்கு ஜெர்மனியின் தலைநகராக உள்ளது. கிழக்கு ஜெர்மனியில்தான் ஹிட்லருடைய கோட்டை கொத்தளங்கள், பொருட்காட்சிச்சாலை (Museum) பல்கலைக்கழகம் ஆகிய அனைத்தும் அமைந்துள்ளன. பெயர் பெற்ற பிராண்டடன் பெர்க் வாயிலும் (Brandenberg Gate) கிழக்குப் பகுதியில்தான் உள்ளது. மேற்குப் பெர்லின் மேற்கு ஜெர்மனியின் தலைநகராக உள்ளது. மேற்கு ஜெர்மனியில் பதினொரு மாநிலங்கள் (Lander) இருக்கின்றன. அவற்றில் ஒரு மாநிலமாக மேற்குப் பெர்லின் திகழ்கின்றது. மேற்கு பெர்லினின் மக்கள் எண்ணிக்கை 22 இலட்சமாகவும், கிழக்குப் பெர்லினின் மக்கள் தொகை 11 இலட்சமாகவும் இருக்கிறது. பங்காளிகள் பிரித்துக் கொள்வதுபோல் பெர்லினை இரண்டாகப் பிரித்து இடையே சுவரொன்றும் கட்டி விட்டார்கள். இச் சுவர் 1961-ம் ஆண்டிற்கு முன்பு கிடையாது. மின்னல் வேகத்தில் இச் சுவர் ஒன்றிரண்டு நாட்களில் திடீரென்று கிழக்கு ஜெர்மனியரால் எழுப்பப்பட்டதாகக் கூறுகின்றார்கள். சுவரின் உயரம் 8 அல்லது 10 அடி இருக்கும். இதற்கு மேல் ஐந்து அல்லது ஆறு அடி உயரத்திற்கு முள்வேலி அமைக்கப்பட்டு இருக்கிறது. அதை தாண்டிக் குதித்தால் "மரணப் பகுதியில்" (Death strips) தான் விழவேண்டும். இங்கே, மின் ஓட்டமுள்ள மின்கம்பிகள் (Live electric wires) போடப்பட்டு இருக்கின்றன. இவற்றையடுத்து 'யார்க்கும் சேரா நிலப்பகுதி' (No man's land) என்று 20 அல்லது 30 அடி தூரமுள்ள நிலப்பகுதியும் இருக்கிறது. அங்கு யாரும் செல்லக்கூடாது. மீறிச் சென்றால் அவர்கள் உடனே சுட்டுக் கொல்லப்படுவார்கள். எனினும் மேற்குப் பகுதியைச் சேர்ந்த மக்கள் மரத்தினலான பரண்கள் மேல் நின்றுகொண்டு எதிர்ப்பகுதியை எட்டிப் பார்க்கின்றார்கள். மேற்குப் பகுதியிலிருந்து கிழக்குப் பகுதிக்கு வரக் கூடாது, கிழக்குப் பகுதியிலிருந்து மேற்குப் பகுதிக்கு வரக்கூடாதென்றும் கண்டிப்பான உத்தரவு உள்ளது.

"முன்னேறிவரும் நாடுகளுக்கான (ஜெர்மன் உதவி யளிப்பு நிறுவனம்" (German Foundation for Developing Countries) என்று 1960-ம் ஆண்டிலிருந்து மேற்கு பெர்லினில் பணியாற்றி வருகின்றது. 'பார்ஸிக்' (Borsig) என்ற தொழில் முதலாளி ஒருவருடைய சொந்த மாளிகை விலைக்கு வாங்கப்பட்டு, அதில் இந்த ஜெர்மன் நிறுவனத்தின் அலுவலகம் இப்போது இயங்கு கின்றது. 'டீகல்' ஏரியின் கரையில் மிக அழகாக அமைந்துள்ளது இம் மாளிகை. அங்கே உணவு விடுதி தங்கு விடுதி அனைத்தும் இருக்கின்றன. உலகத்தின் பல பகுதிகளிலிருந்து அரசாங்க அலுவலர்களும், உத்தியோகச் சார்பற்ற நிபுணர்களும் இந்நிறுவனம் ஏற்பாடு செய்யும் கருத்தரங்குகள், மாநாடுகள் ஆகிய வற்றில் கலந்துகொள்ள அழைக்கப்படுகின்றார்கள். விருந் தினர் மூன்று நான்கு வாரங்கள் கூட தங்குவதற்கு வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன. கருத்தரங்கு கள், மாநாடுகள் ஒன்றன்பின் ஒன்றாக வெவ்வேறு பொருள்களைப் பற்றி வருடம் முழுவதும் தொடர்ச்சியாக நடந்துகொண்டே போகின்றன.

நான் கலந்துகொண்ட எழுபத்தைந்தாவது கருத்தரங் கில் இந்தியா, பாகிஸ்தான், டிரினிடாட், ஜமைகா, மத்திய கிழக்காசியாவின் முஸ்லீம் நாடுகளான ஆப்கானிஸ்தான், சிரியா, லெபனான், ஜோர்டான், ஈரான், ஈராக், ஏடன், சைப்ரஸ், எகிப்து போன்ற பதி னைந்து நாடுகள் பங்கு கொண்டன. முப்பதுக்கு மேற் பட்ட பிரதிநிதிகள் வந்திருந்தனர். இந்தக் கருத் தரங்கு, பூரணமாக வளர்ச்சியடையாத பின்தங்கிய நாடுகளின் விவசாய வளர்ச்சிக்கு வேண்டிய திட்ட அமைப்புக்களைப் பற்றி ஆராய்வதற்காக நடத்தப்பட் டது. "முன்னேறிய நாடுகள்" "முன்னேறும் நாடுகள்" என்று உலகத்தையே இரண்டாகப் பிரித்திருக்கிறார்கள். இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகள் முன்னேறும் நாடுகளுள் சேர்க்கப்பட்டுள்ளன. இப்படிப்பட்ட நாடுகள் முன்னேற்றமடைய வேண்டுமென்ற தங்களுடைய ஆர் வத்தையும் நல்லெண்ணத்தையும் தெரிவிக்க வேண்டு மென்பதற்காக இந்தக் கருத்தரங்கை ஏற்படுத்தி யிருந்தார்கள். இக்கருத்தரங்கில் கலந்துகொள்ள இந் தியாவிலிருந்து நான்கு பேர்கள் சென்றோம். அதில் நானும் ஒருவன். திட்டக் குழுவைச் சேர்ந்த ஒருவர், இமாசலப் பிரதேசத்தின் அபிவிருத்திக் கமிஷனர்; இந் திய வேளாண்மை ஆராய்ச்சிக் குழுவைச்சேர்ந்த ஒரு வர். ஆகியோர் மற்றைய மூவராவர். பாகிஸ்தான் நாட்டிலிருந்து மூன்று பேர்கள் வந்திருந்தனர். அவர்களிலே ஒருவர் தென்னார்க்காட்டிலே துணைக் கலெக்டராக இருந்த கே. எஸ். இஸ்லாம் என்ற ஐ. சி. எஸ். அதிகாரி, என்னோடு அவ்வப்போது எளிய தமிழில் பேசி பழைய ஞாபகங்களைப் புதுப்பித்துக் கொண்டார்!

கருத்தரங்கிற்குச் சென்று திரும்புவது சம்பந்தமாக எங்களுக்கு ஒருவிதமான செலவையும் அமைப்பாளர் கள் வைக்கவில்லை. மேற்கு ஜெர்மனி அரசாங்கத்தின் விமான சர்விஸான லு∴ப்தன்சா (LUFTHANSA Flying Swande) பறக்கும் அன்னம் என்ற நிறுவனத்தார் சென்னையிலிருந்து பெர்லினுக்கும், பெர்லினிலிருந்து சென்னைக்கும் பயணச் சீட்டை இலவசமாகக் கொடுத்து விட்டார்கள். உண்டி, உறையுள், இதர செலவுகள் அனைத்தும் தங்களால் ஏற்கப்படுமென்று ஜெர்மன் நிறு வனத்தார் எங்களுக்கு அறிவித்துவிட்டார்கள். நான் கணக்குப் போட்டுப் பார்த்ததில், சுமாராக ஒரு நபருக்கு 10,000 ரூபாய் வரை செலவு ஆகியிருக்கும்.

கருத்தரங்குகள், மாநாடுகள் நடத்துவதில் அவர்கள் கைதேர்ந்தவர்களாகக் காணப்படுகின்றனர். கருத்தரங்கு கள் அமைப்பதற்குரிய திட்டங்களை அவர்கள் நன்றாக யோசித்து முன்னதாகவே தயாரித்து விடுகிறார்கள். நடைமுறையில் எந்தவிதமான தவறோ, தடங்கலோ ஏற்படுவதில்லை. மிகத் திறமையாக கால வரையறைப்படி செயல் புரிகின்றனர்.

இந்திய—ஜெர்மன் கூட்டுறவில் இமாசலப் பிரதேசத் தில் "மண்டி" என்ற மாவட்டத்திலே விவசாய வளர்ச்சித் திட்டமொன்று ஆரம்பித்துள்ளார்கள். உருளைக்கிழங்கு காய்கறிகள், பழவகைகள் இவற்றையெல்லாம் நவீன முறையில் உற்பத்தி செய்து அவற்றைப் பக்குவப்படுத்துவ தற்குத் திட்டம் ஒன்று அங்கே நடைமுறையில் இருந்து வருகின்றது. அதேமாதிரி நம்முடைய மாநிலத்தில் உதகையிலே செய்யப்போகிறோம். இமாசலப் பிரதே சத்தில் இப்பொழுது நடைபெறுகின்ற திட்டத்தின் பிரதிநிதியாகத்தான் அம்மாநிலத்தின் அபிவிருத்திக் கமிஷனர் வந்திருந்தார். தமிழ்நாட்டில் மேற்கொள்ள இருக்கும் திட்டத்தின் பிரதிநிதியாக நான் சென்றி ருந்தேன்.

பிரயாணத்திற்கு வேண்டிய வழக்கமான கடவுச் சீட்டு (Pass Port) முதலியன நான் ஏற்கெனவே மலேசியா சென்றிருந்ததால் கிடைத்துவிட்டன. அந்நியச் செலாவணி பெறுவதில் முதலில் சற்று சங்கடம் ஏற்பட்டது. அந்நியச் செலாவணி என்றால் வெளிநாடு செல்ல நமக்கு அரசாங்கம் ஏதோ இலவசமாகப் பணம் கொடுப்பதாக நினைத்துக்கொள்கின்றனர் பலர். உண்மை அதுவல்ல. நம்முடைய பணத்தை அந்நியச் செலாவணியாக மாற்றி எடுத்துக்கொண்டு செல்வதற்குத்தான் அரசாங்க அனுமதி தேவைப்படுகிறது. இந்த அனுமதியில்லாமல் இந்நாட்டை விட்டு யாரும் வெளிநாடுகளுக்குப் போக முடியாது. கப்பல் மூலமாகவோ, வான் வழியாகவோ போவதென்றால் பி. படிவம் (P. Form) இல்லாமல் இந்த நாட்டை விட்டுப் போகமுடியாது. மத்திய நிதி அமைச்சகமோ அல்லது ரிசர்வ் பாங்கியோ இந்த அனு மதியைத் தரவேண்டும். எனக்கு பி. வடிவம் தில்லியிலே புறப்படுவதற்கு முன்னாள் தான் கிடைத்தது. என் வெளிநாட்டுப் பயணச் செலவுக்காக 27 பவுன் அனுமதித் தார்கள். முன்பெல்லாம் ஒரு பவுனுக்கு சுமார் 14 ரூபா மதிப்பு இருந்தது. இப்பொழுது அம் மதிப்பு 21 ரூபாவாகியிருக்கிறது. இதைத் தவிர, வெளிநாட்டுக்குக் செல்லும் ஒவ்வொரு இந்தியருக்கும் விமானநிலையத்தில் 3 பவுன் அந்நியச் செலாவணி அனுமதிப்பதுபோல், எனக்கும் 3 பவுன் கிடைத்தது. எனவே மொத்தம்

30 பவுனுக்குச் சமமான தொகையை மேற்கு ஜெர்மன் மார்க்குகளாகவும், அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் பயணிகள் செக்'காகவும் நான் கொண்டு சென்றேன். எல்லா விமான நிலையங்களிலும் ஒரு நாட்டு நாணயச் செலாவணியைப் பிறநாட்டு நாணயச் செலாவணியாக மாற்றித்தர பாங்கிகள் இருக்கின்றன. டோக்கியோவிலிருந்து பிராங்ஃப்பர்ட் செல்லக்கூடிய லுஃப்தன்சா போயிங்–707 விமானத்தில் ஜூலை மாதம் 17-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை இரவு 10 மணிக்கு நாங்கள் நான்கு பேர்களும் தில்லியிலிருந்து புறப்பட்டோம். தில்லியிலிருந்து கிளம்பியவுடனே, விமானத்தில் எங்களை மிக அருமையாகக் கவனித்தார்கள். இதற்கு முன்பு ஒரு முறை வேறொரு வெளிநாட்டுக்குச் சென்றபோது பிரயாணிகளில் 30 பேர்கள் சைவ உணவினர் என்று தெரிவித்தும்கூட 18 பேர்களுக்குத்தான் விமானக் கம்பெனியார் சைவ உணவு அளித்தனர். இம்முறை தில்லிலிருந்து புறப்பட்டபோது, நான் ஒருவன்தான் சைவ உணவினன் என்று வற்புறுத்திச் சொன்னேன் என்னுடைய தேவைகளை உணர்ந்து அவர்கள் எனக்காகத் தூய சைவஉணவு தயார் செய்து கொடுத்தார்கள். சாப்பிடுவதற்குப் பழச்சாறு கொடுத்துக்கொண்டு இருந்தார்கள். தேவையில்லாவிட்டாலும் கூட அவர்களின் பழக்கலவை (Fruit Salad) ஐஸ்கிரீம் முதலியன அடிக்கடி உபசாரத்திற்காகவாவது சாப்பிடலாமென்ற அவா தோன்றியது. வாணிப நோக்கில்தான் அவர்கள் பிரயாணிகளை இவ்வாறெல்லாம் மிகப் பரிவுடன் கவனிக்கின்றார்கள். பெர்லினிலிருந்து பிரஸ்ஸல்ஸுக்கும், பிரஸ்ஸல்ஸிலிருந்து லண்டனுக்கும், லண்டனிலிருந்து பிரான்சுக்கும் வெவ்வேறு கம்பெனி விமானங்களில் நான் பிரயாணம் செய்தேன். லுஃப்தன்சா நிறுவனத்தாரைப் போன்று அவ்வளவு திறமையாக வேறு யாரும் கவனிக்கவில்லை. விமானத்தில் செல்லுகின்ற பொழுது குளிர்ச்சியாக இருந்தால் முகத்தைத் துடைத்துக் கொள்ள உடனே வெப்பத் துவாலை கொடுக்கிறார்கள். வெப்பமாகியிருந்தால் ஈரத் துவாலை கொடுக்கின்றார்கள். இவையெல்லாம் குளிர்ப்பதனப் பெட்டியிலிருந்து அவ்வப்பொழுது எடுத்து, நிலைமைக்குத் தகுந்தவாறு மாறி மாறிக் கொடுத்துக்கொண்டே வருகிறார்கள். அவர்கள் பிரயாணிகளுக்கு எவ்வளவு வசதிகள் செய்துகொடுக்க முடியுமோ அவ்வளவும் இன்முகத்துடன் செய்து கொடுக்கிறார்கள். தில்லியிலிருந்து புறப்பட்ட $1\frac{1}{2}$ மணி நேரத்திற்கெல்லாம் கராச்சி வந்தடைந்தோம். தில்லியிலே விமான நிலையத்திலிருந்து விமானத்திற்கு பஸ்ஸிலே கொண்டுபோய் விட்டார்கள். தில்லியில் உள்ள பஸ்களில் விமான நிலையத்திற்குச் செல்லும் பொழுது வெளிநாட்டுப் பிரயாணிகள் எல்லாம் சட்டத்தில் நெருக்கிக்கொண்டு வர வேண்டியிருந்தது. அவர்கள் கொண்டுவந்திருந்த கேமிரா, பை முதலியவைகளுடன் பஸ்ஸில் உயரமான படிகளில் ஏறி மிகத் தாழ்வான இருக்கைகளில் தொப்பென்று உட்கார்ந்து தொல்லைப்பட நேரிட்டது. எங்களுடன் வந்த அமெரிக்கர் ஒருவர் இதைப் பார்த்துவிட்டு இந்த இருக்கைகள் மனிதர்களுக்காகவா அல்லது விலங்குகளுக்காகவா என்று கேட்டார். அவருடைய அந்தச் சொற்கள் இந்தியனாகிய என்னை வருத்தமுறச் செய்தன. பிற விமான நிலையங்களில் இவ்வாறு இல்லை. விமானத்திற்கு மிகவும் அருகில் பஸ்களைக் கொண்டுபோய் நிறுத்துகின்றார்கள். அங்கு ஓடும் பஸ்ஸிலே ஒரே ஒரு படிதான் இருக்கிறது. பஸ்ஸிலிருந்து இறங்கினால் நேராகத் தரையிலே கால் வைத்துவிடலாம். உடனே விமானத்தில் ஏறிக்கொள்ளலாம். பஸ்களிலே இருக்கைகள் எல்லாம் சாய்வு இருக்கைகள் (Sofas) போல மிகவும் வசதியாக விசாலமாக வைத்திருக்கின்றார்கள். ஒரு பஸ்ஸில் கூட்டமாக இருந்தால் வேறு பஸ்ஸிலே போகலாம்.

கராச்சியிலிருந்து குவைட் சென்றோம். இவ்விடத்தில் தான் உலகத்திலேயே அதிகமான அளவு பெட்ரோலிய எண்ணெய் கிடைக்கிறது. அவர்கள் பணத்தை வைத்துக் கொண்டு என்ன செய்வது என்று தெரியாமல் விழிக்கின்றார்கள். அந்த அளவுக்குச் செல்வம் கொழிக்கும் நாடு அது. குவைட்டை அனைத்து நாடுகளின் விமான நிலையமாக மாற்றியிருக்கின்றார்கள், இந்த விமான நிலையத்தில் எங்களை இறங்கவிடவில்லை. அங்கிருந்து கெய்ரோ சென்றோம். அதுவும் ஓர் அனைத்து நாட்டு விமான நிலையமாகும். அங்கு பேசப்படும மொழி நமக்குத் தெரியாமலிருந்தாலும் அறிவிப்புப் பலகைகளில் பல மொழிகளில் அறிவிப்புகள் செய்யப்படுகின்றன. நம் கண்ணையும், காதையும் பயன்படுத்தினால் யாரிடமும் எதையும் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டியதில்லை. அந்த அளவுக்குச் சிறப்பான முறையில் எல்லாவற்றையும் அமைத்திருக்கின்றார்கள். வேண்டிய எல்லாவித வசதிகளும் அங்கே கிடைக்கின்றன. எகிப்து செழிப்பான நாடு அல்ல. வறண்ட பிரதேசம். தண்ணீர் கிடையாது. ஒரு பெரும் பாலைவனப் பகுதி. ஆனால் நாசர் அவர்களின் முயற்சியால் எல்லாம் சிறப்பாக அமைக்கப்பட்டிருக்கின்றன. திரும்பி வரும்போதும் கெய்ரோவில் இறங்கினோம். உள்நாட்டில் எவ்வளவு வறுமை, எவ்வளவு துன்பங்கள் இருந்தாலும் வெளிநாட்டினர் வந்து போகின்ற இடமாகையால், பிரயாணிகளுக்கு வாணிப நோக்கில் பெரிதும் உதவுகின்றார்கள். பல நாட்டவர் வந்து புழங்கும் இடமாகையால் சிக்கனத்தைக் கையாளக் கூடாது என்று கருதி எல்லாவற்றையும் கண்கவர் முறையில் அமைத்து வைத்திருக்கின்றார்கள். நாங்கள் ரோம் நகரை அடைவதற்குள் பொழுது விடிந்துவிட்டது. இது மாபெரும் விமான நிலையம். அங்கு வந்து போகும் பிரயாணிகளின் எண்ணிக்கைக்கு அளவேயில்லை. (பாரீஸில் உள்ள 'ஆர்லி' (ORLY) விமான நிலையத்தில் நாள்தோறும் 375 விமானங்கள் வந்துபோகின்றன. பொதுவாக மேனாட்டு விமான நிலையங்களில் எல்லாம் வெளியேறுவோர் தங்குமிடமும், வருவோர் தங்குமிடமும் தனித்தனியாக உள்ளன. பிரயாணிகளின் தணிக்கை (Passenger checking), பயணச் சாமான் தணிக்கை (Luggage checking) என்று தனித்தனியாக வைத்து சீக்கிரத்தில் பிரயாணிகளைக் கொண்டுபோய் வெளியே விட்டுவிடுகிறார்கள். பிரயாணி

கொடுத்துவிடுகிருர். யாராவது வண்டிக்குத் காத்திருக்கிருர்களா என்று பார்த்துவிட்டு, இல்லையென்ருல் உடனே கதவை மூடிவிட்டு அவரே வண்டியை ஓட்டுகின்ருர். அந்நாட்டில் ஒரே ஆள் எல்லா வேலைகளையும் செய்வதால் தொழிலாளர் ஊதியச் செலவு உயர்ந்து இருக்கின்றது. பெர்லினில் ஒருவருக்குக் கிடைக்கும் குறைந்த அளவு ஊதியம் மாதத்திற்கு 600 முதல் 700 மார்க்கு ஆகும். சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை அவர்களுக்கு விடுமுறை. பணிபுரிவோருக்கு நாளொன்றுக்கு ஒரு மணி நேரத்திற்கு $2\frac{1}{2}$ முதல் 3 மார்க்கு வரை ஊதியம் கொடுக்கப்படுகின்றது. அடிப்படை ஊதியம் (Basic wages), வட்டாரப் படி (Locality Allowance) ஒரு குழந்தைக்கு மாதம் ஒன்றுக்கு 50 மார்க்கு வீதம் குழந்தைப்படி (Child Allowance) என்று கொடுக்கின்ருர்கள். யாருக்கும் 700 மார்க்குக்குக் குறைவாக ஊதியம் இருக்காது. உயர்ந்த பட்சமாக ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு 2,500 முதல் 2,700 மார்க்கு வரை ஊதியம் கிடைக்கின்றது.

வேலைக்கு எடுக்கும்போது ஊழியர்களை இரண்டு பிரிவாகப் பிரித்து எடுக்கின்ருர்கள். சாதாரண பிரிவு (Academic Group) தொழில் நுட்பப் பிரிவு (Technical Group) என்று இருக்கின்றன. கல்வித் தகுதிகளுக்குத் தக்கவாறு ஆட்களை எடுக்கின்ருர்கள். பணிக்கால அளவிற்கேற்ப சம்பளத்தை நிர்ணயிக்கின்ருர்கள். எல்லோருக்கும் நல்ல வருமானம் கிடைக்கின்றது, ஜெர்மனியில் இரண்டு மூன்று வேலைகளை ஒருவரே பார்ப்பதுபோல், இலண்டனிலும் கூட தொடர்புடைய பல வேலைகளை ஒருவரே கவனித்துக்கொள்கின்ருர். இதற்கு ஒரு உதாரணம்:

முன்பு நம் மாநிலத்தில் கலெக்டராக இருந்த திரு. பணிக்கர் அவர்களுடைய வீட்டிற்கு (இலண்டனில்) சென்றிருந்தேன். அவருடைய வீட்டுத் தொலைபேசி பழுதடைந்துவிட்டது. அதைப் பழுதுபார்த்துச் சரிசெய்ய ஒருவன் வந்தான். அவன் நன்ருக உடுத்திக்கொண்டு தானே காரை ஓட்டிக்கொண்டு வந்திறங்கினுன். 'எங்கு பழுதுபார்க்க வேண்டும்?' என்று கேட்டவுடன், 'மூன்ருவது மாடியில்' என்று வீட்டில் உள்ளவர்கள் சொன்ஞர்கள். உடனே அவன் தன் உடையை மாற்றிக் கொண்டு மாடிக்குச் சென்ருன். வேலை முடிந்தவுடன் வீட்டாரிடம் சொல்லிவிட்டுத் தன் உடையை மறுபடியும் மாற்றிக்கொண்டு வண்டியை ஓட்டிக்கொண்டு சென்றுவிட்டான். அவனுக்கு உதவியாளர் ஒருவரும் உடன் வரவில்லை. நாம் வகிக்கும் பதவியின் உயர்வை நாம் எந்நேரமும் எண்ணிக்கொண்டேயிருக்கின்ருேம். உடல் உழைப்பின் உயர்வை இன்றும் போற்றத் தெரிந்து கொள்ளவில்லை. அங்கெல்லாம் ஒருவருடைய முகத்தைப் பார்த்தோ, உடையைப் பார்த்தோ அவரை மதிப்பிடுவதில்லை. எல்லோருமே ஒரே மாதிரி உடை அணிந்துகொள்கின்ருர்கள். உழைப்புக்கும் திறமைக்கும் தான் மதிப்பு அளிக்கப்படுகிறது மேனுடுகளிலே.

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்
வீணில்
உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்"

என்ற பாரதியின் வாக்கு இன்று மேற்கு ஜெர்மனியில் அமுலாக்கப்படுவதை நான் நேரில் கண்டு வியந்தேன்.

நாங்கள் மேற்குப் பெர்லினிலிருந்து ஹனேவருக்கு விமானத்தில் போனேம். ஹனேவர் லோயர் சாக்ஸனி என்ற மாநிலத்தின் தலைநகராகும். இங்கு வேளாண்மை அமைச்சகத்திற்குச் சென்று உயர்மட்ட அதிகாரிகளுடன் விவசாயத் திட்டங்களைப் பற்றி விவாதித்தோம். அங்கு மாட்டப்பட்டிருந்த தேசப்படமொன்றில் 'எம்டன்' என்ற கடற்கரையோரக் கிராமத்தின் பெயரைக் கண்டேன். எம்டன் என்றவுடன், அப்பெயர் கொண்ட கப்பல் ஒன்று சென்னைத் துறைமுகத்தை முதலாவது உலகப் போரில் தாக்கியது நினைவுக்கு வந்தது. நாங்கள் ஆரியர்கள், நாங்கள்தான் மனித இனத்தில் உயர்ந்தவர்கள் என்று பெருமை பேசிக்கொண்டிருந்த ஜெர்மானிய மக்கள் இன்று ஹிட்லரைப்பற்றி என்ன நினைக்கின்ருர்கள் என்று தனிமையில் கேட்டுப் பார்த்தேன். அதற்கு அவர்கள், "இப்போதைய சமுதாயத்துக்கு ஹிட்லரைப்பற்றித் தெரியாது. ஏதோ கதைபோன்று படிக்கின்ருர்கள்" என்று சொன்ஞர்கள். பொதுவாக இன்றைய ஜெர்மானிய மக்களுக்கு அவர்மீது அவ்வளவு திருப்தி இல்லை. ஒருவேளை அவர் வெற்றி பெற்றிருந்தால் வேறுவிதமாக இருக்கலாம். உலகப் போரில் அவர்கள் தோற்றுப் போனதற்கும் நாடு பிளவுபட்டதற்கும் ஹிட்லர் தான் காரணம் என்றும், இன்றேல் நிலைமை சரியாக இருந்திருக்க முடியும் என்றும் அவர்கள் எண்ணுகிருர்கள். ஆனுல் அவர்களுக்கு ஜெர்மானியர் என்ற தேசிய உணர்ச்சி மிகத் தீவிரமாக இருக்கின்றது. அவர்கள் நாட்டின் சூழ்நிலையே இவ்வுணர்ச்சிக்குக் காரணம் ஆகும். அவர்களுக்கு ஒரே மாதிரியான உடை, ஒரே மாதிரியான உணவு, ஒரே மாதிரியான பழக்க வழக்கங்கள். அவர்களில் பெரும்பாலோர் பிராட்டஸ்டண்டுகள்தான். அங்குள்ள மக்களிடையே ஒரே இனம், ஒரே மொழி, ஒரே பழக்கவழக்கம் என்ற நிலை இருக்கின்றது. அரசியலிலும் அவர்களிடையே தீவிரமான பிளவு இல்லை. கொள்கை அளவிலும் தீவிரமான வேறுபாடு இல்லை. எனவேதான், அவர்கள் எல்லோரும் ஜெர்மனியை, இரண்டாகப் பிரித்து வைத்திருப்பது தவறு என்று நினைக்கின்ருர்கள்.

"நாங்கள் ஒன்றுபட வேண்டும்;
ஒன்றுபடத்தான் போகிருேம்.
எப்போதென்று தெரியவில்லை."

இந்த ஒருமை உணர்ச்சிதான் அவர்களிடம் அதிகமாகக் காணப்படுகின்றது.

ரைன் நதி ஸ்விட்சர்லாந்தில் தோன்றி ஜெர்மனியை இரண்டாகப் பிளந்துகொண்டு ஹாலந்தில் கடலைச் சேருகின்றது. அந் நதி ஸ்விட்சர்லாந்து, பிரான்சு, ஜெர்மனி,

லக்ஸம்பர்க், ஹாலந்து ஆகிய ஐந்து நாடுகளுக்கும் பொதுவாக இருக்கின்றது. அந்த நதியின் மூலம் செய்தித் தொடர்பு, போக்குவரத்து ஆகியவற்றையும், பராமரிப்பு, ஆட்சிப் பொறுப்பு போன்றவற்றையும் ஐந்து நாடுகளும் சேர்ந்து ஒரு குழு (The Rhine Commission) மூலம் மேற்பார்வை செய்கின்றன. ஐந்து நாட்டுக் கப்பல்களும் அந்நதியில் உலாவுகின்றன. (சென்ற ஆண்டில் மட்டும் இந்நதிக் கரையில் அமைந்திருக்கும் கோப்லன்ஸ் (Koblenx) ரேவுத் துறையை 1,27,689 கப்பல்கள் தொட்டுச் சென்றன!) சென்ற உலகப் போரின்போதுகூட இவ்வைந்து நாடுகளும் இந் நதியின் நிர்வாகத்தைப் பொறுத்தமட்டில் ஒன்றுசேர்ந்து தான் பணியாற்றின. அந்தப் போக்குவரத்து, ஆட்சிப் பொறுப்புப் பணிகளில் யாதொரு தடையும் ஏற்படவில்லை. இந்நாடுகளுக்கிடையே நிலவிய நல்லெண்ணமும், பொறுப்புணர்ச்சியுமே அந் நாடுகள் ஒன்று சேர்ந்து பணியாற்ற உதவின. சக வாழ்வின் உண்மைத் தத்துவத்தையும் இது எடுத்துக் காட்டுகின்றது. ஒன்றுபட்டுச் செயலாற்றும் மனப்பான்மை மிகவும் இன்றியமையாதென்பதை அங்குள்ள மக்கள் உணர்கின்றார்கள்.

நாங்கள் ஹாலந்து எல்லைவரை சென்றோம். வட ஜெர்மனியில் பல கிராமங்களுக்குச் சென்றோம். அங்குள்ள பஸ்கள் விமானத்தைப் போல வசதியாக இருக்கின்றன. பயணிகளின் சாமான்கள் முழுவதும் வைக்க பஸ்ஸில் இடமிருக்கின்றது. வெயில் அடித்தால் திரைகளை மூடிக் கொள்ளலாம். மேற்கூரையும் பக்கச்சரிவுகளும் கண்ணாடியால் மூடப்பட்டிருப்பதால் எப்பக்கமும் நன்றாகப் பார்க்க முடிகிறது. பஸ்ஸில் வெப்பத் தணிப்பு வசதியும், 'மைக்' மூலம் பேசும் வசதியும் பொருத்தப்பட்டிருக்கின்றன. பல நூறு மைல்கள் நாங்கள் பஸ்ஸில் பிரயாணம் செய்தும், அலுப்பு, களைப்பு தோன்றவில்லை.

கிராமங்களிலுள்ள உணவு விடுதிகள் நம் நாட்டில் பல நகரங்களிலுள்ள உணவு விடுதிகளைவிட நன்றாக இருக்கின்றன. அங்கெல்லாம் சாலைகளில் கண்டபடி கார்களை நிறுத்தி வைக்க முடியாது. அதற்கென குறிக்கப்பெற்றுள்ள இடங்களில்தான் கார்களை நிறுத்திவைக்கலாம். இலண்டனிலும் கார்களைக் கண்ட இடங்களில் நிறுத்தி வைக்க முடியாது. இடமில்லாவிட்டால், அங்கு இடம் கிடைக்கும் வரைக்கும் பலமுறை அங்கேயே காரில் சுற்றிக் கொண்டிருந்து இடம் கிடைத்ததும் காரை நிறுத்துகின்றார்கள். கார் நிறுத்த கால் மணி நேரத்திற்கு ஆறு பென்ஸ் வீதம் கட்டணம் விதிக்கின்றார்கள். ஜெர்மனியில் இக் கட்டணம் இந்திய நாணயத்தில் சொல்ல வேண்டுமானால் 20 பைசா அளவிற்கு வருகின்றது. குறிப்பிட்ட நேரத்திற்குப் பிறகு, அரைமணி நேரத்திற்கு ஒருமுறை இவ்வளவு கட்டணம் என்று அபராதம் போல் விதித்து, அதற்குரிய சீட்டு ஒன்றைக் காரில் செருகிவைத்து விடுகின்றார்கள். காரின் எண்ணையும் குறித்துக்கொள்கின்றார்கள். கார் உரிமையாளர்களும் அக்கட்டணத் தொகையைச் செலுத்திவிடுகின்றார்கள். மாறாக, யாரும் அந்தச் சீட்டை எடுத்துக் கிழித்துப் போட்டுவிடுவதில்லை. அங்கெல்லாம் மக்களிடையே நல்லதொரு ஒழுங்குமுறை நிலவுகின்றது. 7000 மக்கள் தொகை கொண்ட கிராமங்களில்கூட காரை நிறுத்திவைக்க இடம் ஒதுக்கப்பட்டிருக்கின்றது.

சாலைகளும் மற்றப் பொதுவிடங்களும் மிகமிகத் தூய்மையாக விளங்குகின்றன. விளக்குக் கம்பங்களிலும் இதர கம்பங்களிலும் உலோகத்தாலான அல்லது பிளாஸ்டிக்கால் செய்யப்பட்ட பெட்டிகள் பொருத்தப்பட்டிருக்கின்றன. சாலையில் என்னென்னவோ பொருள்கள் இயந்திரங்கள் மூலம் விற்கின்றார்கள் என்று குறிப்பிட்டேன். பலவிதமான தின்பண்டங்களும் விற்கப்படுகின்றன. இவற்றை உபயோகித்த பிறகு அல்லது உண்ட பிறகு, கையில் நிற்கும் காகிதத்தை அல்லது இதர கழிவுப் பொருளை முதியோர் முதல் சிறுவர் வரை எல்லோரும் மேற்சொன்ன பெட்டிகளில் அல்லது கூடைகளில்தான் எறிவார்களே தவிர, தப்பித் தவறிக்கூட, கீழே போடமாட்டார்கள். என்னே அவர்களது கட்டுப்பாடு! தூய்மை உணர்ச்சி!! இச்சிறந்த பழக்கம் கிராமப் புறங்களிலும் ஆழ்ந்து நிலவுகிறது.

விளைந்தால் மட்டும் போதுமா?

பசிக்கின்ற எல்லா வயிறுகளுக்கும் குறைவில்லாமல் உணவளிக்க வேண்டும். இதுவே விவசாயப் பெருக்கத் திட்டங்களின் தத்துவம். நெல்லோ சிறுதானியங்களோ எதற்கும் நெற்றி வியர்வையை நீராக வழங்கி விளைச்சல் காண்கிறோம். இப்படி அரும்பாடுபட்டு விளைவிக்கும் தானியங்களை நல்ல முறையில் சேமிக்கத் தவறுவதால் மட்டும் எவ்வளவு வீணாகிறது தெரியுமா? பாதுகாப்பற்ற சேமிப்பினால் புழு, பூச்சி, எலி முதலியவற்றின் சேதத்தால் மட்டும் சுமார் 30 லட்சம் டன் தானியங்கள் வீணாகின்றன. பாழாகும் இந்த தானியங்களின் மதிப்பு ரூ. 13, கோடி. இது நம் நாட்டின் மொத்த விளைச்சலில் 5 சதவிகிதம் எனக் கணக்கிடப்பட்டிருக்கிறது.

சரியான, விஞ்ஞான முறைச் சேமிப்புகளின் மூலம் இந்த சேதத்தைத் தவிர்த்தால் கிடைக்கும் பலன்:— சுமார் 22 லட்சம் மக்களுக்கு ஓராண்டுக்கு குறைவில்லாத உணவு.

தேசீய நிரூபணங்கள்*

E. G. சிவசாமி. கூட்டு விவசாய நெறியாளர் (விரிவினை) சென்னை.

"மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க்கெல்லாம் உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்று உழவர் பெருமக்களைத் தெய்வத்திற்கு இணையாகப் போற்றினர் தமிழ் பெருங்காப்பியம் இயற்றிய புலவர் ஒருவர். மனிதனுக்கு முதல் தேவை உணவு. மக்கள் தொகை மிகவும் வேகமாக அதிகரித்து வரும் சூழ்நிலையில் ஒவ்வொருவருக்கும் போதிய உணவு அளிப்பது மிகவும் சிரமமான செயலே. ஆயினும் பாட்டுக்கொரு புலவன் பாரதியார் வீராவேசத்துடன் கூறிய கூற்று "தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் ஜெகத்தினை அழித்திடுவோம்" என்பது நமது கடமையை வற்புறுத்துகிறது. 10 மூட்டை நெல் விளைந்த நிலத்தில் 11 மூட்டைகள் மட்டும் விளைந்தால் உணவுப் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது. அதே வயலில் 20 மூட்டைகளாவது அறுவடை செய்வதே நம் குறிக்கோளாக இருக்க வேண்டும்.

விளைவை இரண்டு மூன்று மடங்காகப் பெருக்குவது சாத்தியம்தானா? ஒரு ஹெக்டர் நிலத்தில் 10 டன் மகசூல் பெற முடியுமா? (ஒரு ஹெக்டர் சுமார் $2\frac{1}{2}$ ஏக்கருக்குச் சமம்.) இந்தக் கேள்விகளுக்குச் சில ஆண்டுகளுக்கு முன்னர் முடியாது என்ற பதில்தான் கிடைத்திருக்கும். ஆனால் கடந்த 2 ஆண்டுகளில் விவசாயத்தில் ஒரு புரட்சிகரமான திருப்பம் ஏற்பட்டுள்ளது. உயர் விளைச்சல் ரகவீரிய ஒட்டு விதைகளை உபயோகித்து போதிய உரமும் நீர்ப்பாசனமும் கொடுத்து பயிர் பாதுகாப்பு முறைகளையும் தவறாமல் கையாண்டால் விளைச்சலை இரண்டு, மூன்று மடங்காகப் பெருக்கலாம் என்று ஆராய்ச்சிப் பண்ணைகளில் பரிசோதனைகள் மூலம் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த நவீன விவசாய முறைகளைக் கையாண்ட சில விவசாயிகள் தமிழ் நாட்டு விவசாயச் சரித்திரத்திலேயே கண்டிராத அளவு மகசூல் நெல், சோளம், கம்பு, ராகி முதலிய பயிர்களில் அடைந்துள்ளார்கள்.

இந்த அளவு உயர்ந்த விளைச்சல் எல்லா விவசாயிகளாலும் அடைய முடியுமா என்று சந்தேகம் எழுவது இயல்பே! ஏனெனில் நிலங்களின் வளமும், தன்மையும் இடத்திற்கு இடம் மாறுபடுகிறது. சாகுபடி முறைகளில் சிறுசிறு மாறுதல்களும் மகசூலில் அதிக வித்தியாசத்தை ஏற்படுத்தி விடுகிறது. எனவே விவசாயிகள் அனைவரும் உயர்ந்த விளைச்சலை அடைய வேண்டுமானால் சாகுபடி முறைகளில் விஞ்ஞான ஆராய்ச்சிகளின் முடிவுகளை விவசாயிகளுக்கு கண் கூடாகக் காட்ட வேண்டும், விஞ்ஞானிகளும் விவசாயிகளும் நேரடித் தொடர்பு கொள்ள வேண்டும் என்ற நோக்கத்துடன் மத்திய அரசாங்க உணவுத்துறை 1965-66-ம் ஆண்டு முதன் முதலாக தேசீய நிரூபணங்களை நமது நாட்டின் பல மாநிலங்களிலும் பரவலாக குடியானவர்களின் நிலங்களிலேயே விஞ்ஞானிகளின் நேரடி பொறுப்பிலேயே போட்டுக் காட்டுமாறு ஏற்பாடு செய்தது.

தமிழ் நாட்டில் 1965-66-ம் ஆண்டில் கோவையில் விவசாயக் கல்லூரியின் சுற்றுப்புறங்களிலும், தஞ்சை ஜில்லாவில் ஆடுதுறை ஆராய்ச்சிப் பண்ணையிலும், திருநெல்வேலி மாவட்டத்தில் கோவில்பட்டி, அம்பாசமுத்திரம் ஆராய்ச்சிப் பண்ணைகளிலும், கோவை மாவட்டத்தில் பவானிசாகர், சத்தியமங்கலம் அரசினர் ஆராய்ச்சிப் பண்ணைகளிலும், செங்கல்பட்டு ஜில்லாவில் திரூர் குப்பம் நெல் ஆராய்ச்சி நிலையங்களிலும் செயல்முறை நிரூபணங்கள் போடப்பட்டன. இந்த நிரூபணங்களில் ஒவ்வொரு பயிருக்கும் பயிரிடும் இடத்திற்குத் தக்கபடி என்ன மகசூல் கிடைக்க வேண்டுமெனக் குறியளவு நிர்ணயிக்கப்பட்டது.

நெற்பயிரில் கோ. 25, கோ. 30, ஆடுதுறை–27, ஏ.எஸ்.டி–1 போன்ற ரகங்களில் 12 நிரூபணங்களும், சிறுதானியப்பயிர் வகைகளாகிய கோ. 7, ராகி, எச்.பி. 1 கம்பு, எக்ஸ்–3, கம்பில் 12 நிரூபணங்களும் போடப்பட்டதில் ஒவ்வொரு ரகத்திலும் எதிர்பார்க்கப்பட்ட குறியீட்டளவைவிட அதிக மகசூல் கிடைத்தது. இவைகளில் 1965–66-ல் கிடைத்த குறிப்பிடத்தக்க மகசூல் விவரங்களாவன :—

கோ–7 ராகியில் ஹெக்டருக்கு 5,202 கிலோவும்,

எச்.பி–1 கம்பில் ஹெக்டருக்கு 4,375 கிலோவும்.

ஏ.எஸ்டி–1 நெல் ரகத்தில் ஹெக்டருக்கு 5,905 கிலோவும்,

ஆடுதுறை–27-ல் ஹெக்டருக்கு 5,503 கிலோவும்,

கோ–25 நெல்லில் ஹெக்டருக்கு 4,750 கிலோவும்,

கோ–30 நெல் ரகத்தில் ஹெக்டருக்கு 4,708 கிலோவும் கிடைத்தன. சென்னை மாநிலத்தில் எல்லாப் பயிர்களிலும் முதல் தொடர் நிரூபணங்களின் மூலம் கிடைத்த புள்ளி விவரங்களைக் கொண்டு பார்த்தால் நம் விவசாயிகள் அனைவரும் சீரிய சாகுபடிக்கான கட்டுக்கோப்பான முறைகள் அனைத்தையும் முறையாகக

* 20-12-66 அன்று திருச்சி வானொலியில் நிகழ்த்திய உரை.

கையாண்டால் தற்போது கிடைக்கும் மகசூலைவிட நிச்சயமாக இரட்டிப்பு மகசூல் பெறமுடியும் என்பது தெளிவாகிறது.

அமோக விளைச்சல் கொடுக்கக்கூடிய ரகங்களைப் பயிரிட்டு உணவு உற்பத்தியை அதிகரித்து விவசாயத்திலேயே ஒரு புதிய திருப்பத்தை உண்டுபண்ண வேண்டிய தற்போதைய சூழ்நிலையில் இந்த தேசிய நிரூபணங்கள் மிகவும் அத்யாவசியத் தேவையாகும். இந்த நிரூபணங்களை எல்லா மாவட்டங்களிலும் பரவலாக விஸ்தரிப்பதற்காக நடப்பு ஆண்டில் ஒரு விரிவான திட்டம் தயாரிக்கப்பட்டதோடல்லாமல் தேசிய நிரூபணங்கள் நல்ல முறையில் இயக்குவதற்கும் விஸ்தரிப்புப் பணியில் ஈடுபட்டுள்ள அலுவலர்களுக்கும் இதில் முக்கிய பொறுப்பும் கொடுக்கப்பட்டிருக்கிறது. விவசாயிகளும் திறமையாக உழைத்து அதிக விளைச்சலைப் பெற்று தங்கள் வருவாயை அதிகரித்துக் கொள்ளவும் பழகிக் கொள்வார்கள்.

இந்த ஆண்டு சர்வதேச அரிசி ஆண்டாகக் கொண்டாடப்படுவதால் 1,000 தேசிய நிரூபணங்கள் இந்தியா முழுவதிலும் போட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. சுமார் 120 தேசீய நிரூபணங்கள் நமது சென்னை மாநிலத்தில் நிறுவப்பட இருக்கிறது என்பதை நான் கூற விரும்புகிறேன். இவை நெற்பயிரில் 90-ம், சோளத்தில் 9-ம் கம்புப் பயிரில் 8-ம், ராகியில் 10-ம், ஒட்டு மக்காச் சோளத்தில் 3-ம், ஆக மொத்தம் 120 நிரூபணங்கள் போட திட்டமிடப்பட்டிருக்கிறது. சற்று முன்பாக நான் கூறியபடி இந்த தேசிய நிரூபணங்கள் பெரும்பாலும் மாவட்ட விவசாய அலுவலர்கள் பொறுப்பிலும் ஒரு சில ஆராய்ச்சிப் பணியாளர்களின் பொறுப்பிலும் விடப்பட்டிருக்கின்றன. இந்த நிரூபணங்களுக்கு அதிக முக்கியத்துவமும் விளம்பரமும் கொடுப்பதே இதன் நோக்கம்.

தமிழ் நாட்டில் இதுவரைக்கும் முதல் பருவத்தில் (காரிப் பருவத்தில்) ஆடுதுறை—27 நெல்லில் முப்பத்தி எட்டு நிரூபணங்களும், எச்.பி. 1 கம்பில் இரண்டும், எச்.பி. 2 கம்பில் இரண்டும், கோ. 7 ராகியில் இரண்டும், தக்கான மக்காச் சோளத்தில் ஒன்றும், ஆக மொத்தம் 45 தேசீய நிரூபணங்கள் இதுவரையில் போடப்பட்டிருக்கின்றன. அந்த தேசிய நிரூபணங்களில் உள்ள பயிர்களை அதன் பல்வேறு வளர்ச்சிப் பருவங்களிலும், அறுவடை நேரத்திலும் பெருவாரியான விவசாயிகள் பார்வையிடுமாறு செய்ய வயல் தினங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன.

ஆடுதுறை—27 நெல்லைப் பொறுத்தவரை ஹெக்டருக்கு 5,000 கிலோ மகசூல் நிரூபணங்களின் குறிக்கோளாக நிர்ணயிக்கப்பட்டது. ஆடுதுறை—27 நெல்லில் தேசீய நிரூபணங்களில் இதுவரை கிடைத்திருக்கும் மகசூல்களில் வட ஆர்காடு மாவட்டம், வாலாஜா வட்டாரம், அம்மன் தாங்கல் கிராமத்திலுள்ள திரு. சகாதேவ முதலியார் என்பவரின் பண்ணையில் ஹெக்டருக்கு கிடைத்த 7,163 கிலோ மகசூல் மிக அதிகம். நெல் தேசிய நிரூபணங்கள் 22-ல், 7 நிரூபணங்களில் மகசூல் குறியளவாகிய ஹெக்டருக்கு 5,000 கிலோவைவிட குறைந்திருக்கிறது. அப்படியிருந்தும், தமிழ் நாட்டின் 22 நிரூபணங்களின் சராசரி மகசூல் காரீப் பருவத்தில் ஹெக்டருக்கு 5,385 கிலோவாகிறது.

இனி சென்ற ''காரீப'' பருவத்தில் தமிழ் நாட்டில் மற்றப் பயிர்களில் போட்ட தேசிய நிரூபணங்களின் முடிவுகளைப் பார்ப்போம். கோயம்புத்தூர் மாவட்டத்தில் கோ—7 ராகியில் போடப்பட்ட இரண்டு நிரூபணங்களில் மிக உயர்ந்த மகசூலான ஹெக்டருக்கு 4,896 கிலோ கிடைத்துள்ளது. ராகியில் நிரூபணத்தின் மகசூல் குறிக்கோள் ஹெக்டருக்கு 3,000 கிலோதான் என்பதைப் பார்க்கும் பொழுது இதன் சிறப்பு விளங்கும். எச்.பி—2 கம்பில் குறியீட்டளவு ஹெக்டருக்கு 2.000 கிலோதான்; ஆனால் உள்ளபடியே கிடைத்த அதிகபட்ச மகசூல் ஹெக்டருக்கு 5,231 கிலோ. எச்.பி. 1 கம்பில் வட ஆற்காடு மாவட்டம் சோளிங்கர் வட்டாரத்தில் ஹெக்டருக்கு 4,446 கிலோ மகசூல் கிடைத்திருக்கிறது. சேலம் மாவட்டத்தில் தக்காண மக்காச் சோளத்தில் போட்ட ஒரு நிரூபணத்தில் குறியளவு ஹெக்டருக்கு 4,000 கிலோ என்றிருக்கும் பொழுது மகசூல் ஹெக்டருக்கு 6,965 கிலோ கிடைத்தது.

இந்த நிரூபணங்களிலிருந்து நாம் தெரிந்துகொள்ள வேண்டிய உண்மை மிக முக்கியத்துவம் வாய்ந்தது. இந்த நிரூபணங்கள் நமது விவசாயிகள் தொன்றுதொட்டு பின்பற்றி வரும் பழைய விவசாய முறைகளை கைவிட்டு, புதிய கருத்துக்களை ஏற்று சீரிய முறையில் விவசாயம் செய்ய முற்பட்டால் நமது உற்பத்தியை பெருமளவு உயர்த்திவிட முடியும் என்பதை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கின்றன. வெறுமனே விதையை விதைத்து தண்ணீரை மட்டும் பாய்ச்சிவிட்டால் எல்லாமே சரியாக நடந்துவிடும், உற்பத்தி கிடைத்துவிடும் என்று நினைத்த நாட்கள் மறைந்து விட்டன.

கிராம சேவகர்களுக்கும், விவசாய விஸ்தரிப்பு அலுவலர்களுக்கும் பயிற்சி கொடுக்கும் திட்டம் அவசியம் என்பது மட்டுமல்ல, முக்கியமாக தீவிர சாகுபடியில் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு விவசாயிக்கும் பயிற்சி அளித்தல் மிகவும் அத்தியாவசியமானது என்று நான் சொல்வேனேயானால் அது மிகையாகாது. இந்த நோக்கத்துடன்தான் ஒரு பெரிய அளவில் பயிற்சித் திட்டத்தோடு இணைந்த செயல்முறை நிரூபணங்கள் ஏற்படுத்தப்பட்டன. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கும், விவசாயப் பெண்களுக்கும், விவசாயிகளின் மகன்களுக்கும் அவரவர்களின் தேவைக்கேற்ப இரண்டு வாரத்திலிருந்து ஒரு ஆண்டு காலம்வரை விவசாயப் பள்ளிகள் மூலம் பயிற்சியளிப்பதற்காக நமது சென்னை மாகாணத்தில் 4 அல்லது 5 விவசாயிகள் பயிற்சி நிலையங்கள் அமைக்க திட்டமிடப்பட்டிருக்கிறது.

விவசாயிகளே நீங்கள் விவசாயத்துறையிலேயே புது புதுக் கருத்துக்களை ஏற்று நவீன சாகுபடி முறைகளைக் கையாண்டு ஒரு சீரிய முன்னேற்றத்தையும் புதிய

திருப்பத்தையும் கொண்டுவர முயற்சி செய்யவேண்டும் என்று உங்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். தேசிய நிரு பணங்கள் உற்பத்தியைப் பெருக்கும் முயற்சியில் நம் விவ சாயிகளை ஊக்குவித்து முன்னேற்றப்பாதைக்கு வழியைக் காட்டியிருக்கின்றன. நான் நிருபணங்களை சீறிய முறையில் போட்ட விவசாயிகளாகிய உங்களை மிகவும் வற்புறுத்திக் கேட்டுக்கொள்வது என்னவென்றால் நீங்கள் இராமத்தி லுள்ள மற்ற விவசாயிகளையும் ஊக்குவிக்க எல்லா முயற்சி களையும் எடுத்துக் கொள்ள வேண்டும். இப்பொழுது நாம் புதிதாக புகுந்திருக்கிறோமே.அதிகஉரத்தை ஏற்று அமோக விளைச்சல் தரக்கூடிய பயிர் ரகங்களாகிய ஏ.டி.டீ.-27, டி.என்.-1, தைனன்-3 போன்ற நெல் ரகங்கள், சி.எஸ். எச்.-1, சி.எஸ்.எச்.-2 சோள ரகங்கள், எச்.பி.-1, எச்.பி-2 கம்பு ரகங்கள், தட்சிண வீரிய மக்காச் சோளம் போன்ற வீரிய ஒட்டு பயிர்களைச் சாகுபடி செய்வதில் எல்லாவித கட்டுக்கோப்பான நவீன சாகுபடி முறைகளைக் கையாளுதல் மிகமிக அவசியமாகும். இது ஒன்றுதான் பயிர் விளைச்சலை பன்மடங்கு பெருக்கி, கோடான கோடி மக்களைப் பசிப் பிணியிலிருந்து காப்பாற்றக்கூடிய வழியாகும். சென்னை மாநிலம் ஏற்கெனவே விவசாய உற்பத்தியைப் பன்மடங்கு பெருக்குவதில் ஒரு முன்னோடி ராஜ்யமாகத் திகழ்கிறது. இப்பொழுது நமக்கு அத்தியாவசியத் தேவை என்ன வென்றால் இதே உணவு உற்பத்திப் பெருக்க முயற்சி பெருவாரியான எல்லா விவசாய மக்களிடையேயும் பரவ வேண்டும்.

பொதுவாக இந்த தேசிய நிருபணங்களினால் ஒரு புத்துணர்ச்சி தோன்றியுள்ளது. அமோக விளைச்சலை மிகமிகக் குறுகிய காலத்தில் பெற இவைகள் வழிகாட்டு கின்றன. 'நவீன விவசாயம்' என்னும் முற்றிலும் மாறு பட்ட அனுபவத்திற்கு நிருபணங்கள் நம்மை அழைத்துச் செல்கின்றன. அமோக விளைச்சல் தரும் ரகங்களைச் சாகுபடிச் செய்ய முழு மூச்சுடன் ஈடுபட்டிருக்கும் இந்த நேரத்தில் நவீன விவசாய முறைகளைக் கையாளுவதால் ஏற்படும் நன்மைகளை விளக்கிக் கூறவும் உங்களை ஊக்கப் படுத்தவும் இந்த தேசிய நிருபணங்கள் மிகவும் பிரயோசனமாக அமையும்.

"ஜெய்ஹிந்த"

1967-ம் வருடம் மார்ச்சு மாதத்தில் அகில இந்திய ரேடியோ திருச்சி நிலையத்திலிருந்து ஒலி பரப்பப்படும் விவசாய சம்பந்தமான நிகழ்ச்சிகளின் விவரம்

2—3—67 வியாழன்

கீரை வகைப் பயிர் செய்வோம்.	திரு. எஸ். சுந்தரராஜன்.

3—3—67 வெள்ளி

தஞ்சை நெல் தரிசு நிலங்களில் காய்கறி சாகுபடி.	திரு. ஏ. சுப்ரமணியம், பயிர் நிபுணர், ஆடுதுறை.

7—3—67 செவ்வாய்

விவசாய உற்பத்தியில் இராம நல ஊழியர்களின் பங்கு.	திரு. பி. கே. சிவசுப்பிரமணியம்.

10—3—67 வெள்ளி

கரும்புக்கு போதிய உரமிடுங்கள்.	திரு. வி. ஜி. வெங்கட்ரமண ராவ், மாநில கரும்பு அலுவலர், சென்னை.

16—3—67 வியாழன்

காவேரி நீர்ப் பாசனம் ..	திரு. கே. டி. கணபதி, திருச்சி.

17—3—67 வெள்ளி

கோடை மிளகாய் ஒரு லாபகரமான பயிர்.	திரு எச். பாலசுப்பிரமணியம், மாவட்ட விவசாய அலுவலர், தென்காசி.

21—3—67 செவ்வாய்

வீரிய விதை உற்பத்தி	திரு. கந்தசாமி, கோவை.

24—3—67 வெள்ளி

மலைப் பிரதேசங்களில் பேரிக்காய் சாகுபடி.	திரு. வி. சம்பத், உதவி தோட்டக்கலை நிபுணர், கொடைக்கானல்.

31—3—67 வெள்ளி

பூசணங்களும் அவற்றால் ஏற்படும் நோய்களும் தடுப்பு முறைகளும்.	திரு. சி. எஸ். கிருஷ்ணமூர்த்தி, பூசண நிபுணர், கோவை.

அமோக விளைச்சலுக்கு
இந்திய ஜப்பானிகா ஒட்டு நெல்
கல்ச்சர் 2410

சி. சண்முகம், பி. எஸ்ஸி (விவசாயம்), மாவட்ட விவசாய அலுவலர் (காஞ்சிபுரம்).
அ. வி. வின்செண்ட், பி. எஸ்ஸி (விவசாயம்), விவசாய விஸ்தரிப்பு அலுவலர் (பூவிருந்தவல்லி).

கல்ச்சர் 2410—நெல் நவரைக்கேற்றது

நவரைப் பட்டத்திற்கு ஒட்டுநெல் கல்ச்சர் 2410, அதிக விளைச்சல் தரும் குறுவை ரகம். பூவிருந்தவல்லி பஞ்சாயத்து யூனியனில் பல ஏக்கர்களில் பயிரிட்டுப் பார்த்ததில் ஏக்கர் மகசூல் 55 சதவிகிதம் வரை கல்ச்சர் 2410 திஞல் அதிகம் கிடைத்தது. ஏடீடி 27 நெல்லைப்போல் நல்ல விளைச்சல் திறன் கொண்ட கல்ச்சர் 2410 ரகமும் உற்பத்தியை அதிகரிக்கப் பெரிதும் உதவும் எனலாம்.

கல்ச்சர் 2410 ரகத்தின் சிறப்புகள்

1. ஏடிடீ 27–ஐப்போல் (ஜப்பானிகா—இண்டிகா) ஒட்டு நெல்.
2. நவரைப் பட்டத்திற்கு உகந்தது.
3. அதிக உரம் ஏற்றக்கூடியது.
4. இச்சிலி சம்பா போன்று சன்னமானது.
5. 115—120 நாட்கள் வயதுடையது.
6. 1800 கிலோ (25—28 மூட்டைகள்) விளைச்சல் தரக்கூடியது.
7. நாரின் 6 ஐயும் ஜிஈபீ 24 ரகத்தையும் சேர்த்த ஒட்டு.

மேற்கண்ட சிறப்பியியல்புகள் கொண்ட கல்ச்சர் 2410 பூவிருந்தவல்லியில் திரு கண்ணப்பன் என்பவர் நிலத்தில் பரிட்சார்த்தமாகப் போட்டு விளைவித்த அனுபவத்தைப் படியுங்கள்.

பூவிருந்தவல்லி பஞ்சாயத்து யூனியன் திருமழிசை கிராமத்தில் நவரைப் பட்டத்தில் கல்ச்சர் 2410 பயிரிடப் பட்டது.

சென்னை-பெங்களூர் சாலையில் செல்வோர் திரு கண்ணப்ப முதலியார் நிலத்தில் தலைநிமிர்ந்து செழிப்பாக வளர்ந்த கல்ச்சர் 2410 நெல் பயிரைப் பார்த்து வியந்த வண்ணம் சென்றனர்.

நவரைப்பட்டத்தில் ஒட்டுக் இச்சிலி முதலிய நெல் ரகங்களுக்குப் பதிலாக பயிரிட ஒரு புதிய நெல் வந்திருக்கிறது என்று கூறியபோது திரு. கண்ணப்ப முதலியார்

திரு. கண்ணப்ப முதலியார் 2 ஏக்கர் நாற்றங்கால் அருகில் பெருமிதத்துடன் நிற்கிருர்.

மிகவும் தயக்கத்துடன்தான் பயிரிடச் சம்மதம் தெரிவித்தார். இந்திய இச்சிலி சம்பாவுடன் (ஜி.இ.பி. 24) ஜப்பானிய நெல்லை (நாரின் 6) ஒட்டு சேர்ந்து உறுவானதே கல்ச்சர் 2410.

இரண்டு ஏக்கரில் 40 வண்டி தொழு உரமிட்டு பாத்தி நாற்றங்கால் தயார் செய்து 360 கிலோ விதையை நாற்று விட்டபோது முதலியாரின் மனதில் சிறிதும் திருப்தி ஏற்படவில்லை.

இரண்டு ஏக்கரில் நாற்று விட்டால் 60 ஏக்கரில் நடலாம். ஆனல் 360 கிலோ விதையில் 10 ஏக்கர்கூட



கிழரமிடல்

நடமுடியாதே என்று தனியாக ஒட்டுக்கிச்சிலி வேறு அவர் முறைப்படி விட்டார்.

விதையை கிலோவிற்கு 2·2 கிராம் அக்ரசானுடன் கலந்து 13-1-66 அன்று நாற்றுவிடப்பட்டது. 30-1-66-ல் நாற்றங்காலுக்கு ½ கிலோ அமோனியம் சல்பேட் தூவப்பட்டது. 1-2-66-ல் பாரதியான் + சினப் மருந்து கலவை 0.05% நாற்றங்காலுக்கு தெளிக்கப்பட்டது.

நல்ல கரும் பச்சையுடன் செழித்து வளர்ந்த நாற்றுகளை பார்த்த பின் தான் முதலியாரின் மனதில் ஊக்கம் பிறந்தது.



சால்நடவு

28 நாட்கள் வயதான நாற்றுகளைப் பறித்து 20 ஏக்கர் நட்டபின் சுமார் 5 ஏக்கருக்கு தேவையான நாற்றுகள் மீதமாயின. முதலியார் மீதி நாற்றுகளுடன் ஒட்டுக் கிச்சிலி நாற்றுகளையும் சேர்த்து விற்க நேர்ந்தது.

நடுவதற்காக நிலத்தை டிராக்டர் மூலம் தயார் செய்து ஏக்கருக்கு தொழு உரம் 10 வண்டியும், சூப்பர் பாஸ்பேட் 125 கிலோவும், 23 கிலோ மியூரியேட் ஆப் பொட்டாஷும், 19 கிலோ யூரியாவும் கிழரமாக போடப் பட்டது.

20 ஏக்கரும் 8″×4″ இடைவெளியில் சால் நடவு செய்து முடிப்பதற்குள் முதலியார் பட்ட தொல்லை கொஞ்ச நஞ்சமல்ல. தொழிற்சாலைகள் அதிகமான இடமானதால் நடவு ஆட்கள் கிடைப்பது மிகவும் கடினம்.

ஒரு வாரத்தில் நன்றாக பச்சை கட்டி 20 ஏக்கரும் ஒரே அளவாக வளர்ந்தது.

விவசாய இயக்குநர், கூட்டு விவசாய இயக்குநர்களுடன் திரு. கண்ணப்ப முதலியார் அளவளாவுதல்

நட்டு 15 நாட்களானதும் பாலிடால்-சினப் மருந்து கலவை தெளிக்கப்பட்டது. 26 நாட்களானதும் ஒரு டியூப் பாலிடாலும், 45 நாட்களானதும் ஒரு டியூப் பாலிடாலும் தெளிக்கப்பட்டது. இந்த வட்டாரத்தில் அதிகமாயுள்ள குருத்துப் புழுவினால் சேதம் ஏற்படவில்லை.

நட்டு 30 நாட்கள் ஆனதும் (11-3-66) ஏக்கருக்கு 19 கிலோ யூரியா தூவப்பட்டது. நட்டு 45 நாட்கள் ஆனதும் மறுபடியும் 19 கிலோ யூரியா தூவப்பட்டது.

அதிக உரமிட்டு (N.P.K. 28 : 21 : 14) தலைசாயாது நின்ற பயிரை பெருமிதத்துடன் உறவினர்க்கும் நண்பர்களுக்கும் காட்டுவதில்தான் முதலியாருக்கு என்ன பெருமை. வயல் திருநாள் பற்றிக் கூறியதும் தனது நிலத்திலேயே கொண்டாட வேண்டிக்கொண்டார்.



மாவட்ட விவசாய அலுவலர் பார்வையிடல்

மாவட்டத்தின் மற்ற இடங்களிலும் கல்ச்சர் 2410 பயிரிடப்பட்டுள்ளன. வயல் திருநாளன்று முக்கிய விவசாயிகள் யாவரும் கல்ச்சர் 2410 பயிரிடப்பட்டுள்ள எல்லா இடங்களையும் பார்வையிட துணை விவசாய இயக்குனர் அவர்கள் ஏற்பாடு செய்திருந்தார்கள்.

யாவற்றையும் பார்வையிட்ட மாவட்ட ஆட்சித் தலைவரும் மற்றும் முக்கிய விவசாயிகளும் திரு கண்ணப்ப முதலியாரின் பயிரே சிறந்தது எனக் கூறி மகிழ்ந்தனர்.

வயல் திருவிழாவில் குழுமிய விவசாயிகளின் மனம் பூரித்தது. திரு. கண்ணப்ப முதலியாரிடம் விதைக்காக ஒரு மூட்டையாவது தர வேண்டும் என்று கேட்காத விவசாயிகளே இல்லை என்று கூறலாம்.

வருடாவருடம் சுமார் 18 மூட்டைகள் அறுவடைசெய்யும் திரு. கண்ணப்ப முதலியார் ஏக்கருக்கு 28 மூட்டைகள் கல்ச்சர் 2410 மூலம் அறுவடை செய்த போது அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை.

திருமழிசையில் கல்ச்சர் 2410 சிறந்த முறையில் பயிரிடப்பட்டு மிகச் சிறந்தது எனப் பெயர் பெற நமது துணை விவசாய இயக்குனர் இதில் நேரடியாக கவனம் செலுத்தி கண்காணித்தது ஒரு முக்கிய காரணம் எனலாம்.



அமோக விளைச்சல்

இந்த ஆண்டு முன்னோடித் திட்டத்தின் கீழ் பயிரிடப்பட்டுள்ள கல்ச்சர் 2410 அடுத்த ஆண்டு நவரையில் அமோக விளைச்சல் திட்டத்தின் கீழ் இடம் பெறும் என்பதில் சந்தேகமில்லை.



மாவட்ட விவசாய அலுவலர் காஞ்சிபுரம் அவர்களின் மேற்பார்வையில் பயிர் பாதுகாப்பு செய்யப்படுகிறது.

SIEMENS
INDIA

தண்ணீர்...
உங்கள் வயலுக்கு அவசியம் தேவைப் படும்போது

ஸீமென்ஸ் ஸ்விட்சுகேர், உங்கள் பம்ப் செட் எப்பொழுதும் பணி புரிய உறுதி செய்கிறது

உங்கள் வயலுக்குத் தண்ணீர் அவசியம் தேவைப்படும் இரண்டு, மூன்று வாரங்களுக்கு உங்கள் பம்ப் மோட்டார் எரிந்துபோய்விடுகிறது என்று வைத்துக்கொள்வோம். உங்கள் நிலை என்ன? ஆண்டு முழுதும் பாடுபட்டது வீண். இந்த நிலை வராமல் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். ஸீமென்ஸ் ஸ்விட்சுகேர், கொண்டு உங்கள் பம்ப் செட்டுகளுக்குப் பாதுகாப்பளித்து, அது இடைவிடாது பணியாற்ற உறுதி செய்யுங்கள்.

ஸீமென்ஸ் ஸ்டார்ட்டர்—பம்புக்கு மின் ஓட்டத் தடை ஏற்பட்டு, மோட்டாரில் மின் ஓட்டம் அளவுக்கு மீறினால் தானாகவே மோட்டாரை நிறுத்திவிட விசேஷமாக அமைக்கப்பட்டுள்ளது இது. உங்கள் மோட்டார் எரிந்துபோகாமலிருக்க உறுதிசெய்கிறது. உறுதியாக அமைக்கப்பட்டுள்ள ஸீமென்ஸ் ஸ்டார்ட்டருக்குப் பராமரிப்புத் தேவை வெகு குறைவு.

ஸீமென்ஸ் ஸ்விட்சு ஃப்யூஸ்—உங்கள் பம்ப் செட்டுக்கு அத்தியாவசியமான மற்றொரு உறுப்பு இது. மோட்டாரைப் பாதுகாக்கும் ஸ்டார்ட்டரையே இது பாதுகாக்கிறது. மின்னோட்ட இடைமறி நேரிட்டால், நம்பிக்கைக்குரிய அந்த கார்ட்ரிஜ் ஃப்யூஸ் மட்டுமே எரிந்து போகிறது. ஆனால் உங்கள் ஸ்டார்ட்டரும் மோட்டாரும் பத்திரமாயிருக்கும். ஸீமென்ஸ் ஃப்யூஸ் மாற்றிப்போட எளிதானது. நீங்களே செய்துகொள்ள முடியும்.

ஸீமென்ஸ் ஸ்விட்சுகேர்

- பழுது பார்ப்பதில் ஆகும் அதீதச் செலவுகளையும் நேரத்தையும் மிச்சப்படுத்துகிறது.
- தீ விபத்துக்களைத் தடுக்கிறது.
- உங்கள் வயலுக்கு நீர் கிடைப்பதை உறுதியாக்குகிறது.
- உங்கள் பம்ப் செட்டுக்கு அதிகபட்ச பாதுகாப்பு அளிக்கிறது.



மோட்டார் ஸ்டார்ட்டர்



ஸ்விட்சு ஃப்யூஸ் யூனிட்

ஏகபோக பிரதிநிதிகள்:

ஸீமென்ஸ் என்ஜினீயரிங் & மான்யுபாக்சரிங் கம்., ஆப் இந்தியா லிட்.,

அஹமதாபாத் . பெங்களூர் . பம்பாய் . கல்கத்தா . ஹைதராபாத் . லக்னௌ . சென்னை . நாக்பூர்
புது டில்லி . பாட்னா . ரூர்கேலா . திருவனந்தபுரம் . விசாகப்பட்டினம்.

Bensons-489A TAM

உற்பத்தியை அதிகரிக்க இயந்திர சாதனங்கள்

அனந்தராமன், B. E. பொறியியல் பேராசிரியர், விவசாயக் கல்லூரி, கோவை.

ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களில் ஒரே இடத்தில் ஒரே சமயத்தில் விவசாயம் நடைபெற வேண்டியுள்ளது. இதனல் விவசாயத்திற்குத் தொழிலாளர்கள் கிடைப்பதில் சிரமம் ஏற்படுகிறது. கூலி முன்னிருந்ததைவிடப் பலமடங்கு அதிகரித்திருக்கிறது. இவ்விதச் சூழ்நிலையில் உற்பத்தியை தீவிரமாக அதிகப்படுத்த வேண்டுமானல், இயந்திர சாதனங்களின் உதவியை நாடுவது அத்தியாவசியமாகிறது.

தமிழ்நாட்டில் நவீன விவசாயக் கருவிகளை உபயோகப்படுத்தி உற்பத்தியைப் பெருக்க விவசாயிகள் ஊக்குவிக்கப்பட்டு வருகிருர்கள். இக்கருவிகளால் ஏற்படும் நன்மைகள் ஏராளம்.

இயந்திரங்கள் கொண்டு குறைந்த ஆளுழைப்புடன் அதிக வேலையைக் குறுகிய காலத்தில், சிக்கனமாகச் செய்து முடிக்கலாம். வேலையைத் திருப்திகரமாகச் செய்யலாம். பண்ணை வேலைகளைச் செய்ய காலமும் செலவும் குறைகிறது.

இப்படிப் பல பயன்களும் திறனும் உடைய விவசாயக் கருவிகளில் முக்கியமானவைகளைப் பற்றி சற்று கவனிப்போம்.

இரும்புக் கலப்பை

இரும்பு கலப்பைகள் நாட்டுக் கலப்பைகளைவிட ஆழமாக உழுவதோடல்லாமல், ஊடு தரிசு இல்லாமல் சீராக உழுது மண்ணைப் புரட்டிக் கொடுக்கின்றன.

சேறுகலக்கும் கருவி

நஞ்சை நிலங்களுக்கானது சேறு கலக்கும் கருவி. இந்தக் கருவியைக் கொண்டு ஒரு நாளைக்கு 2 ஏக்கரில் சேறு கலக்க முடியும். இதற்கு ஆகும் செலவு ஒரு கருவிக்கும் ஒரு ஜதை மாடுகளுக்கும் வாடகையாக ஐந்து ரூபாயும், ஓட்டும் மனிதனுக்குக் கூலியாக $1\frac{1}{2}$ ரூபாயும் ஆக இரண்டு ஏக்கருக்கு மொத்த செலவு $6\frac{1}{2}$ ரூபாயாகிறது, அதாவது ஒரு ஏக்கருக்கு $3\frac{1}{4}$ ரூபாயில் வேலை முடியும்.

ஆனுல் இந்த வேலையை மரக்கலப்பையைக் கொண்டு செய்ய ஒரு ஏக்கருக்கு மூன்று ஜதை மாடுகள் தேவைப்படும். இவ்வாறு மூன்று ஏர்களுக்கு 15 ரூபாயும் மூன்று ஆட்களுக்கு $4\frac{1}{2}$ ரூபாயும் ஆக ஏக்கருக்கு $19\frac{1}{2}$ ரூபாயாகிறது. எனவே இக்கருவியைக் கொண்டு சேறு கலக்கினுல் ஏக்கருக்கு $16\frac{1}{4}$ ரூபாய் மிச்சப்படுகிறது. மேலும் ஏக்கர் ஒன்றுக்கு 3 ஆட்கள் தேவைப்படுமிடத்தில் ஒரு ஆளைக்கொண்டே இரண்டு ஏக்கரில் சேறு கலக்க முடிகிறது, அதாவது இரண்டு ஏக்கர் மட்டுமே சாகுபடி செய்யும் சிறிய விவசாயியாக இருந்தால் அவர் மட்டும் தனியாகவே வேறு ஐந்து ஆட்களையும் ஐந்து ஏர்களையும் கூலிக்கு நியமிக்காமல் சுலபமாக இக்கருவியைக் கொண்டு இரண்டு ஏக்கரில் சேறு கலக்க முடியும்.

தழை மிதிக்கும் கருவி

தழை மிதிப்பதாக இருந்தால், ஒரு ஏக்கரில் 12 பெண்கள் வேலை செய்ய வேண்டிவரும். ஆனுல் தழை அமுக்கும் கருவியைக் கொண்டு நாளொன்றுக்கு $2\frac{1}{2}$ ஏக்கரில் இந்த வேலையை முடிக்கலாம். கருவியை ஓட்ட ஒரு ஆணும், தழைகளைப் பரப்ப இரண்டு பெண்களுந்தான் தேவைப்படுவார்கள். கருவி மற்றும் ஒரு ஜதை மாட்டிற்கான வாடகை ஐந்து ரூபாயும் பெண்ணுக்குக் கூலி ஒரு ரூபாய் வீதமும், ஆணுக்கு $1\frac{1}{2}$ ரூபாய் வீதமும் கொண்டு பார்த்தால், $2\frac{1}{2}$ ஏக்கருக்கு மொத்த செலவு $6\frac{1}{2}$ ரூபாய்தானுகிறது. ஆனுல் பெண்களை வைத்துக் காலால் மிதிக்கச் செய்யும் பொழுது ஒரு ஏக்கருக்கு 12 ரூபாய் செலவாகிறது. எனவே இதில் ஒரு ஏக்கருக்கு 7 ரூபாய் மிச்சப்படுகிறது.

பர்மிய சட்டம்

இது தவிர 'பர்மிய சட்டம்' என்கிற கருவியானது தழையை மிதிப்பதுடன் சேற்றையும் கலக்கும். இதைக் கொண்டு ஒரு நாளில் $2\frac{1}{2}$ ஏக்கரில் வேலை செய்யலாம்; இதைப் பலர் உபயோகித்து வருகிருர்கள்.

வரப்புக் கட்டி

தோட்டக்கால் நிலங்களில் 'வரப்பு கட்டும்' கருவியைக் கொண்டு நாளொன்றுக்கு 2 எச்கர் வரப்பு கட்டலாம். பாத்திகள் போடலாம். இதற்காகும் செலவு $6\frac{1}{2}$ ரூபாய் தான். ஒரு எக்கர் கணக்கில் இது $3\frac{1}{4}$ ரூபாய்தானுகிறது; ஆண் கூலிகளை நியமித்து மண்வெட்டி கொண்டு வரப்பு கட்டினுல் 12 ஆட்கள் தேவைப்படுகிறது; 18 ரூபாய் செலவாகிறது. எனவே வரப்பு கட்டும் கருவி எக்கர் ஒன்றுக்கு சுமார் 13 ரூபாயை மிச்சப்படுத்துகிறது.

பார்க் கலப்பை

இதுபோல்தான் 'பார் கலப்பையும்' 15 ஆண்கள் மண் வெட்டி பிடித்து ஒரு எக்கராவில் செய்யும் வேலையை, இரண்டே ஆட்கள் பார் கலப்பை ஓட்டி, இரண்டு எக்கரா பார் போட்டு முடிக்கலாம். சராசரி 16 ரூபாயை இவ்வித மாக மிச்சப்படுத்தலாம்.

சால்விதைப்புக் கருவி

புஞ்சை நிலங்களில் பயன்படக்கூடிய மற்ருெரு கருவி, சால் விதைப்புக் கருவி அல்லது கொர்ரு கலப்பையாகும். நெல், கடலை, பருத்தி, முதலிய விதைகளை விதைப்ப தற்கு இந்தக் கலப்பை உபயோகப்படுகிறது. இதை ஒரு ஜோடி மாட்டின் உதவி கொண்டு ஒருவர் ஓட்டிச் செல்லும்போது மற்ருெருவர் ஒரே சீராகவிதையை விதைக் கோப்பையில் இடவேண்டும். ஒவ்வொரு பயிருக்குத் தக்கவாறு விதைப்பை மாற்றியமைத்துக் கொள்ளலாம்.

சமீப காலத்தில் இக்கலப்பையில் பல மாறுதல்கள் செய்யப்பட்டுள்ளது. ஒன்பது அங்குல இடைவெளியில் 5 கொத்துகள் கொண்ட இந்தக் கலப்பையினுல் ஒரு நாளைக்கு 5 எக்கரில் விதைகளை நடவு செய்யலாம். சாதாரணமாக மரக்கலப்பையை ஓட்டி அதன் பின்னே சாவில் விதைப்பதாக இருந்தால் ஒரு எக்கருக்கு $7\frac{1}{2}$ ரூபாய் செலவாகும். இந்த நவீன கொர்ரு கலப்பையால் $1\frac{1}{2}$ ரூபாய் செலவில் ஒரு எக்கரில் விதைப்பு செய்து விடலாம்.

டிராக்டர்கள்

விவசாய வேலைகள் பலவற்றையும் விரைவாகவும், திறமையாகவும் செய்வதில் டிராக்டர்கள் ஈடு இணை யற்றவை. மிகச் சிறிய பேபி டிராக்டர்கள் முதல் பிரமாண்டமான ராட்சத டிராக்டர்கள்வரை இப்போது பயன்படுத்தப்பட்டு வருகின்றன. டிராக்டர்களுடன் பல இயந்திரச் சாதனங்களைப் பொருத்துவதன் மூலம் பல வேலைகளைச் செய்ய முடிகிறது. புல்டோசர்கள் மேடு பள்ளங்களை நிரவி மரம் செடிகளை வேருடன் அகற்றி காடுமுரடான நிலங்களைச் சாகுபடிக்குக் கொண்டுவரப் பெரிதும் பயன்படுகின்றன. மண்ணின் தன்மைக்கேற்ப உழுவதற்கு இறக்கை கலப்பைகளையோ சட்டிக் கலப்பை களையோ உபயோகிக்கலாம். கட்டிகளை உடைத்து வயலைச் சமன்செய்ய "ஹேரோ" சாதனம் பிரயோசனப்படுகிறது. கெட்டியான மண்ணை உடைத்து அடி மண்வரை உழுவ தற்கும் வாய்க்கால்கள் போடவும் சில இயந்திர இணைப் புகள் உள்ளன. எல்லாவகைப் பயிர்களையும் வரிசை யாகச் சரியான இடைவெளியுடன் விதைத்தால் பின்னர் அதிக ஆள் செலவில்லாமல் வரிசைகளுக்கிடையில் இடை யுழவு டிராக்டர்களைக் கொண்டே செய்யலாம். மிகச் சிறிய விதைகளையும் கூட நேர்த்தியாக சால் சாலாக விதைச்சக்கூடிய யந்திர சாதனங்கள் இப்போது கிடைக் கின்றன. விதைக்கும்போதே உரங்களையும் முளைத்து வரும் செடிகளின் வேர்கள் எளிதில் உபயோகிக்கும் படி விதைகளுக்கு அருகிலேயே போட்டுவிட முடியும். பயிர்களின் அறுவடைக்கு நம்நாட்டில் டிராக்டர்கள் அதிகமாகப் பயன்படுத்தப்படுவதில்லை. உரம், விவசாய விளைபொருகள் முதலியவற்றை ஏற்றிச் செல்ல டிராக்டர் கள் நமக்கு மிகவும் பயன்படுகின்றன. பண்ணையில் இவை செய்ய முடியாத வேலைகள் இல்லையென்றே கூறிவிடலாம். இவைகள் இப்போது நம் நாட்டிலேயே உற்பத்தியாகின்றன என்பது பெருமைக்குரியதாகும்.

இதர சாதனங்கள்

நமது விவசாயத்தில் விமானத்தையும் இப்போது பயன்படுத்தத் தொடங்கி இருக்கிறோம். பரந்த அளவில் பயிர்களுக்கு மருந்தடிக்கும் வேலையை மிகத்துரிதமாக விமானங்கள் செய்து முடிக்கின்றன.

மேலைநாடுகளைப் போல விவசாய உற்பத்தியில் அதி தீவிர முன்னேற்றம் அடைய வேண்டுமானுல் நவீன விவசாயக் கருவிகளையும் இயந்திர சாதனங்களையும் அதிகமாக உபயோகப்படுத்த வேண்டும்.

கருவிகளைச் சலுகையில் வாங்குங்கள்

நவீன விவசாயக் கருவிகள் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் சகாய விலையில் கிடைக்கும். இக்கருவிகளை அவரவர்களது பஞ்சாயத்துக்களிலிருந்தோ, பஞ்சாயத்து யூனியன்களிலிருந்தோ கூட்டுறவுச் சங்கங்களிலிருந்தோ இளம் விவசாயிகள் மன்றங்களிலிருந்தோ, வாடகைக்கும் பெற்றுக்கொள்ளலாம். இக்கருவிகளை உங்கள் நிலங்களில் உபயோகித்து அவற்றின் பலன்களை நீங்கள் நேரடியாக உணர்ந்து கொள்வீர்களானுல் பின்னர் சொந்தமாகவே இக்கருவிகளை வாங்கிக்கொள்ளலாம். மானிய உதவி கிடைக்கும்.

சிக்கனமும் செயல்திறனும் மிக்க நவீன கருவிகளைப் பயன்படுத்தி உற்பத்தியைப் பெருக்க முன்வாருங்கள்.

மலைகளில் மட்டுமல்ல சமவெளியிலும் உருளைக்கிழங்கு பயிரிடலாம்

எஸ். கமலநாதன், காய்கறி நிபுணர், கோயமுத்தூர்.

உருளைக்கிழங்கு மலைகளிலும், குளிர் மிகுந்த இடங்களிலும்தான் விளையும் என்றுதான் யாவரும் நினைப்பார்கள். ஆனால், அது சமவெளிகளிலும் தாராளமாக வளர்ந்து நல்ல மகசூல் தரும் நாள் இப்பொழுது வந்துவிட்டது. சத்துள்ள உருளைக்கிழங்கை சமவெளிகளில் பயிரிட்டுப் பயன்பெறுவது நம் கையில்தான் உள்ளது.

சத்துமிகு உருளைக்கிழங்கு

உருளைக்கிழங்கு குளிர் மிகுந்த இடங்களில் நன்றுக் வளரும் பயிர். நம் தமிழ் நாட்டில் நீலகிரி, கோடைக் கானல், சேர்வராயன் மலைகளில் இது பெரும்பாலும் பயிரிடப்பட்டு வருகிறது. தென் இந்தியாவில் தமிழ் நாட்டில்தான் உருளைக்கிழங்கின் பரப்பளவும் உற்பத்தியும் அதிகம். சென்ற ஆண்டில் 21,798 எக்கராவில் பயிராயிற்று. இதில் 56,000 டன்கள் உருளைக்கிழங்கு விளைந்தது. இது நம் சுயதேவைக்குப் போதவில்லை. ஆகவே, உருளைக் கிழங்கின் பரப்பளவையும் உற்பத்தியையும் பெருக்க முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. மிதமான வெப்ப முள்ள சமவெளிகளில் உருளைக்கிழங்கை விளைவிப்பதும் இம்முயற்சிகளில் ஒன்று. உருளைக்கிழங்கு குறுகிய காலப் பயிர். நல்ல வருமானமும் தருகிறது. அதிக அளவில் கலோரிகளும், ஓரளவுக்கு 'சி' உயிர்ச்சத்தும் கொண்டது.

சமவெளியில் பயிரிட பென்குருஷன், எச். பி. 1699

சிம்லாவிலிருந்து பலவித உருளைக்கிழங்குகளைத் தருவித்து கோயமுத்தூர் விவசாயக் கல்லூரியில் சாகுபடி ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டன. இதன் பயனாக பென் குருஷன், எச். பி. 1699 ஆகிய இரு ரகங்கள் சமவெளிக்கு ஏற்றவை என்று தேர்ந்தெடுக்கப்பட்டன. இவை இரண்டும் ஓரளவுக்கு வெப்பத்தை தாங்கக்கூடியவை. கோயமுத்தூர், பெரியகுளம், ஓசூர், கிருஷ்ணகிரி மற்றும் மலைப்பாங்கான இடங்கள், பீடபூமிகள் போன்ற வெப்பம் குறைவாயுள்ள இடங்களில் பயிர் செய்ய ஏற்றவை. விதைத்து சுமார் 110 நாட்களில் அறுவடை செய்யலாம். ஒரு ஏக்கருக்குச் சுமார் 5 முதல் 6 டன்கள் வரை மகசூல் கொடுக்கின்றன. மலைகளில் விளையும் கிழங்கைக் காட்டிலும் உருவத்தில் சிறிதாக இருந்தாலும் மகசூல் குறையவில்லை. கிழங்காவது வெண்ணிற மெல்லிய தோலும், உருண்டை யிலிருந்து கோழிமுட்டை வடிவமும், மஞ்சள் நிற சதைப் பற்றும் கொண்டது. மலைகளில் விளையும் கிழங்கைப்போல் நீண்ட நாள் வைத்திருக்கலாம். ஆனால், கிழங்கு வேக சிறிது நேரம் ஆகும். ஆயினும் குணமும், மணமும் நன்றாகவே இருக்கின்றன.

இத்தகைய சிறப்பு வாய்ந்த உருளைக்கிழங்கைச் சமவெளி களில் பயிரிடும் முறையைத் தெரிந்து கொள்ளுங்கள்.

வடிகால் வசதியுள்ள மண்

வடிகால் வசதியுடன் கூடிய செம்மண்ணும் மணலும் கலந்த நிலம் சிறந்தது. களிமண் நிலமும் களர் நிலமும் ஆகாது.

பயிரிடும் பருவம்—

புரட்டாசி–தை, வைகாசி–ஆவணி.

சமவெளியில் உருளைக்கிழங்கை இரு பருவங்களில் பயிரிடலாம். வைகாசி முதல் ஆவணி முடிய முதல் பருவம். இப் பருவம் பெரும்பாலும் விதைக் கிழங்குகளை விளைவிக்கப் பயன்படுகிறது. புரட்டாசி-ஐப்பசி முதல் தை மாதம் வரை இரண்டாவது பருவம். இதுவே உருளைக் கிழங்கை அதிக அளவில் பயிரிடச் சிறந்த பருவம்.

நிலம் தயாரிப்பு உரம் இடுதல்

நிலத்தை 4 அல்லது 5 முறை நன்றாக உழவும். கடைசி உழவின்போது ஏக்கருக்குச் சுமார் 20 டன் மக்கின உரமும் 100 கிலோ கிராம் அம்மோனியம் சல்பேட் அல்லது 45 கிலோ கிராம் யூரியா உரமும், 300 கிலோ கிராம் சூப்பர் பாஸ்பேட்டும், 50 கிலோ கிராம் பொட்டாஷ் உரமும் போட்டு மண்ணுடன் கலந்து விடவும். பார் கலப்பையினால் 60 சென்டி மீட்டர் இடைவெளியில் பார் ஒட்டவும். 8 மீட்டர் இடைவெளியில் குறுக்கில் வாய்க்கால் அமைக்கவும்.

தரமான விதைக்கிழங்கு வேண்டும் :

கோழிமுட்டை அளவுள்ள கிழங்குகளைத் தேர்ந்தெடுங்கள். விதைக் கிழங்கு நோயற்றதாயிருக்கவேண்டும். முளைவிட்டதாயிருக்க வேண்டும். பார்களின் பக்க வாட்டில் ஒரு சாண் இடைவெளிவிட்டு ஒவ்வொன்றாக நட்டு மண்ணால் மூடவேண்டும். முளையுள்ள கிழங்குகளையே விதைக்க வேண்டும். அறுவடையானதிலிருந்து விதைக் கிழங்குகள் முளை எடுக்கச் சுமார் 5 அல்லது 6 வார காலமாகும். ஒரு பருவத்திலிருந்து கிடைத்த விதைக் கிழங்குகளை அடுத்த பருவத்துக்கு விதைப்பதே சிறந்தமுறை. ஒரு ஏக்கருக்குச் சுமார் 800 கிலோ கிராம் எடையுள்ள கிழங்குகள் தேவைப் படும். விதைத்த பின்னர் பார்களைச் சீர்படுத்தி நீர் பாய்ச்சவும். கிழங்குகள் முளைத்து வெளிவர சுமார் 12 நாட்கள் ஆகும். முளைக்கும் வரை நிலத்தை ஈரமாக வைத்திருக்க வேண்டும்.

நட்ட முதல் மாதத்தில் வாரத்துக்கு ஒருமுறையும் பிறகு 10 நாட்களுக்கு ஒருமுறையுமாக நீர் பாய்ச்சி வரவும்.

பின் சாகுபடி

கிழங்குகள் நட்ட ஒரு மாதத்திற்குப் பிறகு 15 நாட்களுக்கு ஒருமுறையாக 2 அல்லது 3 தடவைகள் களையெடுக்க வேண்டும். நட்டு 45 நாட்கள் கழித்து பார்களின் பக்கவாட்டில் உள்ள மண்ணை வெட்டி எடுத்துச் செடிகள் மத்தியில் இருக்கும்படி நன்றாக மண் அணைத்துப் பார்களைத் திருத்தி அமைக்கவும். மேலும் கிழங்குகள் வெயிலில் படாதவாறு மண் அணைத்துப் பாதுகாக்க வேண்டும்.

மருந்தடிப்பு

நட்ட 3 வாரங்கள் கழித்து ஏக்கருக்கு 250 மில்லி லிட்டர் அளவுள்ள என்டிரின் மருந்தையும் அரை கிலோ கிராம் டைதேன் மருந்தையும் 40 காலன் தண்ணீரில் கலந்து தெளிக்கவும். பிறகு 3 வாரங்களுக்கு ஒரு தரம் 100 மில்லி லிட்டர் அளவுள்ள பாரதியான் மருந்தையும் அரை கிலோ கிராம் டைத்தேன் மருந்தையும் 40 காலன் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.

ஏற்ற தருணத்தில் அறுவடை

விதைத்த 35 நாட்களில் ஒரு செடியிலிருந்து 5 முதல் 10 கிழங்குகள் வரை தோன்றி சுமார் 45 நாட்களில் பெருத்து செடியின் வயது சுமார் 100 நாட்கள் ஆகும் போது கிழங்குகள் முற்ற ஆரம்பிக்கும். செடி வாட்ட முற்று இலைகள் காயத் தொடங்குவது இதற்கு அறிகுறி. அறுவடைக்கு ஏற்ற சமயம் இதுவே. சுமார் 110 நாட்களில் அறுவடை செய்யலாம். மம்மட்டியாலோ அல்லது குடாலி என்னும் முள் மம்மட்டியாலோ நிலத்திலுள்ள கிழங்குகளைத் தோண்டி எடுக்கவும். பார் கலப்பை ஒட்டியும் மம்மட்டியால் மண்ணை புரட்டியும் எடுக்கலாம். நோயுற்ற மற்றவற்றைத் தரம் பிரித்து விற்கவும். ஒரு ஏக்கரிலிருந்து சுமார் 5 முதல் 6 டன் வரை மகசூல் கிடைக்கும்

சமவெளியில் ஒரு ஏக்கரில் உருளைக்கிழங்கைப் பயிரிடச் சுமார் ரூ. 1,200 செலவாகும். ஒரு ஏக்கரில் 5 டன்கள் கிழங்கு கிடைத்தால் கூட மொத்த வருமானம் ரூ. 2,250 ஆகிறது. செலவு போக ஏக்கருக்கு ரூ. 1,050 மிஞ்சுகிறது, அதுவும் நான்கு மாதங்களில்.

வெப்பம் குறைவாயுள்ள சமவெளியில் உருளைக் கிழங்கைப் பயிரிடுவதின் மூலம் உணவு உற்பத்திக்கு உதவுவதோடு அதிக இலாபமும் பெறலாம். ஆகவே முயற்சி செய்யுங்கள். பலன் அடைவீர்கள்.

தென்னிந்திய சீதோஷ்ணத்துக்குத் தக்கபடி நன்கு பரீக்ஷிக்கப்பட்டு எங்களால் நேரிடையாகத் தயாரிக்கப்பட்ட பலவித உயர்ந்த ஜாதி

முட்டைகோஸ், நூல்கோல், பீட்ரூட், கேரட், காலிப்ளவர், குடமிளகாய்

உலகப் பிரசித்திப்பெற்ற சிறந்த ருசி, குறைந்த விதைக்குழி, பருத்த சதை கொண்ட பலவித கவர்ச்சிகரமான

தக்காளி

மற்றும் இதர வெளிநாட்டு காய்கறி விதைகள், எக்காலத்துக்கும் தகுதியான நோய் அணுகாத, அதிக மகசூல் தரும் மிக உயர்ந்த ஜாதி பச்சை நிற

வெண்டை

பெரிய, சதை பருத்த, ருசிகரமான அதிசய ஜாதி

கொத்தவரை

அதிக மகசூல், சிறந்த ருசி, கவர்ச்சி நிறம், வடிவம், குறைந்த விதை முதலிய பல விசேஷ குணங்கள் கொண்ட

கத்தரி ரகங்கள்

இதர பலவித முள்ளங்கி, மிளகாய், பரங்கி, பூசணி, வெள்ளரி முதலான காய்கறி, கீரை வகைகள், மா, எலுமிச்சை, கொய்யா, சபோட்டா போன்ற பழச் செடிகள், தென்னை ரகங்கள், பூச்சி மருந்துகள், தோட்டக் கருவிகள், ஸ்ப்ரேயர்கள், களை நாசினிகள் முதலிய எல்லாவற்றுக்கும் சிறந்த நம்பிக்கை வாய்ந்த இடம் :

ராஜா பண்ணைத் தோட்டம்

2, வைத்தியராமய்யர் தெரு (ஹிந்தி பிரசாரசபை அருகில்),
தியாகராயநகர் : : சென்னை-17.
தந்தி : RAJSEED
போன் : 42262

நேற்று - இன்று - நாளை

எம். கே. லிங்கியா, விரிவினை வல்லுனர், வி. சீனிவாசன், சர்வே அதிகாரி, த. சோமசுந்தரம்,
விரிவினை விளக்குனர், விரிவினைப் பகுதி, கோவை.

'சுழன்றும் ஏர் பின்னதே உலகு' என்ற தமிழ் மறை காலம் தொட்டு, ஏர் முனை வெற்றியே போர் முனை வெற்றி என்றும் "வீரர் வாழ்க ! விவசாயி வாழ்க !!" என்றும் விண்ணதிர முழங்கப்படும் தற்காலம் வரை வேளாண்மையின் முதன்மை உணரப்பட்டேயிருந்தது ; என்றுலும், தற்பொழுது நிலவி வரும் சூழ்நிலையில் வளர்ந்து வரும் நம் பாரத நாட்டில் வேறெப்பொழுதும் இல்லாத வகையில் 'வேளாண்துறை, முதன்மை பெற்று வருவது அனைவரும் அறிந்ததே!

பாரத நாட்டின் முக்கியத்தொழிலாக விளங்கி வருவது விவசாயமே! விவசாயம் செழித்தால் மட்டுமே, அதன்சார்புடைய ஏனையதொழில் துறை வளர்த்தல் இயலும். மேலும் மக்கள் உயிர் வாழத்தேவையான உணவை உற்பத்தி செய்வதாலும் இத்துறை முக்கியமானதாக உள்ளது. இக்காரணம் பற்றியே ஏனைய துறைகளில் உள்ளவர்களும் விவசாயம் செழிப்பதை, உற்பத்தி பெருகுவதை ஆவலோடு எதிர்நோக்கியுள்ளார்கள்.

இந்நிலையில் "............ஆற்று மாக்கள் அரும்பசி களைவோர் மேற்றே உலகின் மெய்நெறி வாழ்க்கை உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்ற மணிமேகலை அம்மையின் வாக்கின் உண்மையுணர்ந்து விவசாயத்தையே தொழிலாக மேற்கொண்டு தூய்மையாக உழைக்கும் உழவர் குடிமக்களின் பொறுப்பும், கடமையும் மிகுதியாவதை அனைவரும் அறிவர்.

எனவே விவசாயம் செழிக்க, வேளாண்மை வளர அரசினர் பல திட்டங்களை அமுலாக்கியுள்ளனர். அதன் மூலம், விவசாயிகளுக்குத் தேவையான பொறுக்கு வித்துக்கள், இரசாயன உரம், பூச்சி பூஞ்சாள மருந்துகள் நவீன கருவிகள் முதலியன கிடைக்க வகை செய்யப்பட்டுள்ளன.

மேலும் கரும்பு, பருத்தி, புகையிலை, எண்ணை வித்துக்கள், காய்கறிகள், தோட்டக்கலைப்பயிர்கள், முந்திரி, தென்னை, வாழை, கமுகு போன்ற பல முக்கிய பயிர்களுக்கென தனித்தனி திட்டங்கள் தீட்டி, அவற்றை அமுலாக்கி தனி அலுவலர்கள் பணியாற்றி வருவதும் அவற்றின் மூலம் விவசாயிகள் பலனடைந்து வருவதும் அனைவரும் அறிந்ததே !

இப்படி திட்டமிட்டு முன்னேறும்பொழுதும், ஒவ்வொரு நிலையிலும் சற்று நின்று நாம் இதுவரை நடந்துவந்த பாதையைத் திரும்பி நோக்கி அது சரியான முறையான பாதைதானு என்பதையும், அப்பாதையில் நாம் கடந்து வந்த காட்டாறுகள் எத்தனை, மேடு பள்ளங்களின் தன்மை என்ன, ஏற்பட்ட இன்னல்கள் எவ்வளவு என்பதை எல்லாம் ஆய்வது, நாம் இனி நடந்து செல்ல வேண்டிய பாதையை நிர்ணயிக்கவும் இதுவரை வந்த வேகத்தை விட, இனி சற்று அதிக விரைவாகச் செல்ல வழி வகுக்கவும் வாய்ப்பு ஏற்படுத்தும் அல்லவா?

உண்மை......அதற்கென்ன செய்வது ?

இப்படி நேற்று நடந்தது, இன்று நடந்துகொண்டிருப்பது, நாளை நடக்க விருப்பது அனைத்தையும் கடந்த கால அனுபவத்தைக் கொண்டு ஆக்கப் பூர்வமாக ஆராய கோவையிலிருக்கும் விவசாயக் கல்லூரி ஆராய்ச்சி நிலையத்தைச் சார்ந்த விரி வினைப்பகுதியினர் மதிப்பீட்டளவை (Evaluation suruey) நடத்துகின்றனர்.

மதிப்பீட்டளவை என்றுல் என்ன ?

சிறுதானிய பொறுக்கு வித்துக்கள் பரவியுள்ள அளவை நிர்ணயிக்கவோ, நெல், கரும்பு, நிலக்கடலை, பருத்தி, பொறுக்கு வித்துக்கள் பரவியுள்ள அளவுபற்றியோ, நெல்லுக்கு பசுந்தாளுரமிடல் மற்றும் மணிச்சத்துமிடல் பற்றியோ, பயிர் பாதுகாப்பு செய்தல், கலவையுரம் தயாரித்தல், திருந்திய சாகுபடிபற்றி அறியும் வழிமுறை ஆகியவை பற்றியோ மதிப்பீடு செய்ய ஆண்டுதோறும் விரிவினைப் பகுதியிலிருந்து மதிப்பீட்டளவை மேற்கொள்கின்றனர்.

அதில்...... ?

விவசாயிகளை நேரடியாக அணுகி அவர் தம் கருத்துக்களைத் திரட்ட வசதியாக வினுத் தொகுதி ஒன்று இருக்கும். அதன்படி அவ்விவசாயிகளிடம் அவ்வினுக்களைக் கேட்டு, அவர் தரும் விடைகளும், விளக்கங்களும் அதில் தெளிவாக குறித்து அனுப்பப்படுகிறது.

எல்லா விவசாயிகளிடமும் கருத்தறியப்படுமா ?

இல்லை! மதிப்பீட்டளவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட குறிப்பிட்ட பயிர் சாகுபடி செய்யப்படும் பரப்பளவுக்கு சேற்பவே ஒவ்வொரு பஞ்சாயத்து கூட்டு மன்றத்திலும் விவசாயிகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இவ்வாறு

தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயிகளின் எண்ணிக்கையை ஒட்டி, அந்தந்த பஞ்சாயத்து கூட்டு மன்றங்களில் கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. அதாவது இறுதியாக ஒவ்வொரு தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமத்திலும் இரண்டு அல்லது மூன்று விவசாயிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு இருப்பார்கள்.

கிராமங்கள் மற்றும் விவசாயிகள் தேர்ந்தெடுக்கப்படுவது முற்றிலும் மதிப்பீட்டளவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட குறிப்பிட்ட பயிர், சாகுபடி செய்யப்படும் பரப்பளவை ஒட்டியே இருக்கும். பரப்பளவு அதிகமாக இருந்தால், தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களின் எண்ணிக்கையும், விவசாயிகளின் எண்ணிக்கையும் அதிகமாக இருக்கும். முன்னது குறைவாக இருந்தால் பின்னதும் குறைவாகவே இருக்கும்.

குறிப்பிட்ட பயிர் ஒரு குறிப்பிட்ட பஞ்சாயத்து கூட்டு மன்றத்தில் சாகுபடியில் இல்லையென்றால், அந்தக் குறிப்பிட்ட மதிப்பீட்டளவை, அந்த பஞ்சாயத்து கூட்டு மன்றத்துக்கு ஒதுக்கப்படமாட்டாது.

வினாத்தொகுதி விவசாயிக்கே நேரடியாக அனுப்பப்படுமா?

இல்லை ! இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயிகளிடம் கேட்கப்பட வேண்டிய மதிப்பீட்டளவை வினாத் தொகுதிகள், சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து கூட்டு மன்றங்களிலுள்ள விவசாய விரிவு அலுவலர்களுக்கு அனுப்பி வைக்கப்படும். விவசாய விரிவு அலுவலர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயிகளைச் சந்தித்து, விபரம் சேகரிப்பார்கள்.

நீங்கள் என்ன செய்யவேண்டும் ?

நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயியாக இருந்தால் உங்கள் பொறுப்பும் கடமையும் அதிகமாகிறது. மதிப்பீட்டளவை குறித்த உங்கள் கருத்துக்களைக் கூற அதன் மூலம் உங்களுக்கு ஒரு நல்வாய்ப்பு ஏற்படுகிறது. கிடைத்த வாய்ப்பை நழுவவிடாமல் உங்கள் முழு ஒத்துழைப்பையும் உங்கள் விவசாய விரிவு அலுவலருக்கு கொடுக்கவேண்டியது உங்களுடைய தலையாய கடமை?

அப்படியென்றால்...... ?

விவசாய விரிவு அலுவலர் உங்கள் கிராமத்திற்கு வந்து உங்களை மதிப்பீட்டளவு சம்பந்தமாக அணுகும்போது நீங்கள் அவருக்கு தடைசொல்லாமல் விடை சொல்ல வேண்டும். விவசாய விரிவு அலுவலர் தன் பல்வேறு பணிகளுக்கிடையே வினாத்தொகுதியுடன் உங்களைச் சந்திக்க வரும்பொழுது, நீங்கள் உற்சாகமாக பதில் கொடுக்கும்பொழுதுதான் அவருக்கும் இப் பணியில் ஆர்வம் ஏற்படும். நீங்கள் இப்பணியின் முக்கியத்துவம் பற்றி ஏதும் உணராமல் அவர் ஏதோ கேட்கிறார் நாம் சொல்ல வேண்டுமே என்பதற்காக ஏதாவது எழுதிக்கொள்ளுங்கள் என்பது போலவோ அல்லது அப்படியுமிருக்கலாம் இப்படியுமிருக்கலாம் என்பது போல ஐயங்களும் மயக்கமும் ஏற்படுத்தும் வகையிலோ விடையளிப்பது நீங்கள் உங்கள் பொறுப்பை முழுமையாக நிறைவேற்றியதாக ஆகாது. எனவே உங்கள் விடைகள் தெளிவானதாகவும், குறிப்பிட்ட வினாவுக்கு முற்றிலும் ஏற்றதாகவும் இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டியது உங்களுடைய பொறுப்புதான். ஏனெனில் விவசாய விரிவு அலுவலர் வினாத்தொகுதி கொண்டு வந்தாலும் அவர் அவ்வினாக்களை உங்களுக்குச் சற்று விளக்கிச் சொல்லலாமே தவிர, விடைகள் குறித்து எதும் உங்களிடம் விவாதிக்க முடியாது. அவர் தன்னுடைய கருத்தையும் உங்களுடைய வினாத்தொகுதியில் ஏற்றிச்சொல்ல முடியாது. அவர் தன் கருத்தை உங்கள் மீது திணிக்க முற்படமாட்டார். ஏனெனில் அவர் கருத்தைத் தெரிவிக்க வேறு வினாத்தொகுதி தனியாக இருக்கும். எனவே குறிப்பிட்ட வினாவுக்கு சரியான பொருத்தமான, தெளிவான விடையளிப்பது உங்கள் முழுப் பொறுப்பேயாகும்.

சரியாக விடையளிப்பதால் என்ன பயன் ?

இம்மதிப்பீட்டளவை தமிழ்நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்டு உங்களைப்போன்ற பல நூறு சகோதர விவசாயிகளிடம் கருத்தறியப்படும்போது ஒரு குறிப்பிட்ட திட்டத்தில் உங்களுக்குள்ள இன்னல்களையும், இடுக்கண்களையும் நீங்கள் தெளிவாகச் சொல்வதன் மூலமும், அவற்றைக்களைய உங்களுடைய அரிய ஆலோசனைகளை வழங்குவதன் மூலமும், அத்திட்ட நடைமுறையில் தேவைப்பட்டால் சிலபல மாற்றங்களைச் செய்து அதை எல்லா விவசாயிகளுக்கும் பலனளிக்கும் வகையில் விரிவு படுத்தவும், விரைவுபடுத்தவும் முடியும், அல்லவா?

அதேபோல் நீங்கள் சரியாக விடையளிக்காமல் விட்டு விடுவதன் மூலம், மேலே சொல்லியபடி உண்மையாகவே தேவைப்படும் சிலபல மாற்றங்கள் மேற்கொள்ளப்படாமல் போய்விட ஏதுவாகும்.

அத்துணை விவசாயிகளும் சரியாக பதிலளிக்கும் பொழுது நாம் மட்டும் ஒரு மாதிரியாக விடையளிப்பதால் என்ன குறைந்து விடும் என்று எண்ணுபவர்களுக்கு ஒரு எச்சரிக்கை! உங்களைப்போலவே ஒவ்வொரு விவசாயியும் எண்ணுவாரேயானால் என்ன நடக்கும் என்பதைச் சற்று சிந்தியுங்கள். எனவே வினாக்களைச் சரியாக புரிந்து கொண்டு, உங்களுடைய தெளிவான விடைகளைச் சொல்லுங்கள்.

இதில் இன்னொரு நன்மையும் உண்டு.

வினாத்தொகுதியுடன் விவசாய விரிவு அலுவலர் உங்களிடம் வரும்பொழுது, நீங்கள் தாமதமின்றி விடையளிப்பதன் மூலம், அவர் உங்களைப்போல அவர் வட்டாரத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளன அனைவரையும் சந்தித்து, விபரம் சேகரித்து, விரைவாக விடைகளுடன் வினாத் தொகுதியை விரிவினைப் பகுதிக்கு அனுப்ப முடியும் இதன் மூலம் பெரும் தாமதம் தவிர்க்கப்படவும் நீங்கள் உதவலாம்.

எனவே மதிப்பீட்டளவையின் தேவையுணர்ந்து செயல்பட அனைவரையும் வேண்டுகிறோம்.

பெல்லாரி வெங்காயம் சாகுபடி

எச். எஸ். வேலாயுதம், பி. எஸ். ஸி., (எ. ஜி.) வானொலி உதவியாளர்.

நமது அன்றாட வாழ்க்கையில் வெங்காயம் பல வகைகளில் சமையலில் பயன்படுத்தப்படுகிறது. வெங்காயம் எல்லாக் காய்கறிகளுடனும் சரியாகச் சேர்ந்து தனி மணமும் சுவையும் அளிக்கும் இயல்புடையது. நாட்டு வெங்காயத்தை விட தற்பொழுது பெல்லாரி வெங்காயத்தை (பெரிய வெங்காயம்) விவசாயிகள் விரும்பி அதிக அளவில் சாகுபடி செய்கிறார்கள். திருந்திய சாகுபடி முறைகளாகிய, தேர்ந்தெடுத்த வித்துக்களை உபயோகித்தல், காலத்தே பயிரிடுதல், போதிய அளவு உரமிடுதல், நோயினின்றும் பூச்சியினின்றும் பாதுகாத்தல் முதலியவற்றை சரியாகக் கையாண்டால் அதிக மகசூலையும் லாபத்தையும் அடையலாம்.

வெங்காயம் ஒரு உஷ்ணப் பிரதேசத்துப் பயிர். வடிகால் வசதியுள்ள ''கரிசல் பூமியில் இதைப் பயிரிட சிறந்தது. மானாவாரிப் பயிராக பெல்லாரியிலும், அனந்தப்பூரிலும் பெரிய வெங்காயம் பயிராகிறது. தமிழ் நாட்டில் தோட்டக்கால் நிலங்களில் பாசனப் பயிராக பயிரிடப்படுகிறது. ஜூன்–ஜூலையிலும், டிசம்பர்–ஜனவரி மாதங்களிலும் நடவாகிறது. மழை மிகுதியாயிருக்கும் காலங்களில் இதைப் பயிர் செய்வது கிடையாது.

விதையை நாற்றங்காலில் விதைத்து நாற்றுக்களை நடவு செய்து தான் நமது மாநிலத்திலும் மைசூர், ஆந்திரப் பிரதேசங்களிலும் பெல்லாரி வெங்காயம் பயிராக்கப்படுகிறது. 1 செண்ட் நாற்றங்காலில் சுமார் ¾ முதல் 1 கிலோ வரை விதை விதைக்கப்படுகிறது. 3 செண்ட் நாற்றங்காலில் தயாரிக்கப்பட்ட நாற்றுகள் 1 எக்கர் நடுவதற்குப் போதுமானவை; 30 அல்லது 35 நாட்களில் நாற்று நடவுக்கு தயாராகிறது.

நடவு நிலம் நன்கு உழப்பட்டு மண் புழுதியாக்கப்பட வேண்டும். தொழு உரம் எக்கருக்கு 10 டன் (20 வண்டி) வீதமும் சூப்பர் பாஸ்பேட் 50 கிலோ அல்லது 3·ம் நம்பர் கலப்பு உரம் எக்கருக்கு 40 கிலோ வீதமும் போடவேண்டும். பிறகு (1½ அடி) 45 செ. மி. இடைவெளி அளவில் பார்கள் பிடித்து பார்களின் இரு பக்கங்களிலும் 15 செ. மீ, ½ அடி இடைவெளியில் நாற்றுகளை நடவேண்டும்.

நாற்றுகள் நன்கு வேர் பிடிக்கும் வரை 3 அல்லது 4 நாட்களுக்கு ஒரு முறையும், பின்னர் வாரத்திற்கு ஒரு முறையும் நீர் பாய்ச்ச வேண்டும். கடைசித் தண்ணீர் அறுவடை செய்வதற்கு மூன்று நாட்களுக்கு முன்பு பாய்ச்ச வேண்டும். இதைச் செய்யத் தவறிவிட்டால் வெங்காயம் வெடிக்கத் தொடங்கிவிடும். மொத்தமாக சுமார் 15 முதல் 20 தடவைகள் தண்ணீர் கட்டவேண்டிய அவசியம் ஏற்படலாம்.

நட்ட ஒரு மாதத்திற்குப் பிறகு முதல் களையெடுக்க வேண்டும். பிறகு மாதம் ஒரு முறையாக 2 அல்லது 3 முறை களையெடுத்தல் நல்லது. முதல் களை யெடுத்த பிறகு அமோனியம் சல்பேட் எக்கருக்கு 50 கிலோ வீதம் போட்டு தண்ணீர் பாய்ச்சுவது பயிருக்கு நல்ல வளர்ச்சியைக் கொடுக்கின்றன.

பயிர்ப் பாதுகாப்பு :

வெங்காயப் பயிரானது பூச்சியினாலும் நோயினாலும் அதிக அளவு பாதிக்கப்படுவதால் பயிர்ப் பாதுகாப்பு முறைகளைத் தகுந்த காலத்தே கையாளுவது அவசியம். இல்லாவிட்டால் 25 சதவீதம் வரை மகசூல் பாதிக்கப்படும். இப்பயிர் ''திரிப்ஸ்'' என்னும் நுண்ணிய பேன் பூச்சியினாலும் ''இலைப்புள்ளி'' நோயினாலும் மிகவும் தாக்கப்படுகிறது. நாட்டு வெங்காயத்தை விட பெல்லாரி வெங்காயமானது ''இலைப் புள்ளி'' நோயினால் எளிதில் தாக்கப்படுகிறது.

திரிப்ஸ் பூச்சியானது வெங்காயத் தாள்களின் சத்தை உறிஞ்சி விடுவதால் தாக்கப்பட்ட பயிரானது வெளுத்து தண்ணீரில்லாமல் காய்ந்து போன பயிர்போல் காணப்படும். இப்பூச்சியை ஒழிக்க பி. எச். சி. 10 சதம் தூளை எக்கருக்கு 10 கிலோ வீதம் தூவ வேண்டும். அல்லது பி. எச். சி, 50 சதம் மருந்தை 1 கிலோவிற்கு 180 லிட்டர் (40 காலன்) தண்ணீரில் கரைத்து தெளிக்கவேண்டும்.

இலைப்புள்ளி நோயானது ஒருவித பூசணத்தினால் ஏற்படுகிறது. நாற்றங்காலிலும், நட்ட பயிரிலும் இந்நோய் தாக்கினால் அந்த பயிர் முழுவதும் அழிக்கப்பட்டுவிடும். தாள்களில் விழும் கரும்புள்ளிகளின்றும் இந்நோயினைக் கண்டுகொள்ளலாம். இந் நோயைத் தடுக்க ஒரு சத போர்டோ கலவை மருந்தை தெளிக்

கவும். நோயின் தன்மைக்கு தக்கபடி 15 நாட்களுக்கு ஒரு முறையாக இரண்டு அல்லது மூன்று தடவை தெளிக்கவேண்டும்.

அறுவடை :

ஒரு வெங்காயத்திலிருந்து சுமார் 4 முதல் 6 தாள்கள் வெளிவரும். இவை ஒவ்வொன்றும் ஒரு பூச்செண்டு விடும். இப் பூச்செண்டுகளின் மெல்லிய தோல்கள் வழியாக விதைகள் கருப்பாக தெரியும். நடவான 2-ம் மாதத்தில் இப் பூங்கொத்துகள் தோன்றும், தாளோடு அறுத்து இரண்டு நாட்கள் நன்ருக வெய்யிலில் உலர வைத்து, சிறிய கம்புகளால் தட்டியோ அல்லது கைகளால் தேய்த்தோ விதைகளைப் பிரித்து சொத்தை விதைகளையும் தூசிகளையும் தூற்றி விதை தயார் செய்யவேண்டும். தாளை அறுத்த பிறகு பூமிக்குள் இருக்கும் வெங்காயத்தைத் தோண்டி எடுத்து விடவேண்டும்.

மகசூல் :

ஒரு எக்கரிலிருந்து சுமார் 4000 முதல் 5000 கிலோ வரை வெங்காயமும், 300 கிலோ வரை விதை மகசூலும் கிடைக்கின்றன.

விதைப் பயிர் :

விதைக்காக எடுத்து வைத்திருக்கும் வெங்காயம் புதிதாக அறுவடை செய்யப்பட்ட பயிரிலிருந்து எடுத்து சுமார் ஒரு மாத காலம் ஆறவைப்பது நலம். ஒரு எக்கருக்கு சுமார் 1000 கிலோ வெங்காயம் தேவை. விதைக்காக விடப்படும் பயிரின் காலம் சுமார் 5 மாதங்களேயாகும். வெங்காய விதைகள் சிக்கிரமே முளைக்கும் திறனை இழந்துவிடுவதால் ஒரு வருடத்திற்கு மேல் வைத்தால் சரியாக முளைக்காது.

இப்போது வெங்காயத்திற்கு நல்ல கிராக்கி உள்ளது குறுகிய காலத்தில நல்ல மகசூல் கிடைக்கிறது. வீட்டுத் தோட்டங்களிலும் பயிரிடலாம்.

பிரதம மந்திரியின் வறட்சி நிவாரண நிதிக்கு
தாராளமாக நன்கொடையளியுங்கள்.

வறட்சியால் பாதிக்கப்பட்ட நம் நாட்டு மக்களுக்கு உதவுங்கள்.

நன்கொடைகளை ரொக்கமாகவோ, பொருளாகவோ
பின்கண்ட விலாசத்திற்கு அனுப்புங்கள்.

பிரதம மந்திரியின் வறட்சி நிவாரண நிதி,
காபினட் செக்ரடேரியட், ராஷ்டிரபதி பவன்,
புது டில்லி - 4.

பாரதத்தில் முதன் முதலில் தயாராகும், பயிர் ஜீவாணுவில்

ஊடுருவிப்பாயும் பூச்சிமருந்து

ரோகோர்

– பயிர்களுக்குப் புரட்சிகரமான புதிய பாதுகாப்பு!

ரோகோர் என்பது என்ன?

ரோகோர் பாரதத்தில் தயாராகும, பயிர் ஜீவாணுவில் ஊடுருவிப் பாயும், முதல் பூச்சி மருந்து; தனித்தும் நிற்கிறது. பல பயிர்களுக்குப் புரட்சிகரமான பாதுகாப்பு முறையாகும். தெளித்தவுடன் இலைகளாலும் வேர்களாலும் ரோகோர் உறிஞ்சப்பட்டு, தாவரத்தின் உயிர்ச் சாறுடன் கலந்து, தாவரத்தின் எல்லாப் பாகங்களுக்கும் பரவி, செடி முழுவதற்கும் பாதுகாப்பு அளிக்கிறது. இரண்டு வாரங்களுக்கு அது செடியுடன் இணைந்து பணியாற்றும் போது, பயிரின் உயிர்ச் சாற்றைக் குடிக்கும் எந்தப் பூச்சியும் இறந்து விடுகிறது. ரோகோர் பத்திரமான பூச்சி மருந்தாகும் மனித இனத்திற்கு ஆபத்தற்றது.

விவசாயிகளின் வளர்ச்சிக்கான உதவி

ரோகோர் பருத்தி, புகையிலை, மிளகாய், சோளம், நெல், காய்கறி மற்றும் பல நன்செய், புன்செய்ப் பயிர்களுக்குப் பாதுகாப்பளிக்கிறது. பயிரின் எல்லாப் பாகங்களும் பாதுகாக்கப்படுவதால் விவசாயிகள் அமோகமான, உயர்ந்த விளைச்சல் பெற்று பாரதத்தின் விவசாய உற்பத்தியை அதிகரிப்பதில் நற்பணியாற்றுவார்கள்.

இனி பாரதத்தில் தயாராகப் போகிறது

பாரத விவசாயிகளின் தேவைக்குப் பல ரக, சக்தி மிகுந்த பூச்சி மருந்துகளை அளிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ள டாடா-பைஸன் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தார், பாரதத்திலேயே ரோகோர் தயாரிப்பதற்காக ஒரு புதிய தொழிற்சாலையை நிறுவியுள்ளனர். நவீன விஞ்ஞான ரீதியில் விவசாய ரசாயனப் பொருள்களை நம் நாட்டிலேயே உற்பத்தி செய்து இந்திய விவசாயிக்கு அளிப்பதற்காக போடப்பட்டுள்ள திட்டத்தில் இது முதல் படியாகும்.

இத்தாலி, மிலானிலுள்ள மான்டிகேடினி நிறுவனத்தால் ரிஜிஸ்தர் செய்யப்பட்ட ட்ரேட் மார்க் ® ரோகோர்

டாடா-பைஸன் தயாரிப்பு

Benson/I-TFIL-26 TM

வீரிய ஒட்டுச் சோளத்தில் மறுதாம்பு பயிர்

[அ. சண்முக சுந்தரம், சு. தங்கவேலு, வி. மைல்சாமி, சு. சுரேஷ். விவசாயக் கூடம், கோவை.]

இதுவரை கரும்பில்தான் மறுதாம்பு பயிர் (Ratoon crop) என்று கேள்விப்பட்டு இருக்கிறோம். பயிரும் செய்து வருகிறோம். சோளத்தில் கூட அவ்வாறு உண்டா என்று ஆச்சரியப்படுகிறீர்களா? ஆமாம். இந்த ஆண்டு அமுலாக்கப்பட்ட ஒரு தேசிய செயல் முறைப் படி வீரிய ஒட்டுச் சோளத்தில் (சி. எஸ். எச். 1) விடப்பட்ட மறுதாம்பு பயிர் முதல் பயிரைவிட அமோக விளைச்சலை தந்துள்ளது. முதல் பயிரில் ஒரு ஹெக்டருக்கு (2·47 எக்கர்) 5,270 கிலோ தானியமும், மறுதாம்பு பயிரில் 5,950 கிலோ தானியமும் கிடைத்துள்ளன. 6½ மாதச் சாகுபடியில் ஒரு ஹெக்டருக்கு கிடைத்த நிகர லாபம் ரூபாய் 7,057 அதாவது எக்கருக்கு நிகர லாபம் ரூபாய் 2,857. இதன் விவரங்கள். பின் வருமாறு:—

வீரிய ஒட்டுச் சோளத்தை மறுதாம்பு பயிர் விடுவதால் விவசாயச் செலவும் குறைகிறது. விவசாயிக்கு அதிக நிரக லாபமும் அதிகரிக்கின்றது என்று கோவையில் நடந்த ஆராய்ச்சியில் கண்டறியப்பட்டது. இதை நேரடியாக விவசாயிகளுக்கு காண்பிப்பதற்காக, தேசீய செயல் முறையில் (National Demonstration) காண்பிக்க ஒரு திட்டம் சொண்டு வரப்பட்டது.

முதல் பயிர்.—இதன்படி கோவை வேடபட்டியில் உள்ள திரு. ராமசாமி நாயுடு அவர்கள் தோட்டத்தில் ஒரு ஹெக்டர் (2·47 எக்கர்) பரப்பளவில் இத்திட்டம் அமுலாக்கப்பட்டது. நிலத்தை நன்றாக உழுத பிறகு எக்கருக்கு 10 வண்டி எரு வீதம் 25 வண்டி எரு போடப்பட்டு, பாத்திகளாக அமைத்து, அப்பாத்திகளில்

சி. எஸ். எச். 1. மறுதாம்பு பயிர்.

1½ அடி இடைவெளியில் சிறிது ஆழமாக கோடுகள் இழுக்கப்பட்டன. 225 கிலோ அம்மோனியம் சல்பேட்டையும், 284 கிலோ சூபர் பாஸ்பேட்டையும் (ஹெக்டருக்கு 45 கிலோ தழைச்சத்து, 45 கிலோ மணிச்சத்து அளவில்) ஒன்றாகக் கலந்து கோடு இழுக்கப்பட்ட வரிகளில் ஒரே அளவாகப் போடப்பட்டு, 1966-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28–ம் தேதியில் 12½ கிலோ வீரிய ஒட்டுச்சோள விதை (C.S.H. 1) விதைக்கப்பட்டது. இருபத்திரண்டு நாட்களுக்குப் பிறகு கொத்திகளை பறித்து, வரிசையில் செடிக்கு செடி 6 அங்குல இடைவெளி விட்டு மற்ற பூச்சி கொல்லி மருந்துகள் தெளிக்கப்பட்டன அல்லது தூவப்பட்டன. கதிர் 1966-ம் ஆண்டு ஜூன் மாதம் 3-ம் தேதி அறுவடை செய்யப்பட்டது. இதில் கிடைத்த மகசூல் 5,270 கிலோ தானியமும், 16,158 கிலோ தட்டும் ஆகும். அதாவது எக்கருக்கு 2,134 கிலோ தானியமும், 6,542 கிலோ தட்டும் ஆகும்.

மறுதாம்பு பயிர்.—முதல் பயிர் கதிர் அறுவடை முடிந்தவுடனே சோளத்தட்டு தரை மட்டத்துக்கு அறுக்கப்பட்டு தண்ணீர் பாய்ச்சப்பட்டது. 1966-ம் ஆண்டு

விவசாயக் கல்லூரி நுண்ணறிஞர்கள் அறுவடையைப் பார்வையிடுதல்.

செடிகள் களையப்பட்டன. 1966-ம் ஆண்டு எப்ரல் மாதம் 5-ம்தேதியில்அதாவதுஒருமாதத்திற்குப் பிறகு மறுபடியும் 225 கிலோ அம்மோனியம் சல்பேட்டு போட்டு தண்ணீர் பாய்ச்சப்பட்டது. மொத்தத்தில் விதைத்த நாளிலிருந்து அறுவடைவரை ஒன்பது முறை தண்ணீர் பாய்ச்சப்பட்டது.

குருத்துப் பூச்சி, தண்டுப் புழு, சிவப்புபேன், மிட்ஜ், நாவாய்ப் பூச்சி போன்றவைகள் பயிரைத் தாக்காமல் இருக்க 1966-ம்ஆண்டு மார்ச்மாதம்11-ம்தேதியில் இருந்து 1966-ம் ஆண்டு மே மாதம் 14-வரை எட்டு முறைகள் ஜூன் மாதம்18-ம் தேதியில் கொத்தி களை எடுத்தபிறகு, தண்டின் அடியில் இருந்து முளைத்த குருத்துக்களில் (Sprouts) கீழ்க்கணுவில் உள்ள இரண்டு அல்லது மூன்று வளமான குருத்துக்களை மட்டும் விட்டு விட்டு, மற்றவை எல்லாம் நீக்கப்பட்டன. 170 கிலோ அமோனியம் சல்பேட்டு போடப்பட்டு தண்ணீர் பாய்ச்சப்பட்டது. ஒரு மாதம் கழித்து மறுபடியும் 170 கிலோ அமோனியம் சல்பேட்டு போடப்பட்டது. முதல் பயிருக்கு செய்ததைப் போலவே, ஆனால் ஐந்து முறைகள் மட்டும், பூச்சிக் கொல்லி மருந்துகள் தெளித்தும், தூவியும்

பயிர் பாதுகாப்பு முறைகள் கையாளப்பட்டன. ஐந்து முறை தண்ணீர் பாய்ச்சப்பட்டது. இப்பயிர் 1966-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 12, 13 தேதிகளில் அறுவடை செய்யப் பட்டது. இந்தப் பயிரில் கிடைத்த மகசூல் எவ்வளவு தெரியுமா? 5,950 கிலோ தானியமும் 15,734 கிலோ தட்டும் ஆகும். முதல் பயிரைவிட 680 கிலோ தானியம் அதிகமாகக் கிடைத்துள்ளது. பயிர் செலவு, முதல் பயிரின் செலவில் பாதிகூட ஆகவில்லை.

முதல் சோளப் பயிரிலும் இரண்டாவது சோளப் பயிரிலும் சேர்த்து விவசாயிக்கு 6½ மாதத்தில் எவ்வளவு நிகர லாபம் கிடைத்தது தெரியுமா? ஹெக்டருக்கு 2·47 எக்கர்) ரூபாய் 7,057 ஆகும். அதாவது எக்கருக்கு ரூபாய் 2,857 ஆகும்.

செலவினம்.	முதல் பயிர்.	மதாம்பு பயிர்.	மொத்த செலவு.
மகசூல்.—			
	கிலோ.	கிலோ.	கிலோ.
தானியம்	5,270	5,950	11,220
தட்டு	16,158	15,734	31,892
மகசூல் மதிப்பு:—			
	ரூ. பை.	ரூ. பை.	ரூ. பை.
தானியம் கிலோவுக்கு 67 பைசா வீதம் ..	3,530 90	3,986 50	7,517 40
தட்டு டன்னுக்கு ரூ. 50 வீதம் ..	807 90	786 90	1,594 60
மொத்த வருமானம்	4,338 80	4,773 20	9,112 00
நிகர லாபம் ..	2,868 65	4,187 85	7,056 50

சி. எஸ். எச். 1. மறுதாம்புப் பயிரும், விவசாயிகளும்.

விவசாயின் பயிர் செலவு கணக்குகள் பின்வருமாறு :—

செலவினம்.	முதல் பயிர். ரூ. பை.	மறுதாம்பு பயிர். ரூ. பை.	மொத்தம். ரூ. பை.
உழுதல், பாத்தி அமைத்தல் ..	178 00	..	178 00
விதையும், விதைத்தலும்	124 00	..	124 00
உரமும், உரம் போடுதலும் ..	407 65	174 35	582 00
களை பறித்தல் கொத்துதல், களைத்தல் ..	141 00	146 00	287 00
பயிர் பாதுகாப்பு முறைகள் ..	242 00	75 50	317 50
பாசனச் செலவு (மின்சாரச் செலவு உட்பட) ..	112 50	38 00	150 50
அறுவடை, அடித்தல், தூத்துதல் ..	265 00	151 50	416 50
மொத்தம்.	1,470 15	585 35	2,055 50

மறுதாம்பு பயிரின் ஒரு தண்டில் மூன்று வளமான கதிர்கள் (தூர் வெளுத்திருப்பதைக் காட்டும் புகைப் படம்) இருப்பதைப் படத்தில் காணலாம். மறுதாம்பு பயிரின் தோற்றத்தையும் அப்பயிர் அறுவடை ஆகும் பொழுது கோவை விவசாய ஆராய்ச்சிக் கூடத்தின் பயிர் நுண்ணறிஞர்கள் பார்வையிடுவதையும் பக்கத்தில் உள்ள படங்களில் காணலாம்.

இந்த செயல் முறை விளக்கம் எவ்வாறு வீரிய ஒட்டுச் சோளத்தின் மகசூலை நவீன விஞ்ஞான முறைப்படி சாகுபடி செய்தால் அதிகரிக்க முடியும் என்று திட்டவட்டமாக நிரூபித்துவிட்டது. மேலும், வீரிய ஒட்டுச் சோளத்தையும், கரும்புபோல் மறுதாம்பு பயிராக விட்டால் அமோக விளைச்சலைப் பெற முடியும் என்றும் தெளிவாகத் தெரிகிறது.

இந்த மறுதாம்பு முறையினால் மேலும் பல நன்மைகள் உள்ளன. சாகுபடி செலவும், உழைப்பும் குறைகின்றன. அதே சமயத்தில் வீரிய ஒட்டுச் சோள

ஏக்கருக்கு 4255 கிலோ நெல் விளைவித்த ரகசியம்

[சொ. இராமச்சந்திரன், பி. எஸ். சி. (விவசாயம்) விவசாய விஸ்தரிப்பு அலுவலர் பஞ்சாயத்து யூனிய்ய, பாளையங் கோட்டை.]

திருநெல்வேலி மாவட்டத்தில் பாளையங்கோட்டை பஞ்சாயத்து யூனியன் பகுதியில் தாமிர பரணி ஆற்றின் கரையில் அமைந்தது கீழ நத்தம் கிராமமாகும். இந்தக் கிராமத்தைச் சேர்ந்த திரு. ந. கோபால சீனிவாசன் என்ற விவசாயி 1965–56-ஆம் வருடத்தில் ஏக்கருக்கு 4,255 கிலோ நெல் (32¾ கோட்டை) விளைவித்திருக்கிறார். இவர் 1964–65–ஆம் வருடம் ஏக்கருக்கு 3303 கிலோ நெல் விளைவித்து மாநில பயிர் விளைச்சல் போட்டியில் முதற் பரிசை பெற்றிருக்கிறார்.

சில வருடங்களுக்கு முன் வயலுக்கு சூப்பர் பாஸ்பேட் உபயோகிப்பதால் கதிர் சாம்பலாகிவிடும் என்றும், இரும்பு கலப்பைகளால் தன்னிடமுள்ள மாடுகளை வைத்து உழவு செய்ய முடியாது என்று எண்ணிக் கொண்டிருந்து விவசாயி படிப்படியாக திருந்திய சாகுபடி முறைகளைக் கையாண்டதால்தான் அதிக விளைச்சல் உண்டு பண்ண முடிந்தது.

திரு. ந. கோபால சீனிவாசன் அவர்களுக்கு கீழ நத்தம் கிராமத்தில் சுமார் 15–00 ஏக்கர் இருபோக நஞ்சை நிலம் இருக்கிறது. இந்த நிலங்கள் தாமிர பரணி ஆற்றிலிருந்து வரும் பாளையங்கால் மூலம் நேரடிப் பாசனம் பெறுகிறது. இந்த நிலங்களில் கார் பருவத்தில் அம்பாசமுத்திரம் சம்பாவும் (ஏ.எஸ்.டி. 1) பிசானத்தில் குலே நோய் தாக்காத சிறுமணியும் (கோ. 25) கார்த்திகை சம்பாவும் (ஏ.எஸ்.டி.5) பயிரிடுவது வழக்கம்.

அதிக விளைச்சலுக்கான ரகசியம்

1. சிறந்த நாற்றங்கால் தயாரிப்பு.—ஏக்கருக்கு 10 செண்டு வீதம் நாற்றங்காலை தயார் செய்து 10 செண்டுக்கு 2 வண்டி தொழு உரம் போட்டு கிலோவுக்கு 2 கிராம் வீதம் அக்ரசான் கலந்த 20 கிலோ பொறுக்கு விதை கோ. 25 நெல் விதை நாற்று பாவியது.
2. நடுகை வயல் தயாரிப்பு.—நடுகை வயலை இரும்பு கலப்பைகள் வைத்து ஆறு முறை உழுது ஏக்கருக்கு 4 வண்டி தழை உரம் போட்டது (சுமார் 2,300 கிலோ).
3. உரமிடுதல்.—மண் பரிசோதனையின் முடிவுப்படி நடும் முன்பு ஏக்கருக்கு 100 கிலோ சூப்பர் பாஸ்பேட்டும் 70 கிலோ அமோனியம் சல்பேட் உரமும் போட்டது. மேல் உரமாக நட்ட 40-ஆம் நாளில் 70 கிலோ அமோனியம் சல்பேட் உரம் போட்டது.
4. பயிர்ப் பாதுகாப்பு.—நாற்று பறிக்க 10 தினங்களுக்கு முன்பு பாரத்தியான் மருந்தும் காப்பர் பங்கிசைடு மருந்து கலந்த கலவை ஒரு முறையும். நட்ட 25-ஆம் நாள் ஒரு முறையும் இயந்திர மருந்து தெளிக்கும் கருவி மூலம் மருந்தடித்தது.

மேற்கண்ட திருந்திய சாகுபடி முறைகள் தான் அவரது அதிக விளைச்சலுக்குக் காரணம். அந்த இரகசியம் நம் மாநிலத்தில் எல்லா விவசாயிகளுக்கும் நெல் உற்பத்தியைப் பெருக்க உத்வேகம் தரும் மந்திரமாக அமையட்டும்.

விதையைச் சிக்கனமாக உபயோகிக்க முடியும். ஆகையால் இருக்கும் விதையைக் கொண்டே, இரண்டு மடங்கு வீரிய சோள சாகுபடி செய்யலாம். வீரிய ஒட்டுச் சோள விதை கிடைப்பது அரிதான காலத்தில் இது சிறந்த சிக்கன முறையல்லவா? இந்த முறையைப் பின்பற்றுவதில் வேளாண்மைப் பெருமக்கள் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது ஒன்று. வீரிய ஒட்டுச் சோள விதையைப் பிப்ரவரி 15-ஆம் தேதிக்கு மேலும் மார்ச்சு முதல் தேதிக்குள்ளும் விதைத்துவிடவேண்டும். அப்படி விதைத்தால் கீழே கண்டவாறு ஒரு வருடத்தில் மூன்று பயிர்கள் சாகுபடி செய்யலாம்.

பயிர் (1)	விதைப்பு (2)	அறுவடை (3)
சி. எஸ். எச். 1 சோளம்.	பிப்ரவரி 15-க்கு மேல் மார்ச்சு முதல் தேதிக்குள்.	மே 15-ம் தேதிக்கு மேல் 30-ம் தேதிக்குள்.
சி. எஸ். எச். 1 மறுதாம்பு சோளம்.	—	ஆகஸ்டு 5-ம் தேதிக்கு மேல் 20-ம்தேதிக்குள்
ருஷ்யப்பருத்தி	செப்டம்பர் 1-ம் தேதிக்குமேல் 10-ம் தேதிக்குள்.	ஜனவரி 15-ம்தேதிக்குமேல் பிப்ரவரி 5-ம் தேதிக்குள்.

விவசாயப் பெருமக்கள் அடுத்த பருவத்தில் இம்முறையைக் கடைபிடித்து, அதிக இலாபம் பெறுவதோடு, நாட்டின் உணவு, பருத்தி ஆகிய இரண்டின் உற்பத்தியையும் பெருக்குவார்கள் என்பதில் ஐயமில்லை.

பாழ் நிலம் பொன் விளையும் பூமியானது!

மதுரை பி.சி.எம். பண்ணையில் முன்னூறு எக்கர் கட்டாந்தரை பண்ணை முதலாளி—கணபதி செட்டியாருக்கு ஒரு பிரச்னையாக இருந்தது.

இந்த முன்னூறு எக்கராவிலிருந்து அவருக்கு ஆண்டுக்கு முன்னூறு ரூபாய் வருமானம் கிடைத்து வந்தது—பயிரிலிருந்து அல்ல, மேலே இருந்த உவர் மண்ணை சலவைக்குச் சுரண்டி எடுத்துச் சென்ற சலவைத் தொழிலாளர் மூலம் கிடைத்தது !

உவர் படிந்த பூமியை செட்டியார் வாங்கி முதலாளி நோக்குக் கொண்டு கவனித்தார். நரியைப் பரியாக்கிய விந்தையைவிட ஒரு விந்தையைச் செய்துகாட்டி விடுவது என்று கணபதிச் செட்டியார் கங்கணம் கட்டிக்கொண்டார்.

நல்ல விவசாயிக்கும் கெட்ட நிலத்துக்கும் போட்டி வந்தால் வெற்றி என்றும் நல்ல விவசாயிக்குத்தான் ! உவரை அவர் சாகுபடிக்கு எற்ற நிலமாக்கிவிட தீர்மானம் செய்து கொண்டார். “நல்ல காசை உருப்படா உவரில் புதைக்காதே” என்று செட்டியாரை நண்பர்கள் சிலர் அதைரியப்படுத்தினர்.

“என்னாலானதைச் செய்து பார்த்து விட்டேன் என்ற திருப்தி எனக்கு வேண்டும். அதற்கு மேலும் நிலம் திருந்தாவிட்டால் அது என் தவறல்ல. அதனால் பாதகமில்லை என்று துணிந்து இறங்கினேன்.” இதுதான் கணபதி செட்டியார் சொன்னது. அவரது முயற்சி, சங்கல்பம் வீண் போகவில்லை. அதற்கு இப்பொழுது அவரின் நிலத்தில் விளைந்து நிமிர்ந்து நிற்கும் சி.எஸ்.எச். 1 சோளம், கரும்பு, நெல் ஆகியவை சாட்சி.

மதுரை—சிவகங்கை சாலையில் மதுரையிலிருந்து ஆறு மைல் தூரத்தில் வீரபஞ்சான் கிராமத்தில் கணபதி செட்டியாரின் இந்தத் தோட்டம் இருக்கிறது. முன்னூறு எக்கரிலிருந்து திருத்தப்பட்ட 130 எக்கரில் செட்டியார்

கரும்பு, நெல், வீரியச் சோள விதைப்பயிர் இவைகளை சாகுபடி செய்கிறார்.

மேலும் நிலம் சீர்திருத்தப்பட்டு வருகிறது. சுற்றி இன்னும் சீர்திருத்தப்படாத உப்புப் படிந்த மண் கணபதி செட்டியாரின் பார்வைக்குப் பயந்து கிடப்பதைப்போல் இருக்கிறது. 1945-ல் இந்த நிலத்தைச் சீந்துவாரில்லை. ஆனால் இப்போது எக்கர் ஒன்று ரூ. 4,000 மதிப்புப் பெறும். 130 எக்கரின் மதிப்பு....?

"பாக்கி நிலத்தையும் சாகுபடிக்கு இலாயக்கான நிலமாக்கி விடுவதாகத்தான் முடிவு. இதற்கு செலவும் சிரமமும் அதிகம். ஆனால் நாட்டில் தானியமும் கூடுதலாக வேண்டும் என்ற பிரச்னை இருக்கும்போது செலவைப் பார்த்தால் சரியாகுமா? என்கிறார் திரு. கணபதி செட்டியார். சுமார் ரூ. 2 லட்சம் வரை இது வரை உவரை திருத்துவதில் செலவாகியிருக்கிறது. இதைப் போட்டு நல்ல வளமான நிலமே வாங்கியிருக்கலாமே எனக் கேட்கலாம். இதற்கு கணபதி செட்டியாரின் பதில் "நல்ல நிலத்தில் சாகுபடி செய்வது யாரும் செய்யக்கூடிய ஒன்றுதான். ஆனால் நாட்டின் இன்றைய நிலையில் அடங்காப் பிடாரி நிலத்தை வகைப் படுத்தும் சிரமத்தை ஏற்றுக் கொள்வது எத்தனை பேர்?"

நிலத்தை புல்டோஸர்கள் மூலம் மட்டப்படுத்தி, ஆழ உழுது, குளத்து வண்டல்; பசுந்தாள் உரமிட்டு சீர்திருத்தினார் செட்டியார். மேலும் தொடர்ந்து அதிகப் பரப்பு சீர்திருத்தம் செய்யப்பட்டு வருவதால் பல நிலைகளில் சீர்திருத்தமடைந்த பாத்திகளைக் காணலாம்.

தேசீய விதை கார்ப்போரேஷனால் வீரியச் சோள விதை உற்பத்திக்காக கணபதிச் செட்டியாரின் பி. சி. எம். பண்ணை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. ஸி.எஸ்.எச். 1 பயிர் 9½ எக்கராவில் செழித்து நின்றது.

"இது இன்னும் உயர்ந்த வகையில் இருக்க வேண்டியது. ஆனால் ஆண் செடிகளும் பெண் செடிகளும் சமகாலத்தில் மலரவில்லை. இதற்கு காரணம் கடும் கோடையும், வரட்சியும். அடுத்த ஆண்டு ஆண் விதைகளை 5 தினங்கள் முன்னர் விதைப்பதாக உத்தேசம். அடுத்த ஆண்டு அதிகப் பரப்பில் விதைத்து அதிக மகசூல் எடுப்போம்" என்றார் பண்ணை மானேஜர் முத்துசுவாமி. இவர் ஒரு ஓய்வு பெற்ற விவசாய இலாகாவின் டிபுடி டைரக்டர். கணபதி செட்டியார் வர்த்தக பண்புள்ளவர். விவசாயத்தையும் வர்த்தகம்போல திறமையுள்ளவர்களைக் கொண்டு நடத்த விரும்புகிறவர். அதனால் ஓய்வு பெற்ற உயர் விவசாய நிபுணர் ஒருவரை பண்ணை மானேஜராக அமர்த்தியுள்ளார். "யார் வயலை கவனித்தாலும் கவனிக்காவிட்டாலும் எனக்கு ஒரு தடவையாவது வயலை தினந்தோறும் பார்க்காவிட்டால் தூக்கம் வராது. இரவு எந்நேரமானாலும் வயலுக்குப் போய் காரின் விளக்கொளியிலாவது பயிரைப் பார்த்துவிட்டுத்தான் வருவேன். என்னோடு வளர்ந்த நிலத்தில் எனக்கு அதிகப்பற்று" என்றார் செட்டியார்.

விதைச் சோளம் பயிரிட அவர் கையாண்ட முறையாவது:- வயலை மூன்று தடவைகள் உழுது பார்களும் சால்களும் அமைத்தார் இடைவெளி மூன்று அடி விடப்பட்டது. மார்ச்சு 13-ம் தேதி சோளம் ஆண், பெண் விதைகளை விதைத்தார். அடுத்த ஆண்டு சற்று முன்னர் விதைப்பார்.

விதைப்பதற்கு முன் எக்கருக்கு 30 ராத்தல் நைட்ரஜன், 60 ராத்தல் பாஸ்வர அமிலம், 30 ராத்தல் பொட்டாஷ் போட்டார். 35 நாட்களுக்குப் பிறகு 60 ராத்தல் நைட்ரஜன் இட்டார். பயிருக்கு மண் அணைத்தார். வயல் ஓரங்களில் நான்கு வரிசைகள் ஐ. எஸ். 84 ஆண் வரிசை விதைக்கப்பட்டது. இந்த வரிசைகளில் உள்புர வயல் பாகத்தில் நான்கு எம்.எஸ்.ஸி.கே. 60–எ பெண் வரிசைகள் இரண்டு ஆண் வரிசை ஐ.எஸ். 84 என்று மாற்றி மாற்றி நடவு செய்யப்பட்டது. வாரம் ஒரு தடவை பாசனம் செய்யப்பட்டது.

பத்து பன்னிரண்டு நாட்களுக்கு ஒரு முறை என்டிரினும் மெடாலிஸ்டாக்ஸும் மாற்றி மாற்றித் தெளிக்கப் பட்டது. ஒரே மருந்தைப் பயன் படுத்தினால் பூச்சிகள் அந்த மருந்தை தாங்கக்கூடிய சக்தி பெற்றுவிடும் என்பதற்காக இரண்டு மருந்துகள் பயன்படுத்தப்பட்டன. இவ்வாறு 4 தடவைகள் மருந்தடிக்கப்பட்டது. மேலும் 55 லிட்டர் தண்ணீரில் அரை கிலோ கிராம் கந்தகம் கரைத்து அடிக்கப்பட்டது. கதிர் பூச்சி, கம்பளி பூச்சி வராமலிருக்க பி.எச்.சி. 10 சத விகிதம் பொடி தூவப் பட்டது.

இரண்டு தடவைகள் களையெடுக்கப்பட்டது. மகரந்தம் உதிர்க்கும் பெண் செடிகளையும், வகை மாறிய செடிகளையும் களைந்து எறிந்தார்கள். "சரியான நேரத்தில் மலர்ந்த நல்ல பயிர் எக்கருக்கு 400 கிலோ விதைச் சோளம் தரும். இதனால் வருமானம் ரூ. 2,400. தவிர 1,200 கிலோ உணவுச் சோளமும் கிடைக்கும். இதன் விலை ரூ. 600. சாகுபடிச் செலவை கழித்தால் நிகர லாபம் ரூ. 2,300 கிடைக்கும்" என்றார் மானேஜர் முத்துசுவாமி.

கணபதி செட்டியாரின் சகோதரர்கள் பாலகிருஷ்ணனும் சுந்தர பாண்டியனும் ஆஸ்திரேலியாவுக்கும், அமெரிக்காவுக்கும் சென்று உயர்முறை விவசாயத்தை கொழும்புத் திட்டத்தின்கீழ் அறிந்து வந்தவர்கள். இவர்கள் பண்ணையில் உயர்தர விவசாயம் செய்வதற்கு இது ஒரு முக்கியக் காரணமாகும்.

இந்தப் பண்ணையை விவசாய இலாக்காவும், உர கம்பெனிகளும் நிரூபண விவசாயம் செய்து காட்ட அடிக்கடி தேர்ந்தெடுக்கிறார்கள். சுற்றியுள்ள ஊர்களிலுள்ள விவசாயிகளுக்கு இந்த நிரூபணங்கள் படிப்பினையை தந்து பலனளிக்கிறது.

வாசனைத்திரவியங்கள் வரிசையிலே......



பண்டைக் காலத்திலிருந்தே வாசனைத் திரவியங்களுக்கும் பெயர் பெற்றது தமிழ்நாடு, நாட்டின் வளம் பெருக்கும் ஏற்றுமதிப் பொருள்கள் இவ்வாசனைத்திரவியங்கள். அவைகளுக்கு அன்று மட்டுமல்ல இன்றும் நல்ல மதிப்பும், விலையும் இருக்கின்றன. நீலகிரி, ஆனைமலை, கொடைக்கானல், கன்னியாகுமரி, திருநெல் வேலி மலைப்பகுதிகளில் பல் வகையான வாசனைப் பயிர்களைப் பரப்ப நல்ல வாய்ப்பிருக்கிறது. அப்பகுதி களில் நிலம் படைத்தோருக்கு உதவும் பொருட்டும் நம் நாட்டின் செல்வத்தைப் பெருக்கும் ஏற்றுமதி பண்டங்களின் சிறப்பை விளக்கவும் வாசனைத் திரவியங்கள் வரிசை மேழிச்செல்வத்தில் தொடங்கப்படுகின்றது. வரிசை அடுத்த இதழ்களிலும் தொடரும், படியுங்கள் பயன் அடையுங்கள்.

கட்டுரைகள் : தோட்டக்கலை நிபுணர், கோவை.

2. ஜாதிக்காய்

ஜாதிக்காய் வாசனைப் பொருள்களில் மிக முக்கிய மானது. அயல்நாட்டுச் சந்தைகளில் அதிக மதிப்பும் நல்ல விலையும் இருந்தபடியால் ஒரு காலத்தில் தங்கத் துக்கு அடுத்தபடியாக இந்த வாசனைப் பொருள்களின் மதிப்பு ஏறிவிட்டது. தற்பொழுதும் அதன் மதிப்பு குறையாதிருத்தல் அதன் தனிச் சிறப்பாகும்.

ஜாதிக்காய் மரங்களின் தாயகம் "மொலுக்காஸ்" தீவுகளாகும். கி. பி. 12-ம் நூற்றுண்டிலேயே ஐரோப்பா வெங்கும் அதிக புகழ்பெற்று விட்டது. அதன் சிறப்பை உணர்ந்த பிரஞ்சுக்காரர்கள் பதினெட்டாம் நூற்றுண் டில் அவர்களது ஆட்சியின் காலத்தில் இந்தியாவில் பயிரிட ஆரம்பித்தனர். இப்போது இந்தோனேஷியா, மேற்கிந்திய தீவுகள், மலேயா, இலங்கை, மடகாஸ்கர் ஜான்சிபார் போன்ற நாடுகளில் அதிகமாகப் பயிராகிறது, இந்தியாவில் சுமார் 300 ஏக்கர் அளவில் பயிராகிறது. தமிழ்நாட்டில் நீலகிரிமலை அடிவாரத்திலும், தென்காசி பிராந்தியங்களிலும், கேரளத்தில் கடற்கரை பிராந்தியங் களிலும் பயிரிடப்படுகிறது. மைசூர், வங்காளம் போன்ற மாநிலங்களிலும் தனி மரங்கள் காணப்படுகின்றன. பயிரிடுவதற்குரிய வசதிகள் யாவும் இருந்தபோதிலும் நம் நாடு பின்தங்கிய நிலையில்தான் உள்ளது.

தமிழ்நாட்டில் ஜாதிக்காய் சாகுபடியில் முன்கவனம்

முழுவளர்ச்சி பெற்ற மரம் கீழ்ப்பகுதிகளில் அடர்ந்த கிளைகளுடன் சுமார் 60 அடி உயரம் வரை இருக்கும். அவைகளில் ஆண் மரங்கள், பெண் மரங்கள் என்று தனித்தனி மரங்கள் உள்ளன. இவைகளைப் பூக்கு முன்பு பிரித்தறிவது கடினம். ஆகவே தனித்தனியாகப் பயி ரிடுவதைக் காட்டிலும் தோப்பாகப் பயிரிடுவது சிறந்தது. அவைகளில் ஆண் மரங்கள் 30 சதவீதமே இருக்கும். அதனால் மரங்களின் காய்ப்புத்திறன் அதிகரிக்குமே யொழிய நட்டம் ஏற்படாது. இவற்றைத் தவிர்க்க பெண் மரங்களிலிருந்து ஒட்டுகள் மூலம் இனவிருத்தி செய்ய லாம்.

பருவம்

ஜாதிக்காய் மரங்களும் கிராம்பு போலவே ஈரப்பசை யுள்ள தட்பவெப்ப நிலையை விரும்புகின்றன. கடல் மட்டத்திலிருந்து சுமார் 3,000 அடி வரை செழித்து வளருகின்றன. மழை அளவு 40 அங்குலத்திற்குக் குறையாத பிரதேசங்களில்தான் பயிரிட முடியும். அதிக மழையுள்ள பிரதேசங்களில் இவைகளின் வளர்ச்சி சிறந்து விளங்கும். ஆண்டில் விட்டுவிட்டு மழை பெய்யும் பிரதேசங்களில் ஏற்றது.

மண்

ஜாதிக்காய் மரங்கள் மணல் கலந்த செம்புறை மண்ணிலும், சத்துள்ள காட்டு மண்ணிலும் செழித்து வளர்ந்து செல்வத்தைப் பெருக்குகின்றன. வடிகால் வசதிகள் வளர்ச்சிக்குத் துணை புரிகின்றன.

விதையும் நடவும்

ஜாதிக்காய் மரங்கள் விதைகளின் மூலம்தான் அதிக அளவில் பயிராக்கப்படுகின்றன. வெடித்த பழங்களி லிருந்து விதைகளைச் சேகரித்து உலருவதற்கு முன்பாக நிழலில் அமைத்த விதைப் பாத்திகளில் 12 அங்குலம் இடைவெளி விட்டு போடவேண்டும். விதைத்த 17—30 நாட்களில் விதைகள் முளைக்க ஆரம்பிக்கின்றன. வேண்டிய அளவிற்கு நீர்ப்பாய்ச்ச வேண்டும். நாற்றுகள் விதை விதைத்த ஓராண்டு காலத்தில் நடுவதற்குத் தயாராகின்றன. நடுவதற்கு ஒரு மாத காலத்திற்கு முன்பே 3 அடி நீள அகல குழிகளை வெட்டி ஆறப் போட வேண்டும். பிறகு கம்போஸ்ட் அல்லது தொழு உரம் காட்டு மேல் மண்ணுடன் சரியளவில் கலந்து குழிகளில் போட்டு மூட வேண்டும். பொதுவாக மழைக் கால ஆரம்பத்தில் அதாவது ஜூன், ஜூலை மாதங்களில் செடிகளை நடவேண்டும்.

உரமிடல்

மண்ணில் இருக்கும் எருவை எடுத்துக்கொள்ளும் திறன் ஜாதிக்காய் மரத்திற்கு அதிகம். செழுமை குறைவாக உள்ள பகுதிகளில் எல்லாவிதமான எருக்களையும் ஏற்ற அளவில் சேர்க்கவேண்டும். நீலகிரிமலை அடிவாரத்தில் உள்ள ஜாதிக்காய் தோட்டங்களில் மரம் ஒன்றுக்கு 50 முதல் 100 பவுண்டு வரை தொழு உரம் கொடுக்கப் படுகிறது.

நோயும் பாதுகாப்பும்

மற்ற செடிகொடிகளுக்கு வருவதுபோல் இவற்றுக்கு எளிதில் நோய் வந்துவிடாது. அடிமரங்களின் மேல் பாசி படர்தலும், அட்டைகள் ஒட்டுவதும் காணப்படு கின்றன. அடிமரங்களை மூங்கில் பட்டைகளால் சுரண்டி சுண்ணாம்பு அடிப்பதன்மூலம் இவைகளை நிவர்த்திக்கலாம். காய்கள் முற்றுவதற்கு முன்பே ஒருவித நோயினால் தாக்கப்பட்டு கீழே உதிர்கின்றன. இதைத் தடுக்க போர்டோ கலவையை அடிக்கலாம்.

மகசூலும் லாபமும்

தென்னிந்தியாவில் செடிகள் நட்ட 6 முதல் 8 ஆண்டு களில் பலனுக்கு வருகின்றன. முழுதும் பலனளிக்க பதினைந்து ஆண்டுகள் மரம் வளர வேண்டும். ஜாதிக்காய் அறுவடைக்கு ஒரு குறிப்பிட்ட காலத்தை சொல்வதற் கில்லை. என்றாலும் ஜூலை முதல் டிசம்பர் வரை அதிக அளவு அறுவடையாகின்றன. மரத்தில் ஆண்டு முழுதும் காய்கள் காணப்படும். மரம் ஒன்றுக்கு சராசரி 2,000— 3,000 காய்கள் கிடைக்கும். இவற்றிலிருந்து சுமார் 20 முதல் 30 பவுண்டு ஜாதிக்காய் விதைகளும், 1½ பவுண்டு ஜாதிப்பத்திரியும் கிடைக்கும். சில மரங்கள் மேலே கொடுத்துள்ள அளவுக்கு இரண்டு மடங்கு பலன், கொடுக்கும் தன்மை உடையனவாக இருக்கின்றன. இவற்றின் விலை சுமார் ரூ. 180 முதல் 200 ஆகும். எனவே ஒரு ஏக்கர் பயிரிலிருந்து ஆண்டொன்றுக்கு ரூ. 7,500 முதல் 10,000 வரை நிச்சயம் எதிர்பார்க்க லாம்.

முற்றிப் பழுத்த ஜாதிக்காய்கள் இளமஞ்சள் நிறத்தில் கோழி முட்டை உருவத்தில் இருக்கும். காயின்மேல் நடுபாகத்தில் நீளவட்டத்தில் ஒரு கோடு தெரியும். நன்றாக விளைந்தவுடன் இந்த கோட்டில் காய் இரண்டாகப் பிளந்து வெடிக்கும். அதற்குள் “ஜாதிக்காய்” இருக் கும். அதன்மேல் சிவப்பு நிறத்தில் ஒரு சிறு தோல் போன்றது உடம்பில் நரம்பு பதிந்திருப்பது போல் அழுத்தமாக ஒட்டிக்கொண்டிருக்கும். இதைத்தான் “ஜாதிப்பத்திரி” என்பார்கள். இவற்றின் எல்லாப் பகுதிகளுமே பயன்படுத்தப்படுகின்றன.

ஜாதிக்காயின் பயனும் சிறப்பும்

ஜாதிக்காயின் எல்லாப் பகுதிகளுமே பயன்படுத்தப் படுகின்றன. தடித்த மேல் ஓட்டை ஊறுகாய் தயாரிப்பில் உபயோகிக்கலாம். ஜாதிக்கொட்டை, ஜாதிப்பத்திரி போன்றவற்றிலிருந்து எண்ணெய் எடுக்கிறார்கள். இது மருந்துப் பொருளாகும். வாசனைப் பொருள்கள், மருந்துப் பொருள்கள், மற்றும் மிட்டாய், சோப்பு முதலியவைகள் தயாரிக்கப் பயன்படுத்தப்படுகிறது. பல் சம்பந்தமான நோய்களுக்கு உபயோகமாகும் மருந்துகள் தயாரிப்பிலும் முக்கிய பங்கு வகிக்கின்றது.

இப்பயிர்ச் சாகுபடியை விஸ்தரிக்கும் வாய்ப்பு நீலகிரி மலையின் அடிவாரத்திலும், தென்காசி, கன்னியாகுமரி மாவட்டங்களிலும் நிலவசதியுள்ள விவசாயிகளுக்கு அதிக அளவில் உண்டு.

3. இலவங்கப்பட்டை

நீண்ட காலமாக பழக்கத்தில் இருந்து வரும் வாசனைப் பொருள்களுள் இலவங்கப்பட்டையும் ஒன்றாகும். இது ஒரு சிறு மர வகுப்பைச் சேர்ந்த தாவரத்தின் பட்டை யாகும். இலவங்கம் (கிராம்பு) போன்று மருந்து உற் பத்தியிலும், வாசனைப் பொருள்கள் உற்பத்தியிலும் தலைசிறந்த பங்கு வகிக்கின்றன. தவிர, இலவங்கம் போன்று மணமும், ஓரளவு சுவையும் பெற்றிருப்பதால் இப் பெயர் பெற்றது போலும். ஆனால் இப் பட்டைக்கும் இலவங்கத்திற்கும் எந்த சம்பந்தமுமில்லை.

பன்னிரண்டாம் நூற்றுண்டில்தான் வாசனைப் பொருள்கள் பெருமளவில் உபயோகப்படுத்தப்பட்டுள்ளன. நாளடைவில் அவைகளின் விலை அதிகரிப்பதாலும், செயற்கை வாசனைப் பொருள்கள் உபயோகத்திற்கு வந்தமையாலும் இவ்வாசனைப் பொருள்களின் உபயோகம் கணிசமான அளவிற்குக் குறைந்தது. ஆனாலும் இப் பட்டை உபயோகிப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டிருப்பதால் இன்னும் சிறந்து விளங்குகிறது. மிகுதியான வருமானத்தையும் தருகின்றது.

பயிராகும் இடங்கள்

இலவங்கப்பட்டை மரமானது சுமார் 25 அடி முதல் 30 அடி வரை வளரக்கூடியது. இம் மரங்கள் வளர்வதற்கு எல்லா வகை மண்ணும் சிறந்ததாகும். எனினும் மணல் கலந்த தழைச்சத்து நிரம்பிய நிலங்களில் வளரும் மரங்களின் கிளைக் குச்சிகளிலிருந்து எடுக்கப்படும் பட்டை மிகவும் சிறந்த தரமுடையவை என்று கூறப்படுகிறது. கடல் மட்டத்திலிருந்து 2,500 அடி உயரம் வரை சிறப்புடன் வளருகின்றன. நிழற்பாங்கான நிலைகளிலும் சுமார் 80—100 அங்குல மழையுள்ள இடங்களிலும்கூட இவை சிறந்து வளர்கின்றன. நீண்ட கால மழையின்மையும், வரட்சியும் மிகுந்த பிரதேசங்கள் இப் பயிருக்குகந்தவையல்ல.

விதையும் பெருக்கமும்

பொதுவாக இப்பயிர் விதைகளின் மூலமே இனப் பெருக்கம் செய்யப்படுகின்றன. குச்சிகளின் மூலமும், பதியன்களின் மூலமும்கூட இவைகளைப் பயிரிடலாம். நாற்றுக்கள் தயாரிக்க மரங்களைக் காய்ப்புக்கு விட வேண்டும். அறுவடைக்குப்பின் நிழலில் காய வைத்து தயார் செய்த விதைகளை நேராகப் பயிர் செய்யப்பட வேண்டிய நிலத்தில் நடலாம் அல்லது நாற்றங்காலில் விதைத்து பிறகு நாற்றுகள் வளர்ந்தபின் நிலத்தில் நட்டுப் பயிர் செய்யலாம். இம் மரத்தின் பழங்கள் ஜூலை, ஆகஸ்ட்டு மாதங்களில் அறுவடைக்கு வரும். பழங்களை பறவைகள் கவர்ந்து செல்லாவண்ணம் கண்ணுடிக் காகிதங்களைக்கொண்டு மூடிவைக்க வேண்டும். நன்கு பழுத்த பழங்களைப் பறித்து ஒன்று அல்லது இரண்டு நாட்களுக்கு குவித்து வைக்கவேண்டும். இதனுல் விதைகளை மூடிக்கொண்டிருக்கும் வழவழப்பான தோலை பிரித்தெடுப்பது எளிது. இவ்விதைகளை நன்கு தண்ணீரில் சுத்தம் செய்து நிழலில் காயவைக்க வேண்டும். வெயிலில் உலர்த்தினுல் விதைகள் முளைப்புத் தன்மையிழந்து விடும்.

விதைகள் மூலம் பயிர் செய்யப்படும் மரங்களிலிருந்து பலன் எடுக்க நீண்டகாலம் பிடிக்கும். ஆகவே குச்சிகள் மூலம் இனப்பெருக்கம் செய்வது சிறந்தது. அவ்வாறு செய்ய நன்கு முதிர்ந்த மரங்களிலிருந்து இளங்குச்சிகளை 3 அல்லது 4 இலைகளுடன் நறுக்கி நாற்றங்கால்களில் நட்டு அவைகளுக்கு வேண்டிய நிழல், நீர் கொடுத்து வளர்க்க வேண்டும். வேர் விட்ட குச்சிகள் 6 முதல் 9 மாதங்களில் நடுவதற்குத் தயாராகின்றன. இவ்வாறன்றி பதியன்கள் மூலமும் பயிர் செய்யலாம்.

பயிர் செய்ய உத்தேசித்துள்ள நிலத்தை மரம், செடி, முள் முதலியவைகளை நீக்கி சுத்தம் செய்யவேண்டும். பிறகு அதில் 2 அடி நீள அகல ஆழமுள்ள குழிகள் 10 அடி இடைவெளியில் வெட்டப்படவேண்டும். இக் குழிகளை அடர்ந்த மரங்களினடியிலுள்ள மண்ணுல் நிரப்ப வேண்டும். ஒவ்வொரு குழியிலும் 20 அல்லது 30 விதைகளைப் போட்டு சிறிது மண் தூவி மூடவேண்டும். முளைத்து வரும் கன்றுகளை வெயிலின் கொடுமையிலிருந்து காப்பாற்ற பசுந்தழைகளினுல் குழிகளை மூட வேண்டும். வேண்டிய அளவு நீர்ப் பாய்ச்சுதல் வேண்டும். 2 அல்லது 3 வாரங்களில் விதைகள் முளைக்கும். அப்பொழுது குழிக்கு 4 அல்லது 5 செடிகள் மட்டும் விட்டு மற்றவைகளைப் பிடுங்கி இல்லாத இடங்களில் நடவேண்டும். அன்றியும் நாற்றுக்களை நாற்றங்கால்களில் பயிராக்கியும் மேற்குறிப்பிட்ட குழிகளில் நடலாம். விதைத்த 6 மாதங்களில் நாற்றுகள் நிலத்தில் நடுவதற்கு வேண்டிய வளர்ச்சி யடைகின்றன.

பின்சாகுபடி

செடிகள் நடப்பட்ட பிறகு 2, 3 ஆண்டுகளுக்கு பயிரினிடையே களையெடுத்து மற்ற செடிகொடிகளின் வளர்ச்சியைத் தடுத்தால் போதுமானது. உரங்கள் இட வேண்டிய அவசியம் இல்லை. தொழு எரு அல்லது கம்போஸ்ட் எரு இப் பயிருக்குச் சிறந்ததாகும். கேரள மாநிலத்தில் அஞ்சாரக்கண்டி யென்னும் இடத்தி லுள்ள தோட்டத்தில் இலவங்கப்பட்டை மரங்களுக்கு உலர்ந்த இலைகளும் பட்டை உரிக்கப்பட்ட குச்சிகளை எரித்த சாம்பலும், எண்ணை எடுத்தபிறகு உபயோக மற்ற இலை முதலிய பொருள்களும் எருவாக உபயோகப்படுத்தப்படுகின்றன. இது ஒரு காட்டுப் பயிராகையால் வேனில் காலங்களில் மழை குறைவான காலங்களிலும் மட்டும் தண்ணீர் பாய்ச்சினுல் போதுமானது.

நட்டு நன்கு பேணி வளர்த்த செடிகளை இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளில் ஐந்து அல்லது 6 அடி உயரம் வளருகின்றன. இவைகளைத் தரை மட்டத்திலிருந்து 6 அங்குல உயரம் விட்டு வெட்டி விட்டால் வெட்டப்பட்ட கிளைகளிலிருந்து புதுக்கிளைகள் உண்டாகி மறு ஆண்டுக்குள் 4 அடி முதல் 6 அடி உயரம் வரை வளர்ந்து விடும். இவைகளில் 3 அல்லது 4 குச்சிகள் மட்டும் பட்டை உரிப்பதற்கு உகந்தவையாயிருக்கும். இளங்குச்சிகளை விட்டு வைத்தால் மறுபருவத்திற்கு பட்டை எடுப்பதற்குத் தயாராகிவிடும். நன்கு பராமரிக்கப்பட்டு வரும் தோட்டத்தில் ஒவ்வொரு செடியிலும் ஆண்டொன்றுக்கு 6 அல்லது 7 குச்சிகளைப் பட்டை உரிப்பதற்காக வெட்டலாம். செடிகளை வெட்டாமல் விட்டால்

நட்ட நான்காவது ஆண்டிலிருந்து பூத்து காய்க்கின்றன. ஜனவரி மாதத்தில் பூத்து ஜூலை, ஆகஸ்டில் காய்கள் முதிர்ந்து விதை சேகரிப்பதற்கு தயாராகின்றன. இளம் பட்டைகளும், நன்கு முற்றிய பட்டைகளும் தரத்தில் சிறந்தவைகளல்ல.

பூச்சி நோய்கள் பாதுகாப்பு

இம் மரங்களைத் துளை செய்யும் வண்டுகளும், செடிப் பருவத்திலிருக்கும்போது செல் முதலியவைகளும் தாக்குகின்றன. துளை வண்டுகளைத் தடுக்க தண்ணீரில் கரையக்கூடிய பி.எச்.சி. 50 சதவீதத்தை உபயோகிக்கலாம். செல் முதலியவைகளை ஒழிக்க பாலிடாலைத் தெளித்தால் போதுமானது. மற்றபடி நோய்கள் இச் செடியைத் தாக்குவதில்லை.

நீண்ட காலமாக தமிழ் மருத்துவத் துறையில் இலவங்கப்பட்டை பிரபலமாகி வந்திருக்கிறது. இப் பட்டையிலிருந்து எண்ணெய் எடுப்பதுண்டு. பட்டையை சுவைக்காகவும், மணத்திற்காகவும் குழம்பு பதார்த்தங்களில் சேர்க்கின்றனர். குளிர் ஜுரம் கண்டவர்களுக்கு இப் பட்டையை ஊறவைத்து குடி நீராய் உபயோகப்படுத்துகின்றனர்.

4. வனிலா

வனிலா என்பது ஒரு வகைக் கொடியாகும். மரங்களில் தொற்றிப்படரும் தன்மையுடையது. இதன் காய்கள் நறுமணங் கமழும். இதிலிருந்து 'வனிலீன்' என்னும் ஒருவகை வாசனைச் சாறு வடித்தெடுக்கப்படுகிறது. இச்சாறு மிட்டாய் உற்பத்தியிலும், குடிநீர் வகைத் தயாரிப்பிலும், இனிப்புப் பண்டங்கள் தயாரிப்பிலும் முக்கியப் பங்கு வகிக்கின்றது. மருந்துகள் உற்பத்தியிலும் சிறிதளவு உபயோகப்படுகின்றது.

நம் நாட்டிற்கு வனிலா ஒரு புதிய பயிராகும். நறுமணத்துடன் நல்ல லாபமும் அளிப்பதால் இந்தியாவில் இதைப் பயிரிட ஆரம்பித்தனர். அறுபது ஆண்டுகளுக்கு முன்புதான் வங்காளம், அஸ்ஸாம், தமிழ் நாடு முதலிய மாநிலங்களில் பயிரிட ஆரம்பிக்கப் பட்டது. தஹிட்டி, மெக்ஸிகோ, போர்பன், சிசிலீஸ், மடகாஸ்கர், இலங்கை, ஜாவா, ஜான்ஸிபார் முதலிய நாடுகளில் பெருமளவில் பல நூற்றுண்டு காலமாக பயிரிடப்படுகிறது. தற்போது தமிழ் நாட்டில் நீலகிரி அடிவாரத்திலுள்ள கல்லார், பர்லியார் பழப்பண்ணைகளிலும், கேரள மாநிலத்தில் வையநாடு என்னும் இடத்திலும் இப் பயிர் கணிசமான அளவு காணப்படுகிறது. இவைகளைத் தவிர ஒன்றிரண்டு கொடிகள் குடகு, மத்திய மலபார், திருவாங்கூர், கல்கத்தா ஆகிய இடங்களில் காணப்படுகின்றன. இப் பயிரில் காய்கள் உண்டாவதற்கு பூக்களைச் செயற்கை முறையில் கருத்தரிக்கச் செய்ய வேண்டும்.

உகந்த மண்

வனிலா பயிரிடுவதற்குச் சிறந்தது மணல் கலந்த செம்புறை மண்ணுகும். ஆனல் சரளைக் கற்கள் கலந்த மண்களிலும் செழித்து வளருகின்றது. காற்றினல் அதிக அளவில் பாதிக்கப்படாமலும், நிழற்பாங்கான நிலமாகவும் இருக்க வேண்டும், வனிலா வெப்பப் பிரதேச பயிராகும். சுமார் 60—100 அங்குல மழையுள்ள பிரதேசம் பயிரிடச் சிறந்ததாகும்.

விதையும் நடவும்

சாதாரணமாக வனிலாவானது கிளைத் துண்டுகளின் மூலம் விருத்தி செய்யப்படுகிறது. விதைகள் மூலமும் சாத்தியமே. ஆனல் விதையினல் உண்டாகும் செடிகள் நான்கு ஆண்டுகள் கழித்தே பலனுக்கு வருகின்றன. அவ்விதமின்றி கிளைத் துண்டுகள் ஓராண்டு காலத்திற்குள் காய்க்க ஆரம்பிக்கின்றன. வளர்ச்சியிலும் சிறந்து விளங்குகின்றன.

சாகுபடி முறை

பின்னல் கூறப்பட்டபடி கிளைத்துண்டுகளை நடுவதானல் சுமார் மூன்று முதல் நான்கு அடி நீளக் கொடிகளைத் தேர்ந்தெடுத்து அதில் பாதியளவு கொடியை சுமார் ஆறு அங்குல ஆழத்தில் பூமியில் சுற்றி நடவேண்டும். கொடிக்குக் கொடி 8 அடி இடைவெளிவிட வேண்டும். கொடிகளை ஒரு மரத்திற்குப் பக்கத்திலோ அல்லது மூங்கில் தட்டிக்குப் பக்கத்திலோ நடப்பட வேண்டும். ஆரம்ப காலத்தில் அதிக அளவு நீர்ப்பாய்ச்ச வேண்டும். தரை மட்டத்திற்கு மேல் உள்ள கொடியின் கணுக்களிலிருந்து உண்டாகும் பற்று வேர்களின் உதவியால் மரங்களைக் கவ்விப் பிடித்து படர்ந்து வளர்கின்றது. மழைக் காலங்களில் நடுவது நல்லதல்ல. இக் கொடிகள் படர்வதற்கு பலா, கல்யாண முருங்கை மற்றும் பன்னீர்பூ மரங்கள் சிறந்தவைகளாகும். மூங்கில் தட்டிகளின் மீதும் படரவிடலாம். ஒரு ஏக்கருக்கு 680 கொடிகள் நடலாம்.

எருவும் எருவிடுதலும்

வனிலாவின் வேர் மேல் மட்டத்திலேயே இருப்பதால் எருவிடுதல் மேல் மட்டத்திலேயே இருக்க வேண்டும். சரியாக மக்காத மாட்டெரு உகந்ததல்ல. மக்கிய தழை எரு மிகவும் சிறந்ததாகும்.

பூவும் கருத்தரித்தலும்

வனிலாவில் பூக்கள் கருத்தரிப்பது மெக்ஸிகோ நாட்டைத் தவிர வேறு எங்கும் திருப்பதிகரமாக இருப்பதாகத் தெரியவில்லை. அங்கு தேனீக்கள் மூலமும் ஒருவகை பறவையின் மூலமும் இவ்வேலை நடைபெறுவதாகத் தெரிகிறது. வனிலாப் பூவின் விசித்திர இயற்கையமைப்பே இதற்குக் காரணம். பூவிலுள்ள மகரந்தப் பொடியை ஒரு குச்சியின் மூலம் சேகரித்து பூவின் பெண் பாகத்தில் தடவி விடவேண்டும். இம்முறை சிறிது கடினமாகக் காணப்பட்டாலும் பழக்கப்பட்டவர்களுக்கு மிகவும் எளிது. பழகிய ஆள் நாளொன்றுக்கு 1,500 பூக்களைக் கருத்தரிக்கச் செய்யலாம். இவ்வேலைக்குகந்த நேரத்தை முன்னதாகக் கணக்கிடப்பட வேண்டும். ஏனெனில் நீலகிரி மாவட்டத்தில் பர்லியாறு பண்ணையில் காணப்படும் தட்பவெட்ப நிலையில் வனிலாப் பூக்கள் காலை 6-00 மணி முதல் 12 மணி வரைதான் கருத்தரிக்கின்றன. மிகவும் சிறந்த நேரம் காலை 8-30 முதல் 10-30 வரையாகும். கேரளத்தின் வைய நாட்டில் காலை 6 மணி முதல் 7-30 மணி வரை சிறந்த காலமாக கருதப்படுகிறது.

காயும் அறுவடையும்

பூக்கள் கருத்தரிக்கச் செய்யப்பட்ட நாளிலிருந்து 9 முதல் 11 மாதங்களில் காய்கள் அறுவடைக்கு வருகின்றன. காய்களின் முனைகள் மஞ்சள் நிறமாக மாற ஆரம்பித்ததும் அவை அறுவடைக்குத் தயார் என்பதை அறியலாம். ஒரு செழிப்பான கொடி 80 முதல் 100 குலைகள் காய்க்கும். ஒவ்வொரு குலைக்கும் 15 முதல் 25 காய்கள் இருக்கும்.

வனிலா இலைகளிலும், காய்களிலும் கொடிகளிலும் ஆக்ஸாலிக் அமிலம் நிறைந்திருப்பதால் சிறிதளவு கவனம் தேவை. அதிக அளவு மேலே ஒட்டுமானால் தலைச்சுமை, தோலரிப்பு முதலியவைகள் காணப்படும்.

பதனப்படுத்துதல் (வனிலாச் சாறெடுத்தல்)

வனிலாவின் காய்கள் பதனிட்ட பிறகே மணம் உண்டாகிறது. பல முறைகளில் பதனிடப்பட்டாலும் சாதாரணமாகக் காய்களைக் கொதி நீரில் அமுக்கிப் பதனிடும் முறையே அதிக அளவில் பயன்படுத்தப்படுகிறது. காய்களைக் கொடியிலிருந்து அறுத்ததும் கொதி நீரில் இரண்டு வினாடி நேரத்திற்கு வைக்க வேண்டும். பிறகு அவைகளின் முனைகளை கயிறுகளில் கட்டி உலரவைக்க வேண்டும். இரவு நேரங்களில் மூடிய பெட்டிகளில் காய்களை அடைத்து வைக்க வேண்டும். மறுநாள் வெயிலில் உலர்த்த வேண்டும். இவ்விதம் 10 முதல் 15 நாட்கள் செய்தால் காய்கள் மிருதுவடைந்து பழுப்பு நிறமடையும். இப்போது தான் வனிலின் மணம் காய்களிலிருந்து உற்பத்தியாகும். காய்களின் மணத்தையும், மிருதுத் தன்மையையும் பாதுகாக்க காய்களின் மீது ஆமணக்கெண்ணெய் அல்லது ஆலிவ் எண்ணெய் தடவி உலராமல் பாதுகாக்க வேண்டும். இம்முறையில் 5 முதல் 9 மாதங்களுக்கு மணம் பாதுகாக்கப்படலாம்.

வனிலாச் சாறானது, ½ பவுண்டு பதம் செய்யப்பட்ட வனிலாக் காயை ஒரு காலன் சாராயத்தில் நான்கு வாரங்களுக்கு ஊற வைப்பதன் மூலம் உண்டாக்கப்படுகிறது. இந்த காலத்திற்குப் பிறகு வடிகட்டி தெளிந்த நீரை வனிலா சாறாகப் பிரித்தெடுக்கப்படுகிறது.



வானொலி மன்ற வார விழா.

18—11—1966 அன்று குளித்தலை வட்டாரம், மருதூர் கிராம ரேடியோ மன்ற வார விழாவில், திருச்சி வானொலி நிலைய டைரக்டர் ஸ்ரீ எம். எஸ். கோபால் அவர்கள் சிறப்புரை ;—

கிராம வானொலி மன்ற வார விழாவை மருதூர் கிராமத்தில் கொண்டாடுவதற்கு ஏற்பாடுகள் செய்த மருதூர் கிராம ரேடியோ மன்றத்தார்க்கும், சம்பந்தப் பட்ட அதிகாரிகளுக்கும், மருதூர் கிராம மக்களுக்கும் திருச்சி வானொலி நிலையத்தின் சார்பில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கிராம வானொலி மன்ற திட்டம் ஆரம்பித்து 7 வருடங்கள் ஆகின்றன. அகில இந்திய வானொலியின் குறிப்பிட்ட நிலையங்களிலிருந்து கிராம ரேடியோ மன்ற ஒலிபரப்புத் திட்டம் 7 வருடங்களுக்கு முன்பு உருவாகியது. ஒவ்வொரு வருடமும் நவம்பர் மாதம் 17-ந் தேதி முதல் 23-ந் தேதி வரை இந்த விழா கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு, விழாவை நல்ல முறையில செயல்பட்டு வரும் ஒரு கிராம வானொலி மன்றத்தின் சார்பில் கொண்டாட வேண்டுமென்று நாங்கள் திட்டமிட்டோம். இந்த திட்டத்தின் முடிவு இதோ, இந்த மருதூர் கிராமத்தில் கிராம ரேடியோ வார விழாவாக கொண்டாடப்படுகிறது.

கிராம ரேடியோ மன்றம் எந்தெந்த வகையில் கிராம மக்களுக்கு—குறிப்பாக விவசாய மக்களுக்கு பயன்பட்டு வருகிறது என்று வட்டார வளர்ச்சி அதிகாரி அவர்கள் மிக விரிவாக கூறினார். நான் சொல்வதை விட அவர் சொல்வதில் சிறபபுளளது. ஏனென்றால், நாங்கள் நிகழ்ச்சிகளை அமைத்து நிலையத்திலிருந்து ஒலிபரப்புகிறோம். அவற்றைக் கேட்டுப் பயனடையும் கிராம மக்கள் சார்பில் ஒருவர் கூறுவதென்றால் அந்த நிகழ்ச்சிகள் உண்மையில் மிகவும் பயன்படுகின்றன" என்று அறிய நான் பெருமைப்படுகிறேன், மகிழ்ச்சியடைகிறேன்.

இந்த நாடு கிராமங்கள் நிறைந்த நாடு. சுமரர் 5 லட்சத்து 66 ஆயிரம் கிராமங்களுக்கு மேலுள்ள நாடு. எனவே தான், இந்தியா ஒரு கிராமம் என்று காந்தியடிகள் கூறினார்கள். கிராமமே இந்தியா. கிராமங்களின் வளர்ச்சியைப் பொறுத்திருக்கிறது இந்திய நாட்டின் வளர்ச்சி. நமது பொருளாதார வளர்ச்சி கிராம பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டு கிராம சமுதாயம் வளர்வதைப் பொருத்திருக்கிறது. நாட்டின் சுமார் 50 கோடி மக்களில் 80 சதவிகிதம் கிராமங்களில் வசித்து வருகிறார்கள். எனவே கிராம மக்கள் மேம்பாடு அடைந்தால்தான் நாடு முன்னேற்றம் அடையும்.

இன்றைய உணவுப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு அரசும், மக்களும் கிராமங்களையே எதிர்பார்த்திருக்கிறார்கள். எனவேதான் கிராமங்கள் வளர்வதற்கு, விருத்தியடைவதற்கு பலவித அபிவிருத்தித் திட்டங்கள் அரசினர் உருவாக்கி செயல்படுத்தி வருகின்றனர்.

மக்களாட்சியில் அபிவிருத்தி வேலைகள் யாவும் மக்களுடைய ஒன்றுபட்ட ஒத்துழைப்பால் மட்டுமே வெற்றிகரமாக நடைபெற முடியும். அரசாங்கத்தின் திட்டங்களையும், அவற்றின் இலட்சியங்களையும், நோக்கங்களையும் மக்களுக்கு எடுத்துரைக்கும் பணியில் பொது ஜன தொடர்பு மிகவும் கொண்டுள்ள வானொலி சிறந்த

பொறுப்பேற்றுள்ளது. கல்வி அறிவில்லாத மக்களுக்கு வானொலி மூலம் கல்வி அறிவையும் விஞ்ஞான அறிவையும் தொழில் நுட்ப அறிவையும் வழங்குகிறது. வானொலியில் கேட்ட பேச்சுக்கள், உரையாடல்கள், சித்திரங்கள், விவாதங்கள் இவைபோன்ற நிகழ்ச்சிகள் மூலம் பெற்ற அறிவால் தங்கள் ஆற்றல் நிலையைப் பெருக்கி உயர்த்திக்கொள்ளலாம்.

உணவு உற்பத்தித் திட்டத்தில் வானொலி விவசாய மக்களோடு தொடர்பு கொண்டு அவர்களுக்குத் தேவை யான விஞ்ஞான ரீதியில் அமைந்த விவசாய அறிவு வழங்கப்படவேண்டும் என்ற நோக்கத்தோடு கிராம ரேடியோ மன்றத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. குறிப்பிட்ட சில கிராமங்களைத் தேர்ந்தெடுத்து ஊக்கமும், உற்சாகமும் உள்ள விவரமறிந்த 15 அல்லது 20 பேர்களைக்கொண்டு ஒரு மன்றம் அமைத்து விவசாய மக்களுக்காக ஒவ்வொரு நாளும் மாலை 7-30 முதல் 8-00 மணி வரை ஒலிபரப் பாகும் நிகழ்ச்சிகளை, முக்கியமாக செவ்வாய், வெள்ளி இரு நாட்களிலும் விசேஷமாக ஏற்பாடு செய்யப்பட்டு ஒலிபரப்பாகும் நிகழ்ச்சிகளைக் கேட்டு, தங்களுக்குள்ளே நிகழ்ச்சியில் கேட்ட விஷயங்களை விவாதித்து, பின்னர் எவ்வளவு தூரம் எவ்வகையில் தங்களுக்குப் பயன்பட்டது, எந்த விஷயங்கள் தங்களுக்குப் புரியவில்லை, அவற்றிற்கு எவ்வித விளக்கம் தேவை என்று விவாதித்து முடிவு செய்து நிலையத்திற்கு எழுதி அனுப்பினால், அவர்கள் கேட்ட கேள்விக்கு அடுத்த வாரம் பதில் கிடைக்கும். கேள்விகளுக்கு விடை, சம்பந்தப்பட்ட இலாகா அதிகாரி களிடமிருந்து பெறுகிறோம். கிடைத்த பதில்களைக்கொண்டு தங்கள் தொழிலையும் விவசாயத்தையும் அதன் மூலம் கிராம சமுதாயத்தையும் அபிவிருத்தி செய்து கொள்ள லாம்.

ரேடியோ ஒரு சக்தி வாய்ந்த சாதனம் என்பதை நீங்கள் அறிவீர்கள். அது பெரியோர், சிறியோர், ஏழை, பணக்காரர், ஆண், பெண் யாவரையும் ஒருங்கே தன் சக்தியால் கவர்கிறது.

விவசாயத்தை எடுத்துக்கொண்டால் எங்களுக்கு ஒரு புதிய அனுபவம். இப்பொழுது தீவிர உற்பத்திக்காக தீவிர விவசாய ஒலிபரப்புத் திட்டம் ஒன்று (Farm and Home Unit) சென்ற ஜூன் 7-ந் தேதியிலிருந்து எமது நிலையத்தில் இயங்கி வருகிறது. இத்திட்டத்தின் மூலம் விவசாயப் பெருமக்களுக்குத் தேவையான விஞ்ஞான, விவசாய முறைகளையும் அவர்களுக்கு அன்றாடம் விவசாயத்திற்கு வேண்டிய தகவல்களையும், ஆலோ சனையும், குறிப்பாக காலநிலை, ரசாயன உரமிடுதல், உயர்ந்த ரக விதைகள், பூச்சி மருந்துகள், மற்றும் அவர்கள் சாகுபடியில் எந்த எந்த சமயங்களில் என்னென்ன முறைகளை எப்படி எப்படிக் கையாள வேண்டும் என்றெல்லாம் விவரமாக ஒலிபரப்பி வருகிறோம். இப்பொழுதெல்லாம் ஆடுதுறை 27 என்ற நெல்லைப்பற்றி அதிகம் கேட்கிறீர்கள். ஒவ்வொரு நாளும் வானொலியில் அது சம்பந்தப்பட்ட செய்திகளை அநேகமாகக் கேட்கலாம். சிலர் அதைப் பற்றி குறை கூட கூறுகிறார்கள். என்ன, எப்பொழுது பார்த்தாலும் ஆடுதுறை 27-தானா என்று கேட்கிறார்கள். தடுக்கி விழுந்தால் ஆடுதுறை 27 என்று ஒருவர் கூறினார்; தடுக்கி விழவும் வேண்டாம், தவறி விழவும் வேண்டாம்; வேண்டுமென்றே தான் அதில் விழுகிறார்கள். ஏனென்றால் அதன் சிறப்பே அதற்குக் காரணம். இந்த நெல்லுக்கு இப்பொழுது ரேடியோ நெல் என்று கூட பெயர் வந்துவிட்டது. ஏன், ரேடியோவில் அதைப்பற்றி தரும் பிரச்சாரம் விவசாயிகளின் கவனத்தை அவ்வளவு தூரம் கவர்ந்துவிட்டது. இந்த உண்மையை விவசாய டைரக்டர் அலுவலகத்து அதிகாரிகள் மாநிலத்தில் சுற்றுப்பிரயாணம் செய்து மக்களிடையே கண்டறிந்து எங்களுக்குக் கூறினார்கள். எனவே வானொலி மக்களோடு நேரடியாகத் தொடர்பு கொண்டு அவர்களுடைய கருத்தில் சிறந்த புரட்சிகளை ஏற்படுத்தக்கூடிய சக்தி வாய்ந்தது. என்பதற்கு ஐயமில்லை. இந்த சக்தி வாய்ந்த சாதனத்தை நாட்டின் பல பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு நல்ல முறையில் பயன்படுத்த ஒத்துழைக்கலாம். கிராம அபிவிருத்திகளும், தேசீய அபிவிருத்திகளும் வானொலியை அதிகம் பயன்படுத்த வேண்டுமென்று (Ford Foundation) ஸ்தாபன விற்பனர்கள் கூறி இருக்கிறார்கள்.

கிராம ரேடியோ மன்றங்களைப் பொறுத்த வரையில் இன்று தமிழ் நாட்டில் சுமார் 1,000 மன்றங்கள் கணக்கில் உள்ளன. ஆனால் 1,000 மன்றங்களும் நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றனவா என்று கூற இயலாது. ஏனென்றால் எங்களுக்கு மன்றங்களில் இருந்து வருகின்ற கேள்விகளிலிருந்து நோக்கினால் சில மன்றங்கள் தான் நல்ல முறையில் ஒழுங்காக இயங்கி வருகின்றன என்று எண்ண நேரிடுகிறது. சில மன்றங் களில் இருந்து எங்களுக்கு ஒருவித தகவலும் இல்லை. ஆனால் அம்மன்றங்கள் சரிவர இயங்குவதில்லை என்று நான் சொல்ல வரவில்லை. நடைபெற்றுக்கொண்டிருக் கலாம்; ஆனால் கேள்விகள் கேட்காதிருக்கலாம். மன்றங்கள் நல்ல முறையில் இயங்கவேண்டும். ஒழுங்காக இயங்கினால்தான் வானொலியில் கூறப்படும் நல்ல கருத் துக்களைக் கேட்டு அவற்றை தங்களுடைய விவசாயத்திற்குப் பயன்படுத்தி கிராம மக்கள் தங்கள் தொழிலில் முன்னேற்றம் அடைய முடியும் என்று கூறுவேன். மன்றங்கள் நல்ல முறையில் இயங்குவது கிராம ரேடியோ

மன்ற அங்கத்தினர்களைப் பொறுத்துள்ளது. ஒவ்வொரு செவ்வாயன்றும், வெள்ளியன்றும் மாலை 7-30 முதல் 8-00 மணிவரை கிராம ரேடியோ மன்றங்களுக்காகவே நிகழ்ச்சிகள் விசேஷமாக தயாரிக்கப்பட்டு ஒலிபரப்பப்பட்டு வருகின்றன. ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள நிபுணர்களைக் கொண்டு மாநில சர்க்காரின் பல துறைகளில் விவசாயம், கால்நடை, கூட்டுறவு போன்ற துறைகளில் ஈடுபட்டுள்ள அதிகாரிகளைக் கொண்டு விவசாய மக்களுக்குத் தேவையான பொருள்கள் பற்றி பேச்சுக்கள் உரையாடல்கள், பேட்டிகள், விவாதங்கள், சித்திரங்கள் முதலிய நிகழ்ச்சிகளை விசேஷமாகத் தயாரித்து ஒலிபரப்பி வருகிறோம். மன்றங்கள் நல்ல முறையில் செயல்படுவதற்கு மன்ற அங்கத்தினர்களின் ஊக்கமும். உற்சாகமும் முக்கியம். அவர்களுக்குத் தூண்டுகோலாக கிராமங்களிலுள்ள அதிகாரிகள் ஒத்துழைக்கவேண்டும், கிராம மன்றத்தார் சிறிது கவனமின்றி இருப்பின் அவர்களுக்கு ஊக்கமளித்து மன்றங்கள் நல்ல முறையில் ஒழுங்காக செயல்பட உதவி புரியவேண்டும். கிராம வானொலி மன்றங்களிலிருந்து எங்களுக்கு மாதம் சராசரி 400 கேள்விகள் வருகின்றன. வாரம் ஒலிபரப்பாகும் நிகழ்ச்சிகள் சம்பந்தப்பட்ட கேள்விகளுக்கு அடுத்த வார நிகழ்ச்சியில் பதில் தரப்படுகின்றன. அதாவது குறிப்பிட்ட அதிகாரிகளிடமிருந்து கேள்விகளுக்கு விடை பெற்று அந்த விடைகளை நாங்கள் வானொலி மூலம் அடுத்த வார நிகழ்ச்சியில் அறிவிக்கிறோம். இந்த விடைகளைத் தெரிந்துகொண்டு அவற்றின் உதவியால் தாங்கள் ஈடுபட்டிருக்கும் தொழில் உயர்வுக்கு திட்டங்கள் உருவாக்கி பல கிராமங்கள் முன்னேற்றம் அடைந்துள்ளன என்று எங்களுக்கு விவரங்களும் வந்துள்ளன.

நான் முன்பு கூறியபடி நமது நாட்டின் முன்னேற்றம் கிராம வளர்ச்சியைப் பொறுத்திருக்கிறது. கிராம முன்னேற்றத்தைப் பொறுத்திருக்கிறது. கிராம பொருளாதார முன்னேற்றத்தைப் பொறுத்துள்ளது. இன்றைய உணவுப் பிரச்னையைத் தீர்க்க நமது கிராமங்களையே நம்பி இருக்கிறோம். அயல்நாடுகளை நம்பி வாழும் நிலை மாறவேண்டும். உற்பத்தியைப் பெருக்க விவசாயத்தில் விஞ்ஞான அடிப்படையில் அபிவிருத்தித் திட்டங்கள் பல ஆக்கம் பெற்று வருகின்றன. அமோக விளைச்சல் திட்டத்தின்கீழ் நெல் உற்பத்தியைப் பெருக்க கையாளப்படும் வழி வகையில் தீவிர விவசாய ஒலிபரப்பு திட்டம் ஒன்று. அதன்கீழ் விவசாயத்தில் அனுபவம் பெற்ற அதிகாரிகள் வானொலி நிலையத்தில் பணி புரிந்து வருகிறார்கள். விவசாயிகளின் பிரச்னைகளை அறிந்து அவர்களிடம் நேரில் தொடர்புகொண்டும் அவர்களுக்குத் தேவையான தகவல்களையும் ஆலோசனைகளையும் கூறி அவர்கள் அனுபவத்தையும் கேட்டு கேட்டறிந்தவற்றையும் தொகுத்து ஒலிபரப்பி வருகிறோம். எனவே வானொலியில் ஒலிபரப்பாகும் நிகழ்ச்சிகளில் விவசாய பெரு மக்களும் பங்குகொள்கிறார்கள். விவசாயத்தில் வெற்றி கண்டவர்கள் எவ்வாறு தாங்கள் வெற்றி அடைய முடிந்தது, என்ன என்ன முறைகளை கையாண்டதில் உற்பத்தி பெருகியது. அதே முறைகளை மற்ற விவசாயிகளும் கையாண்டால் அவர்களும் அதே வெற்றியை அடைய முடியும். ஒருவரைப் பார்த்து மற்றவரும் அதே முறைகளைக் கையாண்டு அதிக உற்பத்தியை விவசாயத்தில் பெற முடியும் என்ற கருத்தை வலியுறுத்துகிறோம்.

இத்திட்டம் கடந்த ஜூன் மாதம் 7-ந் தேதி ஆரம்பிக்கப்பட்டது. இது நல்ல முறையில் இயங்கி வருகிறது. இத்திட்டம் சிறப்புறச் செயல்படுவதும் கிராமத்துக்காக நாங்கள் விவசாய ஒலிபரப்புகள் நடத்துவதும், கிராம ரேடியோ மன்றத்தார் தரும் ஒத்துழைப்பைப் பொறுத்திருக்கிறது. அவர்களிடம் இருந்து எங்களுக்கு விடாத தொடர்பு இருக்கவேண்டும். இவ்வாறு சிறந்த முறையில் செயல்பட்டு வரும் 7 கிராம வானொலி மன்றங்களை மாநில சர்க்கார் பரிசு வழங்குவதற்காக இவ்வாண்டு தேர்ந்தெடுக்கிறார்கள். (Canadian Broadcasting Corporation) -னும், ஆல் இண்டியா ரேடியோவும் தங்களிடையே ஏற்பாடு செய்துள்ள பரிசு மாற்றுத் திட்டத்தின்கீழ் சிறந்த முறையில் செயல்பட்டு வரும் கிராம வானொலி மன்றங்களுக்கு பரிசு அளிக்கப்படுகிறது. இந்தப் பரிசு மாற்றத் திட்டத்தின்கீழ் சென்னை மாநிலத்தில் 7 கிராம வானொலி மன்றங்களுக்காக இவ்வருடம் (Canadian Broadcasting Corporation) அளித்துள்ள 7 டிரான்சிஸ்டர் ரேடியோக்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த ஏழு மன்றங்களின் பெயர்:—

1. சேலம் மாவட்டம், இடப்பாடி வட்டாரம், பூலாம்பட்டி வானொலி மன்றம், 2. மதுரை மாவட்டம், வாடிபட்டி வட்டாரம். போடிநாயக்கன்பட்டி மன்றம், 3. கோவை மாவட்டம், கோபி வட்டாரம், குள்ளம்பாளையம் மன்றம், 4. வட ஆற்காடு மாவட்டம். வந்தவாசி வட்டாரம், கீழ் கோவலேடு மன்றம், 5. செங்கல்பட்டு மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் வட்டாரம், வளர்புரம் மன்றம், 6. திருச்சி மாவட்டம், கரூர் வட்டாரம், வாங்கல் மன்றம், 7. தஞ்சாவூர் மாவட்டம், அறந்தாங்கி வட்டாரம், சில்லட்டூர் மன்றம். இதே முறையில் உங்கள் மன்றமும் வெற்றிகரமாக ஏன் செயல்படக் கூடாது என்று இம்மன்றத்தாரைக் கேட்டுக்கொள்கிறேன். எனவே கிராம ரேடியோ மன்றங்கள் நல்ல முறையில் இயங்க மன்றங்கள் ரேடியோ நிலையத்தோடு தொடர்பு கொண்டு ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கேள்வியும் பதிலும்

[திரு எம். கே. லிங்கையா, பி.எஸ்.ஸி. (விவசாயம்), விரிவினை வல்லுனர்; கே. எஸ். குட்டி முதலியார், பி.எஸ்.ஸி. (விவசாயம்), உதவி விரிவினை வல்லுனர்; இரா. சென்னியப்பன், பி.எஸ்.ஸி., (விவசாயம்), விரிவினை விளக்குனர்.]

[விவசாயிகள் தங்களுடைய சந்தேகங்களுக்கு வேண்டிய விளக்கங்கள் பெற, கேள்விகளை தெளிவாக எழுதி, தங்கள் முகவரியுடன் "மேழிச்செல்வம், கேள்வியும் பதிலும்", விஸ்தரிப்பு நிபுணர், விவசாயக் கல்லூரி ஆராய்ச்சிக் கூடம், கோயமுத்தூர்-3, என்ற முகவரிக்கு அனுப்பவும். கேள்விகளுக்குரிய பதில் பத்திரிகை மூலமாகத்தான் தெரிவிக்கப்படும்—ஆசிரியர்.]

ச. சோமசுந்தரன், கலக்கமங்கலம்.

வினா 1 : நான் மருந்தடிக்கும் கருவிகளான தெளிப்பானும் (Sprayer), தூவானும் (Duster) தேவைப்படுகின்றன. மற்றும் சேர்கலக்கி (பர்மீஸ் சட்டன்) இடையுழவுக் கருவியும் தேவைப்படுகின்றன. இதை எங்களூர் விவசாய விஸ்தரிப்பு அலுவலரிடமும், கிராம சேவக்கிடமும் கேட்டேன். அவர்கள் தற்போது முடியாதென்றும் மறு ஆண்டில் பார்த்துக் கொள்வோம் என்றும் கூறுகிறார்கள். விவசாயக் கிடங்கிலுள்ள கருவிகளும் தேவைக்குக் கிடைப்பதில்லை. ஆகையால் நான் மருந்தடிக்க உடனே பணத்தைக் கட்டி கருவி வாங்கிவிட எண்ணுகிறேன். ஆகவே அரசாங்க கழிவுடன் நான் கருவிகளைப் பெற யாருக்கு மனு செய்யவேண்டும் ?

விடை : மானிய விலையில் விவசாயக் கருவிகள் யாவும் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த விவசாய அலுவலகம் மூலமாகவே விநியோகம் செய்யப்படுகின்றன. உங்களுக்குத் தேவையான விவசாயக் கருவிகளுக்கு நிதியாண்டின் முதலிலேயே விண்ணப்பித்துக் கொள்ளவும், பஞ்சாயத்து யூனியனுக்கு ஒதுக்கப் பட்டுள்ள மானியத் தொகையைப் பொருத்துத்தான் மானிய விலையில் விவசாயக் கருவிகள் விநியோகிக்க இயலும். ஆகவே உங்கள் தேவைக்கு முந்திக் கொள்ளவேண்டும். உங்களுடைய வட்டார விவசாய அலுவலகத்தில் உங்களுக்குத் தேவையான விவசாயக் கருவிகள் கிடைக்கவில்லையானால் உங்களுடைய மாவட்ட விவசாய அதிகாரியை அணுகவும்.

வினா 2 : புதுமுறை வேளாண்மை செய்ய விரும்பும் உழவர்கள் முறைப்படி உரமிட அம்மோனியம் சல்பேட் அதிகம் தேவைப்படுகிறது. இது எளிதில் கிடைப்பதில்லை. அரசாங்கப் பண்ணைகளிலும் குறிப்பிட்டபடி வரவில்லை. தற்போது கிடையாது எனக் கூறிவிடுகிறார்கள். இதனால் தேவையான உரம் வாங்க உழவர்கள் என்ன செய்யவேண்டும் ? நான் விவசாயத்திற்காக கூட்டுறவு வங்கி மூலம் கடன் கோரி ரொக்கமாகவும் உரமாகவும் பெற அனுமதி பெற்றேன். ரொக்கம் கிடைத்தது. ஆனால் உரம் கிடைக்கவில்லை. உரக் கிடங்கிலோ உரம் கிடையாது எனக் கூறுகிறார்கள். இதைப் பெற யாருக்கு மனுச் செய்யவேண்டும் ?

விடை : உங்களுடைய பகுதிக்கான கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினராகச் சேர்ந்து கூட்டுறவுச் சங்கத் தலைவர் மூலம் தேவையான உரங்களைப் பெற நடவடிக்கையெடுத்துக்கொள்ளவும். உங்களுடைய கூட்டுறவுச் சங்கத்திற்கு போதுமான இரசாயன உரம் கிடைக்கவில்லையானால், உங்களுடைய மாவட்ட விவசாய அதிகாரி மூலம் ஆட்சியாளரை அணுகவும்.

வினா 3 : கிராம நல முகவரி என்ன ? கிராம நலம், மேழிச்செல்வம் இவற்றைத் தவிர விவசாய வளர்ச்சிப் பத்திரிகை ஏதுமுளதா ?

விடை : கிராம நல முகவரி—"செயலாளர், கிராம நல தல நிர்வாகத்துறை, சென்னை–9". கிராம நலம், மேழிச்செல்வம் பத்திரிகைகளைத் தவிர ஒவ்வொரு ஆண்டும் "கிராமவாசியின் பஞ்சாங்கம்" என்ற புத்தகம் தமிழ்நாடு விவசாயச் செய்தித் துறையினரால் வெளியிடப்படுகின்றது. இது விவசாயிகளுக்கு மிகவும் உபயோகமானதாகும். விவசாய சம்பந்தமாக அவ்வப்போது விவசாய வெளியீடுகளும் விநியோகிக்கப்படுகின்றன. இவற்றை உங்களுடைய வட்டார விவசாய அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

K. வெள்ளிங்கிரி, தொப்பம்பட்டி, கோவை–17.

வினு 1 : மிளகாய் செடி, கத்தரி செடி நல்ல முறையில் வளரவும், நல்ல மகசூல் பெறவும் என்ன செய்ய வேண்டும் ? என்ன உரமிடுவது நல்லது ? விபரமாகக் கூறவும் ?

விடை : கத்தரிச் செடிக்கு 8 அவுன்ஸ் நல்ல பொறுக்கு விதை ரகத்தை 0·50 கிராம் செரசான் மருந்துடன் கலந்து ஒரு செண்டில் நாற்றுவிட்டு ஒரு மாதத்தில் நாற்றெடுத்து ஒரு சத போர்டோ கலவை மருந்தில் நனைத்து நடவு செய்யவும். நடவு நிலத்திற்கு எக்கருக்கு 20 வண்டி தொழு உரமும் நான்கு மூட்டை 4-ம் நெம்பர் கலப்பு உரமும் அடியுரமாக இட்டு நாற்றை 2′×2′ இடைவெளி கொடுத்து நடவு செய்யவும். நட்டு ஒரு மாதத்தில் மண் அணைப்பின் போது 50 கிலோ அம்மோனியம் சல்பேட் உரம் இடவும். அவ்வப்போது பூச்சிநோய் தடுப்பு முறைகளை கையாளவும். விவசாய அனுவலகத்திலிருந்து உயர்தர விதைகளை வாங்கி சாகுபடி செய்யவும்.

மிளகாயில் G_1 குண்டூர் ரகமும், K_1 கோவில்பட்டி ரகமும் உயர்தரமானவை. கத்தரியைப் போலவே ஒரு எக்கர் நட எட்டு அவுன்ஸ் விதையை நாற்று விட்டு 30 நாட்களில் நடவு செய்யவும், நடவு வயலுக்கு 10 டன் தொழு உரமும் 116 கிலோ 2-ம் நெம்பர் கலப்பு உரமும் அடியுரமாக இடவும். நாற்றுக்களை 2′×2′ இடைவெளி கொடுத்து நடவு செய்யவும். ஒரு மாதம் கழித்து மண் அணைக்கும் போது 116 கிலோ 2-ம் நெம்பர் கலப்பு உரம் இடவும். நோய் பூச்சி தடுப்பு முறைகளை அவ்வப் போது கையாளவும்.

வினு 2: வி. டி. சுப்பைய முதலியார் இயற்றியுள்ள தென் னிந்திய சாகுபடி குறிப்புகள் என்ற புத்தகத்தை எங்கு யாரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்? அதன் விலை என்ன?

விடை: திரு. வி. டி. சுப்பையா முதலியார் இயற்றியுள்ள ஷை புத்தகம் மூன்றுப் பாகங்களாக வெளியிடபட் டுள்ளது. ஒவ்வொரு பாகத்தின் விலை ரூ. 2–50 "அமுத நிலையம், பிரைவேட் லிமிடெட், தேனும் பேட்டை சென்னை 18." என்ற முகவரிக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

திருஞானசம்மந்தம், மேலணிக்குழ், திருச்சி.

வினு: நான் இறைவைப்பயிருக்கு டி.எம்.வி. 3 நிலக்கடலை வாங்கியிருக்கிறேன். இங்கு சிலர் இது மானுவாரிக்கு தான் லாயக்கு, இறைவைக்கு டி.எம்.வி.4. தான் போடவேண்டும் என்று சொல்லுகிருர்கள். டி.எம். வி.3 போடலாமா? கூடாதா? போடலாம் என்ருல் அதற்கு இடவேண்டிய உர அளவுகள் என்ன?

விடை: டி. எம். வி 3. நிலக்கடலை மானுவாரிப் பயிராக பயிர் செய்யத்தான் ஏற்றது. இறைவைப் பயிருக்கு அதிக மகசூல்பெற டி.எம்.வி. 4 டி.எம்.வி. 2 ஏற்றவை. மானுவாரி பயிராக டி.எம்.வி. 3. நிலக் கடலை எக்கருக்கு 1500 பவுண்டு காய்மகசூல் கொடுக்க கூடியது. இறைவைப்பயிரராக டி.எம்.வி. 4 3500 பவுண்டு காய் மகசூல் கொடுக்கக்கூடியது. இறைவை நிலக்கடலைக்கு கீழ்கண்டவாறு உரமிடவேண்டும்.

அடியுரமாக எக்கருக்கு 10 வண்டி தொழு உரம் அல்லது கம்போஸ்டு உரமிடவும். எக்கருக்கு 7 கிலோ தழைச்சத்து கிடைக்கும் வகையில் 35 கிலோ அம்மோனி யம் சல்பேட் அல்லது கால்சியம் அமோனியம் நைட்ரேட்டும், 14 கிலோ மணிச்சத்து கிடைக்கும் வகையில் $87\frac{1}{2}$ கிலோ சூப்பர் பாஸ்பேட்டும், 21 கிலோ சாம்பல் சத்து கிடைக்கும் வகையில் 35 கிலோ மியூரியேட ஆப்பொட்டாஷ் உரமும் அல்லது 150 கிலோ கலப்பு உரம் நெ. 7 (4:8:12)ம் ஒரே முறையில் விதைப்பதற்கு முன் இடவேண்டும்.

M. கனகேஸ்வரன், அண்டம்பள்ளம்

வினு: நல்ல சாதியான சிந்திக்காளையைக் கொண்டும் நாட்டு பசுவைக் கொண்டும் சினை செய்தால் எத்தனை தலை முறையில் நல்ல சிந்தி இனத்தைப் பெறலாம்.

விடை: நல்லசாதி சிந்திகாளையைக் கொண்டும் நாட்டுப்பசுவைச் சினை செய்தால் 5 அல்லது 6 தலை முறைகளில் நல்ல சிந்தி இனத்தைப்பெறலாம்.

அ. நல்லதம்பி சென்னமநாயக்கன்பட்டி
திண்டுக்கல்.

வினு: வீரிய ஒட்டுச்சோளம் எங்கு கிடைக்குமோ? அதை எந்தெந்த மாதங்களில் பயிரிடலாம்? அதற்கு என்ன உரம் இடவேண்டும்? நோய் உண்டானல் எந்த மருந்து தெளிக்கவேண்டும் என்டதைத் தெரியப்படுத்தவும்.

விடை. வீரிய ஒட்டுச்சோளம் சி.எஸ்.எச்·1 சோள விதைக்கு "கோயமுத்தூர் விதை கார்பரேசன், பேரூர் அஞ்சல், கோவை–10." என்ற முகவரிக்கு எழுதி பெற்றுக்கொள்ளலாம். இது பிப்ரவரி முதல் ஜூன்-ஜூலை வரையான கோடைப் பட்டத்திற்கு மிக ஏற்றது. இதற்கு விதைப்புக்கு முன் 10 டன் தொழு உரத்துடன் 200 கிலோ 5-ம் நம்பர் (9:9:9) கலப்பு உரம் இடு நடவும். நட்டபின் 20 அல்லது 25 நாட் கள் கழித்து எக்கருக்கு 90 கிலோ அம்மோனியம் சல்பேட்டை மேலுரமாக இடவும்.

நோய்பூச்சிகளைத் தடுக்க விதைத்து 7, 14-ம் நாட்களில் எண்டிரின் 1 அவுன்ஸ் மருந்துக்கு $6\frac{1}{4}$ காலன் தண்ணீர் வீதமும், மெட்டாசிஸ்டாக்ஸ் 1 அவுன்ஸ் மருந்துக்கு, 10 காலன் தண்ணீர் வீதமும் கலந்து தெளிக்கவும்.

22,31-ம் நாட்களில் எண்டிரின் குருணை மருந்தை இலைகளின் மேல் தூவவும். சிவப்புப்பேன் (Mite) தென்பட்டால் கந்தக தூளைத் தூவவும். கதிரில் பூச்சி, புழு, மிட்ஜ் தோன்றினால் 10 சத பி.எச்.சி. மருந்தையும் 5 சத டி.டி.டீ. மருந்தையும் கலந்து தூவவும்.

வெ. சின்னசாமி நாயுடு,
வடமலைபுரம்.

வினா: நான் எக்ஸ்-3 கம்பு பயிரிட நினைக்கிறேன். என்னுடைய நிலம் கரிசல் மண்ணுடையது. நீர் பாய்ச்சுவதற்கு ஏற்ற நிலையில் உள்ளது. மேற்படி நிலத்தில் x3 கம்பை பயிரிடுவதற்கு நாற்றங்கால் விட்டு நடவு செய்யவேண்டுமா? அல்லது விதைத்து தண்ணீர் விடலாமா? மே ஜூன் மாதத்தில் பயிரிட நினைக்கிறேன்.

விடை.—எக்ஸ்-3 கம்பு இறவைப் பயிராக சாகுபடி செய்ய, சாகுபடிக்கு தயார் செய்த நிலத்தில் நேரிடையாக விதைத்து விடலாம் அல்லது நாற்றங்கால் விட்டு நாற்றெடுத்து நடவும் செய்யலாம். இறவைப் பயிராக எப்ரல் மே பட்டத்தில் பயிர் செய்யவும். அக்டோபர் பட்டத்தில் மானாவாரிப் பயிராக பயிர் செய்யலாம்.

வினா.—H.B. 1 ரகக் கம்பு பயிரிடுவதற்கு மேலே கண்ட கரிசல் நிலத்தில் என்ன முறைகள் கையாண்டு எந்த பருவகாலத்தில் பயிரிடவேண்டும்?

விடை.—எக்ஸ்-3 கம்பைப் போலவே எச்.பி.1 கம்பையும் எப்ரல் முதல் ஜூலை மாத முடிவான கோடைப் பருவத்தில் பாசனப் பயிராகவும் அக்டோபர்-நவம்பர் முதல் ஜனவரி-பிப்ரவரி பட்டத்தில் பாசனப் பயிராக 2 மானாவாரி பயிராகவும் சாகுபடி செய்யலாம். மானாவாரிப் பயிரினால் நேரிடையாகவே விதைத்துவிடலாம். இறவைப் பயிரினால் நாற்றுவிட்டு நடவு செய்யவும்.

எச்.பி.1 கம்பு விதையை அக்ரசான் மருந்துடன் ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் மருந்து வீதம் கலந்து விதைக்கவும். ஒரு ஏக்கர் நட 3 செண்ட் நாற்றங்காலுக்கு 300 கிலோ தொழு உரம் இட்டு நாற்றங்காலில் 1 கிலோ விதை விதைத்து 18 நாட்களில் நாற்றெடுத்து நடவு செய்யவும். நடவு வயலுக்கு 10 முதல் 15 வண்டி தொழு உரம் இடவும். கடைசி உழவின்போது 45 கிலோ அம்மோனியம் சல்பேட் அல்லது 20 கிலோ யூரியா, 88 கிலோ சூப்பர் பாஸ்பேட்டும், 15 கிலோ மியூரியேட் ஆப் பொட்டாசும் அடி உரமாக இடவும். அல்லது 150 கிலோ 12-ம் நம்பர் (6–9–6) கலப்பு உரத்தை அடியுரமாக இடவும், வரிசைக்கு வரிசை 18 அங்குல இடைவெளியும், வரிசையில் நாற்றுக்கு நாற்று 6 அங்குல இடைவெளியும் விட்டு நடவு செய்யவும். நாற்று நட்டு மூன்றாவது வாரத்தில் களையெடுப்பின்போது 45 கிலோ அம்மோனியம் சல்பேட் அல்லது 20 கிலோ யூரியாவை மேலுரமாக இடவும்.

வினா.— மாசி மாதம் மேழிச்செல்வம் இதழில் வெளிவந்துள்ள "சீமைக்குதிரை மசால்" கால்நடைத் தீவனம் என்பதை எப்படிப் பயிரிடவேண்டும்? விதை நட்டா அல்லது நாற்றுப் பாவியா? எந்தப் பருவத்தில் விதைக்க வேண்டும்? விதைகளை எப்படி எங்கே பெறலாம்.

விடை —"சீமைக் குதிரை மசால்" 6 அடி முதல் 8 அடி வரை வளரக்கூடியது. இதைக் கால்நடைத் தீவனமாகவும் வேலிப் பயிராகவும் பயிர் செய்யலாம். இதன் விதையையே நேரிடையாக ஊன்றிவிட வேண்டும். நாற்றங்கால் ஏற்றதல்ல மழை காலத்தில் நிலத்தைக் கிளரிவிட்டு விதையை ஊன்றிவிட வேண்டும். இதன் விதைக்கும் மற்ற விபரங்களுக்கும் "தாவர வல்லுனர், விவசாயக் கல்லூரி & ஆராய்ச்சிக் கூடம், கோவை-3" என்ற முகவரிக்கு எழுதி தொடர்பு கொள்ளவும்.

வ.பெ. கணபதி, வடக்கு புதுப்பாளையம், கொடுமுடி.

வினா.—ஹைபிரீடு கம்பு, சோளம், இவைபோன்று கடலையிலும் ஹைபிரீடு விதை வந்திருப்பதாக எங்கள் D.A.O. அவர்கள் கூறினார்கள். மேற்படி விதைக் கடலை எனக்கு 2 ஏக்கர் போதும் அளவுக்கு வேண்டும். மேற்படி விதையை தருவித்து கொடுக்க வேண்டுமாய் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். அதற்கு உண்டான தொகையை கட்டிவிடுகிறேன். அதன் விவசாய முறையையும் தெளிவாக தெரியப்படுத்தவும்.

விடை.—நிலக்கடலையில் ஏ. எச். 7478 என்ற ரகம் (A.h. 7478) பரிசோதனையிலிருக்கிறது. இது டி. எம். வி ரக நிலக்கடலையைவிட 20 முதல் 30 சதம் அதிக மகசூல் கொடுக்கக்கூடியதென தெரிகிறது. இன்னும் இது உயர்தர பொறுக்கு விதையாக வெளியிடப்படவில்லை. விரைவில் வெளியிடப்படவிருக்கிறது. இதன் விதைக்கும் மற்ற விபரங்களுக்கும் "எண்ணெய் வித்துக்கள், நிபுணர், விவசாயக் கல்லூரி & ஆராய்ச்சிக் கூடம், கோவை-3." அவர்களுடன் தொடர்பு கொள்ளவும்.

M. R. சிவராமன், கல்பாவி ஆச்சல்.

வினா: யூரியாவை செடிகளுக்கு இலைகளின் மேல் தெளிப்பதால் சிறந்த பலனளிப்பதாக கூறப்படுகிறது. மானாவாரிப் பயிர்களுக்கு இந்த முறையைக் கையாண்டு நைட்ரஜன் சத்து நிலக்கடலைக்கும்; துவரைக்கும் ஊட்டலாமா? நிலத்தின் ஈரத்திற்கும் போலியர் ஸ்ப்ரேயுக்கும் ஏதாவது சம்பந்தம் உண்டா? நைட்ரஜன் தவிர மற்ற பாஸ்பரஸ், பொட்டாஸ் ஆகிய சத்துக்களை இலைகளின் மேல் தெளித்து செடிகளுக்கு ஊட்டலாமா? கோழி எரு, மக்கிய மாட்டுச் சாணம், புகையிலை கசாயம் ஆகிய பொருட்களை நீரில் கரைத்து இலைகளின் மூலம் N.P.K. ஆகிய மூன்று சத்துக்களும் செடிகளுக்கு கிடைக்கும்படி செய்ய இயலுமா?

விடை: கோவை விவசாய ஆராய்ச்சிப் பண்ணையில் இதுவரை செயற்கை உர ஊட்டகங்களை கேழ்வரகு, நெல் ஆகிய இரு பயிர்களுக்கு மட்டுமே பூமிக்கு மேலுள்ள தாள்களுக்குத் தெளித்து அதன் பயனை ஆராய்ச்சி செய்யப்பட்டிருக்கிறது. இச் செயற்கை உர ஊட்டங்களிலும் யூரியா, சூப்பர் பாஸ்ப்பேட் ஆகிய இவ்விரண்டையும் 1 சதவிகித தண்ணீர் கரைசலாக தெளிக்கப்பட்டது. பொட்டாசியம் பாஸ்பேட் (Tribasic) 5 சத விகித நீர்க்கரிசலாகத் தெளிக்கப்பட்டது. பயிர்களின் வயதுக்கு தகுந்தாற்போல் இந்த மூன்று கரைசல்களும் தனித்தனியே உரிய கால இடைவெளி விட்டு பயிர்களுக்கு மூன்று முறை தாள்களின்மேல் தெளிக்கப்பட்டது. இம்மாதிரி செய்வது நல்ல பலனளித்திருக்கிறது.

கோழி எரு, மக்கிய சாணம் முதலியன இயற்கை யுரங்களின் கரைசல்கள் பயிர்களுக்கு தழை, தாள் மூலம் தெளிக்கப்பட்டு இதுவரை பரிசோதிக்கவில்லை.

சௌந்திரராசன், கருப்பூர் (P. O.), சேலம் மாவட்டம்.

வினு: எனது நிலத்தில் உள்ள கிணற்றில் சோதனைக் குழாய் போட்டுப் பார்த்ததில் ஓரளவு தண்ணீர் மேலே வருகிறது. இதை பெரிய அளவில் ஆழமாக்க வேண்டும். ஆக போரிங் செட் வாடகைக்கு கிடைக்குமா? யாரிடம் கிடைக்கும். கட்டணம் என்ன. எவ்வளவு காலத்தில் கிடைக்கும்—என்பனபோன்ற விவரங்களைத் தெரிவிக்க முடியுமா?

விடை: விசை டிரில்லர் பற்றிய விபரத்தை 1966–ம் ஆண்டு ஆவணி மாதம் மேழிச் செல்வம் இதழில் பக்கம் 26–ல் பார்க்கவும். தற்பொழுது விசை டிரில்லர் தேவையானல் விவரங்களுக்கு உதவி விவசாய பொறியாளர், ஆய்வு (Inspection) சேலம் என்ற முகவரிக்கு எழுதி விவரம் பெற்று விண்ணப்பித்துக்கொள்ளவும். 1966–ம் ஆண்டு புரட்டாசி மாதம் மேழிச்செல்வம் இதழ் பக்கம் 17–ல் கிணறு ஆழப்படுத்த பாறைகளை உடைத்து கிணறுகளை ஆழப்படுத்தும் இயந்திரம் பற்றிய எல்லா விவரங்களும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதுவே தாங்கள் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடும்.

K. A. ஆறுமுகம், 11/25, கோட்டூர், மலையாண்டி பட்டினம் P. O., பொள்ளாச்சி.

வினு: காப்பி தேயிலைத் தோட்டங்களுக்குப் பயன்படும் சுண்ணும்பு தயாரிப்பு மேற்கொண்டிருக்கிறோம். விவசாயத்தில் சுண்ணும்பின் பங்கு எத்தகையது? பயன்படுத்திக் கொள்வதற்கு விஞ்ஞானப் பகுப்பு எப்படி இருக்கவேண்டும்; மண்ணை சமநிலப் படுத்துமாறு பயன்பட வல்லதா?

விடை. A. **சுண்ணும்பும் அதனுல் விவசாயத்திற்கு ஏற்படும் உபயோகங்களும்.**

B. சுண்ணும்புச் சக்தினுல் செடிகளுக்கும் மண்ணுக்கும் ஏற்படும் நன்மைகள்.

சுண்ணும்பில் கால்சியம், சில சமயங்களில் மக்னிசியம் ஆகிய இரண்டும் உள்ளன; அவைகள் செடிக்கு முக்கியமான சத்துப்பொருள்களாகும். சாதாரணமாக உபயோகத்திலிருந்துவரும் சுண்ணும்பும், மக்னிசயம் சத்துப்பொருள்களாவன:— கால்சியம் ஆக்சைடு (சுண்ணும்பு) கால்சியம் நைட்ரக்சைடு (Slakedlime) அல்லது நீர்த்த சுண்ணும்பு, கால்சியம் கார்பனேட் ஆகியவையும், டோலோமைட் (Dolomite), கால்சியம், கார்பெனட், மக்னிசியம் கார்பெனட் என்பதுமாம். இவைகளை ஜாக்கிரதையாக உபயோகிக்கும் பொழுது சுண்ணும்பின் பௌதிகச் சேர்க்கை நன்மை பயக்கும். மாறுதல்களை உண்டுபண்ணுகிறது. அதனுல் பூமியின் தரம் உயரவும், அதிக மகசூல் பெறவும் வழியுண்டாகிறது. சில சமயங்களில் தவருன முறையில் உபயோகப்படுத்திஞல் தீமை ஏற்படுகின்றது. அமிலத் தன்மையுள்ள மண் பூமிக்கு சுண்ணும்பு, நீர்த்த சுண்ணும்பு, சுண்ணும்பு கார்பெனேட் ஆகியவைகள் இடுவது நன்மையே தரும். களிமண் பூமிகள் களித்தன்மையை ஓர் அளவு இழந்து சாகுபடிக்கு எளிதாகப் பொருபொருப்புடைய மண்ணுக ஆகிறது. மணல் சாரியான பூமிகள் கால்சியம் கார்பனேட் என்றும் சுண்ணும்புச் சேர்க்கையால் ஓர் அளவு பிடிப்புள்ள மண்ணுக மாறுகிறது. இதனுல் ஈரப் பிடிப்பும் அதிகப்படுகிறது.

கீழே கண்டுள்ளவாறு செடிகளுக்கும் பூமிக்கும் சுண்ணும்பு உதவுகிறது.

1. பூமியிலிருந்து பாஸ்பரஸ் சத்து அதிக அளவில் செடிகளுக்குக் கிடைக்க சுண்ணும்பு உதவுகிறது.

2. செடிகள் பொட்டாசியம் சத்தை அதிகப்படியாக உட்கொள்ளுவதைத் தடுத்துக் குறைக்கிறது. குறைந்த செலவில் கிடைக்கக்கூடிய கால்சியத்தை அதிகமாக உட்கொள்ளவும் அதிக விலையுள்ள பொட்டாசியத்தையும் குறைந்த அளவில் கிரகித்துக் கொள்ளவும் செடிகளுக்கு உதவுகிறது.

3. இயற்கைக் கரிமப் பொருள்களை சுலபமாக மக்கவைத்து அதிலிருந்து கிடைக்கும் நைட்ரஜன் [தழைச் சத்தை] அதிகரிக்கிறது.

4. [Dolomite] டால்மைட் ஒன்றும், கால்சியம் கார்பனேட், மெக்னிசியம் கார்பெனெட் இரண்டில் செடியின் வளர்ச்சிக்கு தேவையான 16 மூலப் பொருள்களில் கால்சியம், மெக்னிசியம் என்னும் இரண்டு பொருள்கள் செடிகளுக்கு கிடைக்கின்றன.

5. சுண்ணும்பு பூமியில் உள்ள பாக்டீரியா என்னும் நுண்ணுயிர்களை ஊக்குவிக்கிறது.

6. பூமியில் கெடுதல் உண்டுபண்ணும் அலுமீனியம், மேங்கனீஸ், இரும்பு ஆகியவைகள் கெடுதல்

57ம் பக்கம் பார்க்கவும்,

என்ஜின்கள் - விவசாயிகளால்
பெருமை-
யுடன்
பேசப்படு-
பவை...!
Kirloskar
டீஸல்
என்ஜின்கள்
விவசாயத்திற்கு
எவி 1 5 ஹார்ஸ் பவர்
டீஸல் என்ஜின்கள்
மலிவான விலை
நம்பத்தகுந்தது
செலுத்துவதும் நிர்வாகமும் சிக்கனமானது
சுலபமாகக் கையாளக்கூடியது
எளிதில் நிறுவக்கூடியது
தொந்திரவற்ற சேவை
ஆயில் என்ஜின்ஸ் லிட்., பூனா-3

1966-ம் ஆண்டு நவம்பர் மாதத்திய காலநிலை அறிக்கை

(கே. எம். சுந்தரம், ரா. ஜானகிராமன், விவசாய ஆராய்ச்சி நிருவனம், கோவை.)

இம் மாதம் முதல் வாரத்தில் ஏறக்குறைய எல்லா இடங்களிலும் பரவலான பாரல் இருந்தது. இரண்டாவது வாரம் அது நெடுகலும் கனமான மழையாக மாறிற்று. மூன்றும் வாரத்தில் கடைசி தேதியைத் தவிர மற்றய நாட்களில் இங்கு மங்கும் மாத்திரம் மழை பெய்தது. 22, 23 தேதிகளில் வரட்சியே நிலவியது. பிறகு மாத இறுதி வரை இங்கும் அங்கும் மழையிருந்தது.

இம்மாதம் 4-ம் தேதி சென்னையையடுத்துப் புயல் காற்று வீசிற்று. 8, 10 தேதிகளுக்கு இடையே நாகைக்கும் பாம்பனுக்கு மத்தியிலும், 18-ம் தேதி வேதாரண்யத்திற்கு அடுத்தும், 27, 28 தேதிகளில் கடலூர், சென்னை இவற்றையடுத்தும் புயற் சூழ்நிலை ஏற்பட்டது; ஆகையால் இம்மாநிலத்தில் அநேக இடங்களில் கனத்த மழையிருந்தது.

இரவு உஷ்ணத்தில் மாவட்டங்கள் எல்லாவற்றிலும் ஊசல்கள் தென்பட்டன.

கால நிலையும் பயிர் வளர்ச்சியும்.

இம்மாதம் செங்கற்பட்டு மாவட்டத்தில் பலத்த புயலுடன் கூடிய மழையிருந்தது. இதனால் நெல், தென்னை, வாழை, கரும்பு, வெற்றிலை முதலிய பயிர்களெல்லாம் பாதிக்கப்பட்டன. பின்பட்ட சம்பா விதைப்பு முடிவடைந்தது. நெல்லில் கூட்டுப் புழுக்கள். தத்துப் பூச்சிகள், துளைப்பான்கள் முதலிய தென்பட்டன. காய்கறிகளில் கடலை வண்டுகள், துளைப்பான்கள் முதலிய தென்பட்டு உடனடியான தடுப்பு முறைகள் மேற்கொள்ளப் பட்டன. வட ஆற்காடு மாவட்டத்திலும் நல்ல மழையிருந்தது. இதனால் கரும்பு, நெல், சோளம் முதலிய நல்ல பயனுற்றன. பூச்சியோ, வியாதியோ தென்படவில்லை.

தென்னாற்காடு மாவட்டத்தில் புயலுடன் கூடிய மழை 4, 27 தேதிகளில் ஏற்பட்டு பலத்த சேதத்தை விளைவித்தது. கரும்பு, சோளம், நெல் இவை சாய்ந்தன. ஆமணக்குப் போன்ற பயிர்களில் இலைகளும், பூக்களும் ஒடித்து எறியப்பட்டன. வேர்கடலை நீரில் ஊறி முளைக்க ஆரம்பித்தது. வேர்கடலையில் புள்ளி நோயும், ஆமணக்கில் கொக்கிப் புழுவும் ஏற்பட்டு தகுந்த தடுப்பு முறைகள் கையாளப்பட்டன. தஞ்சை மாவட்டத்திலும் கனத்த மழையிருந்தது. சம்பா நெல்லுக்கு இது பயனளித்தபோதிலும், தாளடி நடவுக்கும், கால்நடை கொண்டு குறுவை நெல்லைத்தாம்படிப்பதற்கும் இது இடையூறு செய்தது. சம்பாவிலும், தாளடியிலும் துளைப்பான்களும், சம்பாவில் ஈயும், புள்ளி நோயும் கண்டு தகுந்த தடுப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

திருச்சி மாவட்டத்தில் பெய்த மழை மானாவாரிப்பயிர்களுக்கு நன்மை பயத்தது. ஆனால், நஞ்சைப் பயிர்கள் மிகவும் பாதிக்கப்பட்டன. அரியலூர்ப் பகுதிகளில் நெல்லில் தத்துப் பூச்சி, துளைப்பான் முதலிய கண்டு தடுப்பு முறைகள் கையாளப்பட்டன. சேலம் மாவட்டத்தில் அதிக மழையாலும், காற்றாலும் நெற்பயிர்கள் சாய்ந்தன. சோளமும் பாதிக்கப்பட்டது. மரவள்ளி, சேனை முதலிய கிழங்குகளும் பாதிக்கப்பட்டன. பின்பட்ட சம்பா நடவு முடிந்தது. முன்பட்ட சம்பா நெல், வேர்கடலை இவற்றின் அறுவடை முடிந்தது. நெல்லில் துளைப்பான்களும், கொள்ளை நோயும், பருத்தியில் அசுகும், தத்துப் பூச்சியும் ஏற்பட்டு தடுப்பு முறைகள் கையாளப்பட்டன. கோவை மாவட்டத்தில் நல்ல மழையின் காரணமாக பருத்தி, வேர்கடலை, சோளம், நெல் கரும்பு, வாழை முதலியன நல்ல பலனடைந்தன. ஈரோடு பகுதிகளில் அதிக மழை அறுவடைக்குத் தயாராக இருந்த நெல்லைக் கொஞ்சம் பாதித்தது. பின்பட்ட சம்பா நாற்று விடப்பட்டது. நெல்லில் தத்துப் பூச்சியும், துளைப்பான்களும், புள்ளி நோயும் கண்டன. பருத்தியில் காய்ப்புழு. அசுகு, தத்துப்பூச்சி முதலியவையும், வேர்கடலையில் அசுகு, சுருள் பூச்சிகளும், இலைப்புள்ளி நோயும் கண்டு தகுந்த தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

மதுரை, இராமநாதபுரம் பகுதிகளில் கம்பு, வேர்கடலை போன்ற பயிர்கள் அதிக மழையால் பாதிக்கப்பட்டன. ஏனைய நெல், கரும்பு, ராகி, பருத்தி முதலிய பயிர்கள் நலனுற்றன. எள் முதலியன இம்மழைக்குப் பிறகு விதைக்கப்பட்டன. நெல்லில் துளைப்பான்களும், வேர்கடலையில் கம்பளிப் பூச்சியும், சிறிது ஏற்பட்டு தகுந்தபடி தடுக்கப்பட்டன. நெல்லை மாவட்டத்தில் பெய்த மழை நெல், மிளகாய் இவை நடுவதற்கு மிக உபயோகமாக இருந்தது. மானாவாரிப் பயிர்களுக்கும், நஞ்சைப் பயிர்களும் நல்ல முறையில் இருக்கின்றன. கொள்ளை நோயும், புள்ளி நோயும் நெல்லில் கண்டு தகுந்த தடுப்பு முறைகள் மேற்கொள்ளப்பட்டன.

நீலகிரி மாவட்டத்தில் நவம்பர் மாத உருளைக்கிழங்கு நடவு இம்மாதத்தில் இரண்டாம் பகுதியில் துவக்க மாயிற்று. மிகவும் கனத்த மழையால் மண் அணைப்பு முதலிய காரியங்கள் செய்ய முடியவில்லை. சூறைநோய் பெருமளவில் கண்டு மகசூல் மிகவும் பாதிக்கப்பட்டது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் நல்ல மழையால் எல்லாப் பயிர்களுமே நல்லுற்றன. நெல், வேர்கடலை, மரவள்ளி முதலியன நடப்பட்டன. நெல்லில் தத்துப் பூச்சி, துளைப்பான், முதலிய சிலவிடங்களில் பெருவாரி யாகத் தென்பட்டு உடனே தடுப்பு முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன.

குறிப்பிடத்தக்க மழையளவுகள் (மில்லி மீட்டர்களில்)

வரிசை எண்.	தேதி.	இடத்தின் பெயர்.	மழையளவு.
1	4–11–66	திண்டிவனம்	325.6
2	10–11–66	சென்னை	160.0
3	10–11–66	திருர்	158·8
4	10–11–66	குடியாத்தம்	118.1
5	10–11–66	பாலூர்	108.0
6	10–11–66	கடலூர்	120.0
7	10–11–66	ஆனியார்நகர்	108.0
8	10–11–66	கோடைக்கானல்	120.0
9	10–11–66	உதகை	114.8
10	10–11–66	கூனூர்	114.8

பிராந்திய மழையளவுகள் [மில்லி மீட்டர்களில்)

வரிசை எண்.	பிராந்தியத்தின் பெயர்.	நவம்பர் மாதமழை யளவு	சராசரி யிலிருந்து மாறுபாடு	குறிப்பு.
1	வட பிராந்தியம் ..	439.5	+186.0	சரா சரிக்கு மிக அதிகம்.
2	கீழ்க்கரைப் பிராந்தியம்	364.0	+ 49.2	அதிகம்
3	மத்தியப் பிராந்தியம்	164.0	+ 14.1	சிறிது அதிகம்
4	தென் பிராந்தியம்	134.6	— 68.1	மிக அதிகம்
5	மலைப் பிராந்தியம்	290.7	+ 58.0	அதிகம்

1966-ம் ஆண்டு ஆகஸ்டு மாத காலநிலை அறிக்கை (மழையளவு மில்லி மீட்டர்களில்).

இடத்தின் பெயர். (1)	இம்மாத மழை யளவு (2)	சராசரியில் இருந்து மாறுபாடு. (3)	ஜனவரி 1ம் தேதி முதல் மொத்த மழையளவு. (4)
வட பிராந்தியம்—			
சென்னை (மீனம்பாக்கம்) ..	535·0	+180·4	1536·0
திருர்க்குப்பம்*	473·0	+147·0	1467·8
வேலூர்	460·0	+264·9	1230·0
குடியாத்தம்*	290·0	+152·8	960·2
கீழ்க்கரைப் பிராந்தியம்—			
பாலூர்*	311·0	+0·1	1418·3
திண்டிவனம்*	713·0	+500·9	1733·3
கடலூர்	534·0	+139·8	1592·8
நாகப்பட்டினம்	153·0	+292·5	885·0
ஆடுதுறை*	253·0	—66·8	1546·1
பட்டுக்கோட்டை*	221·6	+13·5	1463·5
மத்தியப் பிராந்தியம்—			
சேலம்	191·0	+94·2	1215·0
சேலம்*	149·4	+37·4	1296·5
கோயமுத்தூர்*	80·8	—54·8	695·7
கோயமுத்தூர்	73·0	—29·4	567·0
ஆனியார் நகர்*	243·8	+76·0	811·2
திருச்சிராப்பள்ளி	138·0	—39·0	1073·0
தென் பிராந்தியம்—			
மதுரை	163·0	+17·4	417·0
பாம்பன்	82·0	—215·7	243·0
கோவில்பட்டி*	160·0	—25·4	894·4
பாளையங்கோட்டை ..	137.0	—51·7	425·0
அம்பாசமுத்திரம்* ..	123·4	—107·0	522·6
நாகர்கோயில்*	111·8	—75·2	468·2
கன்னியாகுமரி*	165·0	—19·0	532·0
மலைப்பிராந்தியம்—			
கொடைக்கானல்	253·0	—5·8	446·0
கூனூர்*	395·7	—16·5	1505·5
உதகமண்டலம்*	331·0	—179·6	1543·3
நஞ்சநாடு *	183·1	—41·9	1473·4

குறிப்பு:—.* சென்னை விவசாய இலாக்காவின் ஆராய்ச்சிப் பண்ணைகள்.

1966-ம் ஆண்டு டிசம்பர் மாதத்திய கால நிலை அறிக்கை

(கே. எம். சுந்தரம், ரா. ஜானகிராமன், விவசாய ஆராய்ச்சி நிறுவனம்,—கோவை.)

இம்மாதம் பரவலான தூறலுடன் ஆரம்பித்தது. அடுத்த இரண்டு நாட்களில் இது குறைந்து அங்கு மிங்கும் மாத்திரம் சிறு தூரல் இருந்தது. ஆனால் வங்காள விரிகுடாவில் ஏற்பட்ட புயல் சூழ்நிலையால் அடுத்த நான்கு நாட்களில் மழை வலுத்து ஒன்பதாம் தேதியில் இருந்து திரும்ப ஓய ஆரம்பித்தது. இதற் கடுத்த ஒன்பது நாட்களில் வெகுவாக வறட்சியே நிலவியது. மறுமுறை வங்காள விரிகுடாவில் புயல் அறிகுறி காணவே அடுத்த நான்கு நாட்களில் சிறு தூரலும், மழையும் பரவலாக இருந்தது. அதற்குப் பின்னர் மாத இறுதி வரை மாநிலம் முழுக்க வரட்சியே நிலவியது.

இரவு சீதோஷ்ண நிலையில் ஏற்றத் தாழ்வுகள் ஏறக்குறைய எல்லா மாவட்டங்களிலும் தென்பட்டது.

கால நிலையும் பயிர் வளர்ச்சியும்

இம்மாதம் செங்கற்பட்டு மாவட்டத்தில் நல்ல மழை யிருந்தது. இதனால் முன்பட்ட சம்பா அறுவடை சிறிது பாதிக்கப்பட்டது. நவரை நெல் நாற்று விடப் பட்டது. தோட்ட நிலக்கடலை விதைக்கப்பட்டது. நெல்லில் சிறிது நவாய்பூச்சி. துளைப்பான், கூடுகட்டும் புழு முதலியவையும், சிறிது கொள்ளை நோயும் கண்டது. வட ஆற்காடு மாவட்டத்திலும் நல்ல மழையிருந்தது. பயிர்கள் நல்ல நிலையில் இருந்தபோதிலும், நெல்லில் துளைப்பான்கள் கண்டன. தென்னாற்காடு மாவட்டமும் நல்ல மழையடைந்தது.

தஞ்சை மாவட்டத்தில் பெய்த மழை சம்பா, தாளடிப் பயிர்கள் இரண்டிற்கும் நன்மை பயந்தது. திருச்சி மாவட்டத்திலும் சுமாரான மழையிருந்தது. எல்லாப் பயிர்களும் நல்ல நிலையில் இருந்தன.

சேலம் மாவட்டத்தில் அதிக மழையால் மரவள்ளி முதலிய கிழங்குகளும், சிறு தானியங்களும் பாதிக்கப் பட்டன. தோட்டக்கால் ராகி நாற்றும், ஏனைய தோட்டக் கால் விதைப்புகளும் அதிக ஈரத்தால் தள்ளிப் போடப்பட்டன. மேட்டூர் கால்வாயின் கீழ் உள்ள நெல் நாற்றங்கால்களில் பெருமளவு பூச்சிகளும். வியாதிகளும் தென்பட்டு தடுப்பு முறைகள் கையாளப் பட்டன.

கோயமுத்தூர் மாவட்டத்தில் சோளம், நிலக்கடலை முதலியவை அறுவடையாயின. அதிக மழையால் மகசூல் பாதிக்கப்பட்டது. பிற்பட்ட சம்பா நன்றாக வளர்ச்சியடைந்தது. ஈரோடு பகுதிகளில் தோட்ட ராகி நாற்று விடப்பட்டது.

ராமநாதபுரம், மதுரை மாவட்டங்களில் மாத முற்பகுதியில் மழையிருந்தது. நெல்லை மாவட்டத் திலும் மழை மிகுந்த நன்மை செய்தது. ஆனால் பருத்தியில் பிஞ்சு உதிரலும், கம்புக் கதிர்களில் பால் பிடித்தலில் சிறிது தீமையும் ஏற்பட்டது. குறிப்பிடத்தகுந்த அளவில், பூச்சியோ வியாதியோ ஏற்படவில்லை.

நீலகிரி மாவட்டத்தில் நவம்பர் மாதம் நட்ட உருளைக் கிழங்குக்கும், காய்கறிகளுக்கும் மழை நன்மை செய்தது. அதிக ஈரத்தின் காரணமாக உருளைக் கிழங்கில் சூறை நோய் பெருமளவில் காணப்பட்டது. அதனால் மகசூலும் பாதிக்குமேல் குறைந்துவிட்டது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் பெய்த மழை போதிய அளவில் இல்லாததால், மா, கொய்யா முதலியவற்றிற்கு அடிக்கடி நீர்ப்பாசனம் கொடுக்கவேண்டியிருந்தது. நெல்லில் குறுத்துப்பூச்சிகள் சிறிதளவில் கண்டு தடுப்பு முறைகள் கையாளப்பட்டன.

குறிப்பிடத்தக்க மழையளவுகள் (மில்லிமீட்டர்களில்)

வரிசை எண்.	தேதி.	இடத்தின் பெயர்.	மழையளவு.
(1)	(2)	(3)	(4)
1	7—12—66	நாகப்பட்டினம்	120·0
2	12—12—66	அம்பாசமுத்திரம்	90·2
3	20—12—66	கடலூர்	128·0
4	,,	பாலூர்	84·0
5	,,	சென்னை (மீனம்பாக்கம்)	79·0

பிராந்திய மழையளவுகள் (மில்லி மீட்டர்களில்)

வரிசை எண்.	பிராந்தியத்தின் பெயர்.	நவம்பர் மாத மழையளவு.	சாதாரணத்திலிருந்து மாறுபாடு.	குறிப்பு.
(1)	(2)	(3)	(4)	(5)
1.	வட பிராந்தியம்	90·4	+21·4	சாதாரியிலிருந்து அதிகம்-
2.	கீழ்க்கரைப் பிராந்தியம்	199·8	+27·3	,,
3.	மத்தியப் பிராந்தியம்	69·4	+24.1	,,
4.	தெனபிராந்தியம் ..	130·5	+38·4	,,
5.	மலைப்பிராந்தியம் ..	92·9	—19·4	குறைவு

[62-ம் பக்கம் பார்க்கவும்]

தமிழ்நாட்டு வர்த்தகப் பயிர்களின் 1966-ம் வருடத்திய அக்டோபர் நவம்பர் மாதத்திய விற்பனை விவரங்கள்.

அக்டோபர் மாதம்

பருவ நிலை

தமிழ் நாட்டில் சில முக்கிய இடங்களில் பெய்த மழையின் அளவு சென்ற மாதத்திற்கும் இம்மாதத்திற்கும் ஒப்பிட்டுக் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(மழையின் அளவு மில்லி மீட்டரில்)

வரிசை எண். (1)	இடத்தின் பெயர். (2)	அக்டோபர். (3)	செப்டம்பர். (4)
1.	கோவை	216	107
2.	கடலூர்	491	108
3.	கள்ளக்குறிச்சி	298	128
4.	தூத்துக்குடி	167	191
5.	பாளையங்கோட்டை	293	971
6.	திருச்சி	299	182
7.	திருப்பத்தூர்	292	155
8.	வேலூர்	255	160

வர்த்தக நிலைமை

தமிழ் நாட்டிலுள்ள விற்பனைக் கூடங்களுக்கு வந்த பருத்தி, பஞ்சு, இவைகளின் விவரங்கள்.
(குவிண்டாலில்.)

அ. கோயமுத்தூர் மார்க்கெட் கமிட்டி.

1. கருங்கண்ணி பருத்தி

வரிசை எண். (1)	விற்பனைக் கூடத்தின் பெயர். (2)	ஆரம்ப இருப்பு. (3)	விற்பனைக்கு வந்தவை. (4)	விற்பனை. (5)	இறுதி இருப்பு. (6)
1.	தாராபுரம்	50	..	..	50
2.	உடுமலைப்பேட்டை	..	..	..	..
3.	திருப்பூர்	..	..	..	..
		50	..	..	50

2. கருங்கண்ணி பஞ்சு

வரிசை எண். (1)	விற்பனைக் கூடத்தின் பெயர். (2)	ஆரம்ப இருப்பு. (3)	விற்பனைக்கு வந்தவை. (4)	விற்பனை. (5)	இறுதி இருப்பு. (6)
1.	திருப்பூர்	..	..	..	..
2.	உடுமலைப்பேட்டை	5	..	..	5
		5	..	..	5

3. கம்போடியா பருத்தி

வரிசை எண். (1)	விற்பனைக் கூடத்தின் பெயர். (2)	ஆரம்ப இருப்பு. (3)	விற்பனைக்கு வந்தவை. (4)	விற்பனை. (5)	இறுதி இருப்பு. (6)
1.	திருப்பூர்	13,465	15,469	19,874	9,060
2.	தாராபுரம்	700	..	700	..
3.	பொள்ளாச்சி	..	..	..	..
4.	பெருந்துறை	1,075	5,400	6,475	..
5.	சென்னிமலை	5,300	250	1,450	4,100

வரிசை எண். (1)	விற்பனைக் கூடத்தின் பெயர். (2)	ஆரம்ப இருப்பு. (3)	விற்பனைக்கு வந்தவை. (4)	விற்பனை. (5)	இறுதி இருப்பு. (6)
			(குவிண்டாலில்).		
6	கோயமுத்தூர் ..	6,900	2,000	2,000	6,900
7	புஞ்சைப் புளியம்பட்டி..	2,370	1,880	2,410	1,840
8	அன்னூர் ..	3,000	..	..	3,000
9	உடுமலைப்பேட்டை ..	150	..	..	150
10	பல்லடம் ..	900	800	1,200	500
11	கோபிச்செட்டிபாளையம்.	100	150	150	100
	மொத்தம் ..	33,960	25,949	34,259	25,650

4. கம்போடியா பஞ்சு—

1	பொள்ளாச்சி	400	800	700	500
2	திருப்பூர் . ..	18,837	7,269	10,839	15,267
3	உடுமலைப்பேட்டை	105	..	..	105
4	கோபி	55	50	55	50
5	ஈரோடு	1,330	300	620	1,010
6	சென்னிமலை	2,000	..	510	1,490
7	பெருந்துரை	435	..	435	..
8	கோயமுத்தூர் ..	5,000	1,800	1,800	5,000
9	புஞ்சைப் புளியம்பட்டி ..	2,860	1,760	2,470	2,150
10	பல்லடம்	400	900	1,000	300
11	அன்னூர்	200	..	..	200
	மொத்தம் ..	31,622	12,879	18,429	26,072

ஆ. இராமநாதபுரம் மார்க்கெட் கமிட்டி.

கருங்கண்ணி பருத்தி—				
விருதுநகர்	950	2,000	2,000	950
கருங்கண்ணி பஞ்சு—				
விருதுநகர்	1,000	560	560	1,000
உகண்டா பருத்தி—				
இராசபாளையம்	3,250	4,000	4,000	3,250
உகண்டா பஞ்சு—				
இராசபாளையம்	3,000	1,120	720	3,400

வர்த்தக நிலைமை—

இம் மாதத்தில் பருத்தி, பஞ்சு விலைகள் ஸ்திரமான நிலையிலேயே இருந்தன. பொதுவாக சீசன் முடிவுற்று நீண்டகாலம் ஆகிவிட்டமையால் வரவுகளும் விற்பனையும், குறைவாகவே காணப்பட்டது.

பருத்தி, பஞ்சு இரகங்களின் விலைகள்.

இராமநாதபுரம் மார்க்கெட் கமிட்டி—

விளைபொருள். (1)		முதல் ரகம். (2)	இரண்டாம் ரகம். (3)	மூன்றும் ரகம். (4)
			[குவிண்டாலுக்கு (விலை ரூபாயில்.)]	
பருத்தி—				
கருங்கண்ணி	..	176—180	134—145	115—125
உகண்டா	..	200—215	130—150	90—110
பஞ்சு—				
கருங்கண்ணி	..	390—416	370—380	350—360
உகண்டா	..	..	..	..
பருத்தி விதை—				
கருங்கண்ணி	..	51—75 } பொது.		
உகண்டா	..	50—75 }		

கோயமுத்தூர் மார்க்கெட் கமிட்டி—

வரிசை எண். (1)	இடத்தின் பெயர். (2)	பருத்தி. கம்போடியா. (3)	பருத்தி. கருங்கண்ணி. (4)	பஞ்சு. கம்போடியா. (5)	பஞ்சு. கருங்கண்ணி. (6)
			(விலைகள் குவிண்டாலுக்கு.)		

விலைபோக்கு.—பருத்தி இருப்புகள் குறைவாயும் வரவு சொற்பமாகவும் காணப்பட்டு பிரியம் சுமாராக காணப்பட்டதால் விலைகள் ஸ்திரமாகக் காணப்பட்டது.

வரிசை எண்.	இடத்தின் பெயர்.	கம்போடியா.	கருங்கண்ணி.	கம்போடியா.	கருங்கண்ணி.
1	திருப்பூர் ..	251	..	400	..
2	கோயமுத்தூர் ..	220	..	425	..
3	பொள்ளாச்சி		...	499	..
4	கோபி ..	190	..	460	..
5	அவனுசி ..	..	..	400	..
6	ஈரோடு ..	..	..	..	..
7	பெருந்துறை ..	115	..	360	..
8	அன்னூர் ..	..	..	..	..
9	உடுமலைப்பேட்டை .	..		..	..
10	சென்னிமலை ..	190	..	430	..
11	புஞ்சைப் புளியம்பட்டி ..	197	..	545	..
12	பல்லடம் ..	200	..	490	..
13	தாராபுரம் ..	..	..	..	..

தமிழ்நாட்டிலுள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் வந்த நிலக்கடலை விவரங்கள்.

வரிசை எண். (1)	மாவட்டத்தின் பெயர். (2)	ஆரம்ப இருப்பு. (3)	விற்பனைக்கு வந்தவை. (4)	விற்பனையானவை. (5)	இறுதி இருப்பு. (6)
				(குவிண்டாலில்.)	
முழு கடலை—					
1	வட ஆற்காடு ..	28·00	1,912·00	1,904·00	36·00
2	கோவை ..	11,204·00	49,420·00	43,710·00	16,914·00
3	இராமநாதபுரம் ..	..	1,000·00	1,000·00	..
4	தென்னாற்காடு ..	..	..	..	..
முழு பயிர்—					
1	வட ஆற்காடு ..	5,336·40	3,540·00	2,585·00	6,291·40
2	திருச்சி ..	6,533·72	836·92	729·38	6,641·26
3	கோவை ..	9,205·00	11,620·00	11,435·00	9,390·00
4	இராமநாதபுரம் ..	600·00	3,000·00	2,600·00	1,000·00
5	தென்னாற்காடு ..	3,247·00	74,831·00	45,776·00	32,302·00

வர்த்தகப் போக்கு—

கோயமுத்தூர் மாவட்டத்தில் எண்ணெய் விலை சிறிது குறைந்துவிட்டதினால் நிலக்கடலைக் காய், பருப்பு இவைகளின் விலையும் இறங்கு முகமாக இருந்தன. சேலம், மதுரை, இராமநாதபுரம், ஆற்காடு மாவட்டங்களில் இருந்து நிலக்கடலை வரவு இருந்தது.

வட ஆற்காடு, இராமநாதபுரம் மாவட்டங்களில் நிலக்கடலை வரவு குறைந்து காணப்பட்டது. காரணம் பலத்த மழையே.

தமிழ்நாட்டின் விற்பனைக் கூடங்களில் நிலக்கடலைப் பருப்பு, எண்ணெய், பிண்ணாக்கு இவைகளின் விலை அளவு.

விளைபொருள். (1)	இராமநாதபுரம். (2)	தென்னாற்காடு. (3)	கோவை. (4)	திருச்சி. (5)	வட ஆற்காடு. (6)
			[குவிண்டாலுக்கு (விலை ரூபாயில்)]		
நிலக்கடலை ..	..	..	66—122	..	87—100
நிலக்கடலை பருப்பு ..	137·50—182·50	162—175	150—190	192—216	106—200
எண்ணெய் ..	340—350	..	..	..	..
பிண்ணாக்கு ..	62—64	..	..	..	..

வியாபாரப் போக்கு—

சென்ற மாதத்தில் இருந்ததைவிட இம்மாதத்தில் நிலக்கடலை விலை குறைந்துள்ளது. எண்ணெய் விலை குறைந்ததால் மேலும் நிலக்கடலை, பருப்பு விலையும் குறைந்துவிட்டது.

தமிழ்நாட்டில் எள் செப்டம்பர் மாதத்திய கொள்முதல் விற்பனை விவரம்.

வரிசை எண்.	விற்பனைக் கூட பெயர்.	ஆரம்ப இருப்பு.	விற்பனைக்கு வந்தவை.	விற்பனையானவை.	இறுதி இருப்பு.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
		ரூ. பை.	ரூ. பை.	ரூ. பை.	ரூ. பை.
1	தென் ஆற்காடு ..	4,470·00	5,771·00	5,771·00	4,470·00
2	திருச்சி ..	1,668·93	836·92	729·38	1,845·64

கோவை மாவட்டத்தில் முக்கியமான விற்பனைக் கூடங்களுக்கு விற்பனைக்கு வந்த புகையிலையின் அளவு.
(குவிண்டாலில்.)

1	பொள்ளாச்சி ..	530	100	80	550
2	கோப்பனூர்புதூர் ..	1,425	1,300	900	1,825
3	கோபி ..	1000	100	200	900
4	திருப்பூர் ..	13,800		1,700	12,100
5	புஞ்சைப் புலியம்பட்டி ..	5,935	23,775	17,580	12,130
6	ஒலகடம் ..	40,000	5,000	5,000	40,000
7	சித்தோடு ..	2,010	25	105	1,930
8	ஈரோடு ..	2,547	38	140	2,445
9	காரமடை மேலும் மேட்டுப் பாளையம்	13,000	..	..	13,000
10	பல்லடம் ..	8,500	900	1,100	8,300
11	கோயமுத்தூர் ..	350	300	300	350
12	தாராபுரம் ..	1,200	250	250	1,200
13	கொடுமுடி ..	555	..	30	525
14	பெருந்துறை ..	185	..	..	185
15	உடுமலைப்பேட்டை ..	130	..	..	130
	மொத்தம் ..	91,167	31,788	27,385	95,570

புகையிலை வகைகளின் விவரங்கள்.

வரிசை எண்.	விற்பனை கூடத்தின் பெயர்.	முதல் தரம்.	இரண்டாம் தரம்.	மூன்றும் தரம்.
(1)	(2)	(3)	(4)	(5)
		(குவிண்டாலுக்கு விலை ரூபாயில்)		
வாய் புகையிலை—மீனம்பாளையம்—				
1	கோயமுத்தூர் ..	300	200	100
2	கோபி ..	500	400	200
3	பல்லடம் (ஜாப்னு) ..	500	300	150
வாய் புகையிலை—				
1	பொள்ளாச்சி ..	191	170	130
2	ஈரோடு ..	240	192	155
3	கோயமுத்தூர் ..	300	200	100
சுருட்டுப் புகையிலை—				
1	ஈரோடு ..	235	185	150
2	அந்தியூர் ..	..	..	..
குழிப் புகையிலை—				
	பல்லடம் ..	200	100	50

வியாபாரப் போக்கு—

கடந்த மாதத்தில் இருந்தது போலவே புகையிலை விலை ஸ்திரமாகக் காணப்பட்டது. சென்னை மாகாணத்தில் சேலம், திருச்சி, நீலகிரி ஜில்லாவிற்கும் கேரளா, மைசூர், ஆந்திரா முதலிய வெளி மாகாணங்களுக்கும் ஏற்றுமதி இருந்தது.

நவம்பர் மாதம்.

பருவநிலே.

இம்மாதம் எல்லா மாவட்டங்களிலும் பலத்த மழையும் காற்றும் கடுமையாக இருந்ததால் செங்கற்பட்டு, தென்னுற்காடு, மற்றும் வட ஆற்காடு மாவட்டங்களில் விவசாயத்திற்கும் மற்றும் போக்குவரத்திற்கும் சேதாரம் அதிகமாக விளைவித்துள்ளது. மழையின் காரணமாக தமிழ்நாட்டில் உள்ள எல்லா வரிகள், குளங்கள் மற்றும் ஆறுகள் எல்லாம் நிரம்பிவிட்டன:—

தமிழ்நாட்டில் சில முக்கிய இடங்களில் பெய்த மழையின் அளவு சென்ற மாதத்திற்கும் இம்மாதத்திற்கும் ஒப்பிட்டு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

வரிசை எண். (1)	இடத்தின் பெயர். (2)	நவம்பர். (3)	அக்டோபர். (4)
		(மழையின் அளவு மில்லி மீட்டரில்)	
1	கோவை	74	216
2	கடலூர்	535	419
3	கள்ளக்குறிச்சி	288	298
4	தூத்துக்குடி	207	167
5	பாளையங்கோட்டை	தகவல் இல்லே.	293
6	திருச்சி	138	299
7	திருப்பத்தூர்	தகவல் இல்லே.	292
8	வேலூர்	461	255

வர்த்தக நிலேமை.

தமிழ்நாட்டிலுள்ள விற்பனைக்கூடங்களுக்கு வந்த பருத்தி பஞ்சு, இவைகளின் விவரங்கள் (குவிண்டாலில்).

அ. கோயமுத்தூர் மார்க்கெட் கமிட்டி.

வரிசை எண். (1)	விற்பனைக்கூடத்தின் பெயர். (2)	ஆரம்ப இருப்பு. (3)	விற்பனைக்கு வந்தவை. (4)	விற்பனை யானவை. (5)	இறுதி இருப்பு. (6)
1. கருங்கண்ணி பருத்தி—					
1	தாராபுரம்	50	..	..	50
2	உடுமலைப்பேட்டை	..	..	..	..
3	திருப்பூர்	..	..	..	..
	மொத்தம் ..	50	..	..	50
2. கருங்கண்ணி பஞ்சு—					
1	திருப்பூர்	..	..	..	..
2	உடுமலைப்பேட்டை	5	..	..	5
3. கம்போடியா பருத்தி—					
1	திருப்பூர்	9,060	..	..	9,060
2	தாராபுரம்	..	..	..	..
3	பொள்ளாச்சி	..	..	..	..
4	பெருந்துறை	..	..	..	..
5	சென்னிமலை	4,100	..	..	4,100
6	கோயமுத்தூர்	6,900	..	..	6,900
7	புஞ்சைபுளியம்பட்டி	1,840	..	..	1,840
8	அன்னூர்	3,000	..	..	3,000
9	உடுமலைப்பேட்டை	150	..	..	150
10	பல்லடம்	500	..	..	500
11	கோபிச்செட்டிபாளையம்	100	..	..	100
12	மொத்தம் ..	25,650	..	..	25,650

வரிசை எண். (1)	இடத்தின் பெயர். (2)	ஆரம்ப இருப்பு. (3)	விற்பனைக்கு வந்தவை. (4)	விற்பனை யானவை. (5)	இறுதி இருப்பு. (6)
4. கம்போடியா பஞ்சு.					
1	பொள்ளாச்சி	500	..	..	500
2	திருப்பூர்	15267	..	..	15267
3	உடுமலைப்பேட்டை	105	..	..	105
4	கோபி	50	..	..	50
5	ஈரோடு	1010	..	..	1010
6	சென்னிமலை	1490	..	..	1490
7	பெருந்துறை	..	..	..	..
8	கோயமுத்தூர்	5000	..	..	5000
9	புஞ்சைபுளியம்பட்டி	2150	..	..	2150
10	பல்லடம்	300	..	..	300
11	அன்னூர்	200	..	..	200
	மொத்தம் ..	26072	..	..	26072

ஆ இராமநாதபுரம் மார்கெட் கமிட்டி.

கருங்கண்ணி பருத்தி.					
1	விருதுநகர்	950	1000	1500	450
கருங்கண்ணி பஞ்சு.					
1	விருதுநகர்	1000	420	820	600
உகண்டா பருத்தி.					
1	இராஜபாளையம்	3250	3000	4000	2250
உகண்டா பஞ்சு.					
1	இராசபாளையம்	3400	1120	1520	3000

வர்த்தக நிலைமை

பருவங்கள் முடிந்து நீண்ட நாட்கள் ஆகிவிட்டமையால் வரவுகள் மிகவும் குறைந்து காணப்பட்டது. வரவுகள் குறைந்த காரணத்தால் வர்த்தகம் கடந்த மாதத்தைவிட கூடுதலாக காணப்பட்டது.

பருத்தி, பஞ்சு இரகங்களின் விலைகள் (விலை குவிண்டாலுக்கு ரூபாயில்) இராமநாதபுரம் மார்க்கெட் கமிட்டி.

விளைபொருள்.		முதல் ரகம்.	இரண்டாம் ரகம்.	மூன்றும் ரகம்.
பருத்தி :	கருங்கண்ணி	..	130—148	110—126
	உகண்டா	216—225	140—160	100—120
பஞ்சு :	கருங்கண்ணி	390—416	370—380	350—360
	உகண்டா	657	570—620	445—535
விதை :	கருங்கண்ணி	46—62 } பொது.		
	உகண்டா	50—66 }		

கோயமுத்தூர் மார்க்கெட் கமிட்டி.

அறிக்கை இல்லை.

விலைபோக்கு

பருத்தி மற்றும் பஞ்சு வரவுகள் மிகவும் குறைந்து, இருப்புகளும் போதுமானதாக இல்லாத காரணத்தால் பஞ்சு பருத்தி தரங்கள் குறைவாகக் காணப்பட்டபோதும் விலைகள் உயர்ந்து நிலவியது.

தமிழ்நாட்டிலுள்ள ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களுக்கு வந்த நிலக்கடலை விவரங்கள் (குவிண்டாலில்). முழு கடலை.

வரிசை எண். (1)	விற்பனைக்கூடத்தின் பெயர். (2)	ஆரம்ப இருப்பு. (3)	விற்பனைக்கு வந்தவை. (4)	விற்பனையானவை. (5)	இறுதி இருப்பு. (6)
1	வட ஆற்காடு	36·00	23600·00	21112·00	2524·00
2	கோவை	..	..	..	..
3	இராமநாதபுரம்	..	5000	4000	1000
4	தென்னாற்காடு	..	..	..	..
முழு பயிர்.					
1	வட ஆற்காடு	6291·00	17842·20	17982·20	6151·00
2	திருச்சி	6641·46	2711·13	2560·58	6792·01
3	கோவை	..	..	..	..
4	இராமநாதபுரம்	1060·00	3000·00	3000·00	1000·00
5	தென்னாற்காடு	32302·00	48237·00	54056·00	26483·00

வர்த்தகப் போக்கு

மணிலா வரத்து முதல் வாரத்திலும், இரண்டாம் வாரத்திலும் அதிக அளவு காணப்பட்டது. இந்த இரண்டு வாரங்களிலும் விலைகள் ஸ்திரமாக காணப்பட்டது. மாத இறுதியில் வரத்துகள் பயலின் காரணமாக குறைந்து காணப்பட்டது. மணிலா பயிர் சுருக்கமடைந்து நன்கு தேர்ச்சியடையாததுமாக உள்ளது. இதனால் எண்ணெய் உற்பத்தியாளர்கள் வாங்கி எண்ணெய் உற்பத்தி செய்ய இயலாத நிலையில் உள்ளார்கள். தற்போது வெளி மாகாணங்களுக்கு ஏற்றுமதி செய்பவர்கள் மணிலா பயிருக்கு உச்சவிலை கொடுத்து வாங்கி வருகிறார்கள்.

தமிழ்நாட்டில் விற்பனைக் கூடங்களில் நிலக்கடலை, பருப்பு, எண்ணெய், பிண்ணாக்கு இவைகளின் விலை (குவிண்டாலுக்கு ரூபாயில்).

விலைபொருள்கள். (1)	இராமநாதபுரம். (2)	தென் ஆற்காடு. (3)	கோவை. (4)	திருச்சி. (5)	வட ஆற்காடு. (6)	தஞ்சாவூர் (7)
நிலக்கடலை	112 முதல் 125/-	..	..	..	88 முதல் 100	..
„ பயிர்	137 முதல் 168/-	145 முதல் 162/-	125/-	172 மு. 220	166 மு. 181	184 மு. 219/-
„ எண்ணெய்	312 முதல் 325	..	..	..	..	..
„ பிண்ணாக்கு	59 முதல் 61/-	..	..	..	..	..

வியாபாரப் போக்கு

சென்ற மாதத்தைவிட இந்த மாதத்தில் நிலக்கடலை, பயிர். எண்ணெய், பிண்ணாக்கு இவைகளின் விலைகள் குறைந்துவிட்டது.

தமிழ்நாட்டில் எள் செப்டம்பர் மாதத்திய கொள்முதல் விற்பனை விவரம் (எடையளவு குவிண்டாலில்).

வரிசை எண். (1)	விற்பனைக்கூடத்தின் பெயர். (2)	ஆரம்ப இறுப்பு. (3)	விற்பனைக்கு வந்தவை. (4)	விற்பனையானவை. (5)	இறுதி இருப்பு. (6)
1	தென்னாற்காடு	4470	4686	4791	4365
2	திருச்சி	1845·64	2611·46	2051·53	3405·57

கோவை மாவட்டத்தில் முக்கியமான விற்பனைக்கூடங்களுக்கு விற்பனைக்கு வந்த புகையிலையின் அளவு (குவிண்டாலில்).

வரிசை எண்.	விற்பனைக்கூடத்தின் பெயர்.	ஆரம்ப இருப்பு.	விற்பனைக்கு வந்தவை.	விற்பனை யானவை.	இறுதி இருப்பு.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1	பொள்ளாச்சி	550	..	..	550
2	கோப்பன்பூரை	1825	..	..	1825
3	கோபி	900	..	..	900
4	திருப்பூர்	12100	..	..	12100
5	புஞ்சைபுளியம்பட்டி	12130	..	..	12130
6	ஒலகடம்	40000	..	..	40000
7	சித்தோடு	1930	..	..	1930
8	ஈரோடு	2445	..	..	2445
9	மேட்டுப்பாளையம்	131000	..	..	13000
10	பல்லடம்	8300	..	..	8300
11	கோயமுத்தூர்	350	..	..	350
12	தாராபுரம்	1200	..	..	1200
13	கொடுமுடி	525	..	..	525
14	பெருந்துறை	185	..	..	185
15	உடுமலைப்பேட்டை	130	..	..	130
	மொத்தம் ..	95570		..	95570

புகையிலை வகைகளின் விலை விவரங்கள்.

அறிக்கை இல்லை.

வியாபாரப் போக்கு

இந்த ஆண்டு தேவைக்கு குறைவாகவே விளைச்சல் இருக்குமென்று எதிர்பார்க்கப்படுவதால், நல்லவிலை கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. விலைகளில் குறிப்பிடத்தக்க மாறுதல் இல்லை.

45ம் பக்கத் தொடர்ச்சி.

விளைவிக்காவண்ணம், தண்ணீரில் கரையமுடியாத பொருள்களாக மாற்றப்படுகின்றன.

7. பூமிக்கு வருடக் கணக்கில் போதிய அளவு சுண்ணும்பு இடுவது மண்ணில் பௌதிகத்தன்மையை சீர்திருத்தி நீரின் நுழைவையும், நீர் ஊறும் சக்தியையும் அதிகப்படுத்துகிறது.

B—அமிலதன்மையுள்ள பூமியில் மூன்றுமுதல் ஐந்து வருடங்களுக்கு வருடாவருடம் குறைந்த அளவில் சுண்ணும்பு போடுவது சாலவும் சிறந்தமுறையாகும். எல்லாக் காலத்திலும் சுண்ணும்பினை பூமிக்கு இடலாம். ஆனால் அதிக அளவு சுண்ணும்பு சத்தை கிரகித்துக்கொள்ளும் துவரை, மொச்சை முதலான பயிர்வகைகள் (legumes) சாகுபடிசெய்தால், அவைகளை விதைப்பதற்கு 6 முதல் 12 மாதத்திற்கு முன்னதாகவே சுண்ணும்பு இடவேண்டும். மூன்று அல்லது நான்கு வருடங்களுக்கு ஒருமுறை செடிக்குத் தேவையான சுண்ணும்பு சத்தும் பூமியில் இருக்கின்றதா என்பதை மண் பரிசோதனையின் மூலம் தீர்மானிக்கவேண்டும்.

மாங்கனீஸ், துத்தநாகம், போரன், இரும்பு ஆகியவைகள் நீரில கரைக்கமுடியாத செடிகளுக்கு கிடைக்கக்கூடாத பௌதிகச் சேர்க்கைகளாக மாறிவிடுகின்றன. அதிகப்படியாக சுண்ணும்பு போடுவதால் செடிகளுக்குக் கிடைக்கக்கூடிய பாஸ்பரஸ் சத்து குறைந்துவிடும்.

சுண்ணும்பு சரிவர மண்ணில் கலக்கப்படாவிட்டால் மண்ணின் அமிலத் தன்மை முழுமையும் அகலாது. ஏனெனில் சுண்ணும்பு, மண்ணிலுள்ள அமிலச் சேர்க்கையுடன் படும் பொழுதுதான் அதன் அமிலத் தன்மை அகற்றப்படும்.

P. தொட்டப்பன்,
பேனலூர் P. O.,
மதுரை ஜில்லா,

தமிழ்நாட்டில் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் விவசாயத் திட்டங்கள்

அ. ஆ. 204/66—26—8—66

தமிழ்நாட்டில் நான்காவது ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் பஞ்சாயத்து யூனியன்களில் செயல்படுத்த வேண்டிய விவசாயத் திட்டங்கள் பற்றி அரசினர் ஆணை பிறப்பித்துள்ளனர். கிராம நல நிர்வாகத்துறையின் 26-8-66ந் தேதிய ஆணை எண் 2064. நடைமுறை கோட்பாடுகள், விளக்கங்கள் பற்றிய அடிப்படை அறிவுரைகள் கொண்ட இந்த ஆணை பஞ்சாயத்து யூனியன்கள், மாவட்ட அலுவலகங்களில் பணிபுரியும் யாவர்க்கும் மிகவும் பயனுடையது. அவர்களின் உதவிக்காக முக்கியமாக வேண்டிய பகுதிகள் மட்டும் அப்படியே இங்கு பிரசுரிக்கப்படுகின்றன.

இந்த ஆணையின் தமிழாக்கம் 1966 அக்டோபர் மாத 'கிராமநலம்' பத்திரிகையில் முழுமையாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது

கார்த்திகை மாதத்தின் தொடர்ச்சி

4. உள்ளூர் எரு ஆதாரங்கள்—தனிப்பட்ட விவசாயிகளுக்கு பசுந்தாள் உர விதைகள் விநியோகித்தல்.—மண்வளத்தை மேம்படுத்த, பசுந்தாள் உர உற்பத்தி செய்ய. விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில், பசுந்தாள் உர விதைகளை 15 சதவிகித குறைந்த விலையில் அவர்களுக்கு விற்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின் வெற்றி பசுந்தாள் உர விதைகள் தேவைப்படுகிற அளவுக்கு அவர்களுக்கு கிடைப்பதைப் பொறுத்துதான் உள்ளது. ஆகவே, தங்களுடைய தேவைகளை பசுந்தழை விதைப்பண்ணைகளை அமைப்பதன்மூலம் பஞ்சாயத்து யூனியன்கள் சமாளிக்கவேண்டும் என்று யோசனை கூறப்படுகிறது. பல்வேறு வட்டாரங்களில், நடைபெறும் விதை உற்பத்தித் திட்டங்களையெல்லாம் மாவட்ட விவசாய அதிகாரிகள் ஒன்றிணைத்து, பசுந்தாள் உர விதை உற்பத்தியில் தன்னிறைவு காண்பதற்கான முறையில் திட்டம் போட்டு செயலாற்றவேண்டும். இந்தத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி வரையறையை "கிராம சகாயத் திட்டத்திற்குப் போலவே மாற்றிக்கொள்ளலாம்.

5. விவசாயிகளுக்கு விவசாயக் கருவிகள் வழங்கல்.—பயிர்ப்பாதுகாப்புக் கருவிகளை பிரபலப்படுத்தவும், 'மோல்டு போர்டு' கலப்பைகளையும் சேர்த்து, இதுபோன்ற மனித சக்தியை விரயமாக்காமல் தடுக்கும் விவசாயக் கருவிகளை பிரபலப்படுத்தவும், அவைகளை பாதி விலையில் விநியோகம் செய்தலே இத்திட்டத்தின் நோக்கம். அந்தந்தப் பிரதேசங்களுக்கு எந்தமாதிரி கருவிகள் ஏற்றவையோ, அவைதான் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படவேண்டும். இதற்காக செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கீட்டில், பெருவாரியான தொகையை, பயிர்ப் பாதுகாப்புக் கருவிகள் விநியோகம் செய்தலுக்கு உபயோகப்படுத்திக்கொள்ளவேண்டும் என்று யோசனை கூறப்படுகிறது. ஆனால், இப்படிக் கருவிகளை விநியோகம் செய்யும்பொழுது, அவை ஒரு சிலருக்கு மட்டும் கிடைக்கும்படி இல்லாமல் விநியோகம் சீரான முறையிலும், சரிசமமான முறையிலும் இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். இந்தத் திட்டத்தின்கீழ் விநியோகம் செய்யக்கூடிய கருவிகள் என்னென்ன என்பதை விளக்க பட்டியல் ஒன்று தனியாக அனுப்பப்படும்.

6. காய்கறி நாற்றுகள், பழச்செடி நாற்றுகள் கொண்ட நாற்றங்கால்கள் ஏற்படுத்துதல்.—காய்கறி நாற்றுகளுக்கும், பழச்செடி நாற்றுகளுக்கும், பலன் தரும் மரவகைகளின் கன்றுகளுக்கும் ஏகப்பட்ட கிராக்கி உள்ளது. பப்பாளி, மாதுளை, எலுமிச்சை, கொய்யா, முந்திரி, புளி, வேம்பு, கத்திரிக்காய், உருளைக்கிழங்கு போன்றவைகளை கொஞ்சம் செலவிலேயே கிராமத்திலே உற்பத்தி செய்யமுடியும். ஆகவே, மூன்றிலிருந்து ஐந்து செண்டுகள் வரை நாற்றங்கால்கள் ஏற்படுத்தி, விவசாயிகளுக்கு அவைகளை இனமாக விநியோகம் செய்வதற்காக, ஒவ்வொரு கிராம சேவக்குக்கும், இத்திட்டத்தின் கீழ் ஒவ்வோர் ஆண்டும் ரூ. 50 அளிக்கப்படும். இந்த நாற்றங்கால்களை பஞ்சாயத்துத் தோட்டங்களிலோ அல்லது தனிப்பட்டவரின் நிலங்களிலோ ஏற்படுத்தலாம். விதை, எரு, பூச்சி மருந்துகள் ஆகிய இவற்றிற்கான செலவுகளுக்காகத்தான் இந்த 50 ரூபாய் அளிக்கப்படுகிறது. கிராம சேவக் தனிப்பட்ட அக்கறை எடுத்து இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். முதல்படியாக, இந்த வேலையைச் செய்வதற்குப் போதிய வசதிகள் உள்ள இடங்களில், இரண்டு அல்லது மூன்று கிராம சேவக் குழுக்களிடம் இந்த வேலையை ஒப்படைத்து, அக்குழுக்களை இவ்வேலையைச் செய்ய சொல்லலாம்.

7. விவசாய வளர்ச்சிப் பணிகள்—செயல்முறை விளக்கப் பண்ணைகள்.—செயல்முறை மூலம் விளக்கிப் பலன் காட்டுதல் தான் விவசாய வளர்ச்சிப் பணிகளில் மிகவும் முக்கியமானதாகும். இத்துறையில் கிராம சேவக்கின் பங்கு மிகவும் முக்கியமானது. இத்திட்டத்தின்கீழ். ஒவ்வொரு கிராம சேவக்கும் ஒவ்வொரு ஆண்டும் குறைந்தபட்சமாக, நெல், சோளம், திணை வகைகள், வேர்சகடலைப் பயிர்களில் ஆறு செயல்முறை விளக்கங்களைச் செய்து காட்டவேண்டும். மற்றப் பயிர்களைப் பற்றிய செயல்முறை விளக்கங்கள் மற்ற வளர்ச்சித் திட்டங்களின் கீழ் எடுத்துக்கொள்ளப்படும். விவசாயத்துறை சிபாரிசு செய்துள்ள தீவிர விவசாயத் திட்ட முறைகளைக் கொண்டே இச் செயல்முறை விளக்கங்கள் செய்யப்பட வேண்டும். ஒவ்வொரு செயல்முறை விளக்கப் பண்ணைகளும் ஓர் ஏக்கருக்கு குறைந்திருக்கக்கூடாது. வேண்டிய விவசாய சாதனங்கள் வாங்க, ஒவ்வொரு விவசாயிக்கும் கீழ்க்கண்ட முறையில் நிதி உதவி அளிக்கலாம்:—

		ரூ.
1.	நெல்	50
2.	பாசனம் செய்யப்பட்ட சோளப் பயிர்கள்.	30
3.	வேர்க்கடலை—	
	மழையினால் பயிர் செய்யப்பட்டது	50
	நீர்ப்பாசனம் செய்து பயிரிடப் பட்டது.	80

இந்த செயல்முறைகளுக்கு, சரியான கணக்குகளை கிராம சேவக்குகள் வைத்துக்கொள்ளவேண்டும்.

8. விலங்கின மருந்தகங்கள் கட்டுதல்.—மூன்ருவது திட்டக்கால முடிவில் விலங்கின மருந்தகங்கள் இல்லாத பஞ்சாயத்து யூனியன்களில், அல்லது பஞ்சாயதது யூனியன் மருந்தகங்கள் முனிசிபல் பிரதேசத்திலிருந்து, பஞ்சாயத்து யூனியனின் கிராமிய எல்லைப் பிரதேசத்துக்குள் அப்படிப்பட்ட ஒரு மருந்தகம் இருக்கவேண்டியது அவசியம் என்று கருதுகிற பஞ்சாயத்து யூனியன்களில், புதிதாக விலங்கின மருந்தகங்கள் கட்டுவதற்கு இந்த நிதியானது ஒதுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் பிரதேசத்திலும் குறைந்தபட்சமாக ஒரு விலங்கின மருந்தகம் இருக்கவேண்டுமென்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

விலங்கின மருந்தகம் கட்டுகின்ற மொத்தச் செலவு ரூ. 40 ஆயிரத்துக்கு மேல் போகக்கூடாது. அதற்கென்று ஒத்துக்கொள்ளப்பட்ட மாதிரி அமைப்பில்தான் கட்டிடம் கட்டப்பட வேண்டும். இதற்கான அரசாங்க மானியம் ரூ. 30 ஆயிரம். கட்டிடம் கட்டுகின்ற இடத்திற்கு மாவட்ட கலெக்டரின் அங்கீகாரம் பெருமல், மருந்தகம் கட்டுவதற்கு அனுமதி வழங்கக்கூடாது.

விரிவுபடுத்துதல்—முதல் கட்டம்.—பஞ்சாயத்து யூனியன் பிரதேசத்திற்குள் பழைய மாதிரியில் கட்டப்பட்டு இயங்கி வருகிற விலங்கின மருந்தகங்களுக்கு கூடுதலான வசதிகள் செய்து தருவதற்காக, இந்த நிதி வசதி செய்யப்பட்டுள்ளது. Trevis-ம், ஆபரேஷன் செய்யும் கூடமும் இந்த கூடுதல் வசதிகளாகும்.

இந்த நிதி வசதியைப் பயன்படுத்திக் கொள்வதற்கு, மாவட்டக் கலெக்டரின் திட்டவட்டமான அனுமதியைப் பெற்ருக வேண்டும்.

விஸ்தரித்தல்—இரண்டாவது கட்டம்.—இந்த நிதி வசதியிலிருந்து, மூன்ருண்டுகளுக்கு மேலாக எங்கு விலங்கின மருந்தகங்கள் இயங்கி வருகின்றனவோ, அந்த இடங்களில் சிப்பந்திகளுககு குடியிருப்புகள் கட்டிக்கொடுக்கலாம். பஞ்சாயத்து யூனியனில் ஒரு விலங்கின மருந்தகமாவது கட்டி, அதற்கு வேண்டிய வசதிகளை எல்லாம் செய்து முடிந்த பிறகுதான், சிப்பந்திகளுக்கு குடியிருப்புகள் கட்டிக்கொடுக்கும் வேலையை எடுத்துக் கொள்ள வேண்டும்.

பி. விருப்பத் திட்டங்கள்

1. பஞ்சாயத்துகளுக்கு கருவிகள் வழங்குதல்.—கடந்த திட்டக் காலத்தில் வாங்கிய கருவிகள் நல்ல நிலைமையிலே இருக்குமாகையால், கூடுதலாக வேண்டியுள்ள கருவிகளுக்காகவும், கெட்டுப்போய் உபயோகிக்க முடியாத நிலையில் உள்ளவற்றிற்கு மாற்றுக் கருவிகள் வாங்கவும், சிறு நிதி வசதியே இப்பொழுது செய்யப்பட்டுள்ளது.

ஒவ்வொரு கிராமப் பஞ்சாயத்தும் நல்ல நிலையில் உள்ள ஒன்று அல்லது இரண்டு தெளிப்பான்களை வைத்திருக்க வேண்டும். அத்துடன், பண்ட்பார்மர் (Bund former), பர்மீஸ் செட்டூன், பட்லர் ரிட்ஜ் கலப்பை, ஜூனியர் ஹோ, விதைகளைக் கொட்டை நீக்கி போன்றவற்றை, சாதாரணமாக ஒரு விவசாயி தனக்காக வாங்கி வைத்துக்கொள்ள முடியாதாகையால், இந்த நிதியிலிருந்து, அவைகளை வாங்கி விவசாயிகளுக்கு வாடகை அடிப்படையில் கொடுக்கலாம். உள்ளூர் நிலங்களுக்குப் பொருத்தமாக இருக்கக் கூடியதும், கிராக்கி இருக்கக்கூடியதுமான கருவிகளையும், ' உபகரணங்களையும் மட்டுமே வாங்க வேண்டும். கருவிகள் பட்டியலும், அவற்றை விற்பனை செய்வோர் பட்டியலும் தனியாக அனுப்பப்படும்.

2. பஞ்சாயத்துக்களில் உள்ள கருவிகளைப் பழுது பார்த்தலும், பராமரித்தலும்.— பஞ்சாயத்துக்களுக்கு வழங்கபபட்ட எல்லாக் கருவிகளும் உபகரணங்களும் நல்ல நிலைமையில் வைத்துக்கொள்ளப்பட வேண்டும். இந்தக் கருவிகளை பழுது பார்க்க அண்மையில் உள்ள கிராம வளர்ச்சிப் பயிற்சி நிலையம், மற்ற பஞ்சாயத்து யூனியன்கள், தொழில் துறையைச் சேர்ந்த தொழில் பட்டறைகள், தொழில பயிற்சி நிலயங்கள் ஆகியவற்றின் முழு சேவையையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இவ்வகையில் குறிப்பிட்ட வரையறைக்கு மேல் ஏற்படுகின்ற எந்த செலவும், கிராமப் பஞ்சாயத்து நிதிகளிலிருந்தே சமாளிக்கப்பட வேண்டும்.

3. பழச்செடிகள், காய்கறி விதைகளை தனிப்பட்டோருக்கு விநியோகம் செய்தல்.—தென்னங்கன்றுகள் உள்பட பழச்செடிகளை, அடக்க விலையில் 75 சதவிகித விலையிலும், காய்கறி விதைகளை 50 சதவிகித விலையிலும், இதற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி வசதியைப் பயன்படுததிக்கொண்டு, விநியோகம் செய்யவேண்டும். தனிப்பட்ட நபர் ஒருவருக்கு அதிகபட்சமாக அளிக்கப்படவேண்டிய நிதி உதவி ரூ. 15. பெருவாரியான நபர்கள் இத்திட்டத்திருல் பயன் அடையவேண்டும் என்ற கருத்தில் தான், இந்த வரம்பு நிர்ணக்கப்பட்டுள்ளது. வேண்டிய பழச்செடிகளுக்கு ஆன தேவையை முன்கூட்டியே குறித்த காலத்தில் அனுப்பவேண்டும். பழச் செடிகளை எந்தெந்தக் காலங்களில் விநியோகம் செய்யவேண்டுமோ அந்தந்தக் காலங்களில் தவருது விநியோகம் செய்ய வேண்டும். இந்தத் தேவைகளை விவசாயத் துறையினிடமிருந்து தான் பெறவேண்டும். அவை, விவசாயத் துறையினிடமிருந்து கிடைக்கவில்லையென்ருல், அதற்கான சான்றிதழை அவர்களிடமிருந்து பெற்றுக்கொண்டு, விவசாயத் துறை அங்கீகாரம் அளித்துள்ள தனிப்பட்ட பண்ணைகளிடமிருந்து அவற்றைப் பெறலாம். பழமரங்கள் வைக்க எந்த ஆண்டிலும், ஜனவரி முதல் மார்ச் மாதம் வரை உள்ள கால அளவு பொருத்தமானதல்ல. ஆகவே, அந்தக் காலத்தில், பழச் செடிகள் (தென்னங்கன்றுகள் உட்பட) சம்பந்தப்பட்ட மட்டில் இத்திட்டத்தின்கீழ் எந்த விதமான நடவடிக்கைகளும் எடுக்கக்கூடாது.

4. விசையினுல் இயங்குவதும், கனரக கருவிகளும் தவிர பஞ்சாயத்து யூனியன்களுக்கு மற்ற கருவிகள் வழங்குதல்.—மூன்ருவது திட்டக் காலத்தில் வாங்கப்பட்ட கருவிகள் பொதுவாக மேலும் உபயோகப்படுத்த லாயக்கான நிலையிலேயே உள்ளன. இப்பொழுது செய்யப்பட்டுள்ள நிதி வசதி, கூடுதலாக கருவிகள வாங்கவும், தேய்ந்துபோன கருவிகளை மாற்றியமைக்கவுமே. கிராம சேவக்குகளுக்கு விவசாயக் கருவிகள் வழங்குவதற்கு தற்போதுள்ள திட்டத்தின்கீழ், தனியாக நிதி வசதி ஒன்றும் செய்யப்படவில்லை. ஆகவே எங்கெங்கு கிராம சேவக்குகளுக்கு அவசியமாக தேவையான கருவிகள் வழங்கப்படாமல் இருக்கிறதோ, அங்கு இத்திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்டுள்ள நிதியிலிருந்து அக்கருவிகளை வாங்கி அவர்களுக்கு வழங்கலாம். வட்டாரத் தலைமை இடங்களில் பயன்தரத்தக்க முறையில் வைத்திருக்கக்கூடிய கருவிகளின் விவரங்கள் அடங்கிய பட்டியல் தனியாக அனுப்பப்படும். இக்கருவிகளை மாவட்ட விவசாய அதிகாரியுடன் கலந்து ஆலோசனை செய்து வாங்க வேண்டும்.

5. பஞ்சாயத்து யூனியன்களுக்கு விவசாயக் கருவிகள் விசையினுல் இயங்குபவை போன்றவை.—இந்த நிதியிலிருந்து மொத்தம் இரண்டாயிரம் ரூபாய்க்குள் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனும், நேப்சாக் (Knapsack) டைப் விசையினுல் இயங்கும் தெளிப்பான்களை வாங்கிக் கொள்ளலாம். டிராலி மீது பொருத்தபபட்ட விசையினுல் இயங்கும் தெளிப்பான் வாங்க வேண்டும் என்று பஞ்சாயத்து யூனியன் விரும்பினுல், அதற்கு மாவட்ட விவசாய அதிகாரியின் அங்கீகாரம் பெற்றுதான் வாங்கவேண்டும். அதற்காக ஆகும் கூடுதல் தொகையை, பஞ்சாயத்து யூனியன் பொது நிதியிலிருந்து அளிக்கவேண்டும்.

மிச்சமுள்ள 12 ஆயிரம் ரூபாயில், கையினால் இயங்கும் போரிங் கருவி ஒன்றையோ, அல்லது காலிக்ஸ் (Calyx) விசை டிரில் கருவி ஒன்றையோ, அந்தபிரதேசத்தில் உள்ள நிலத்திற்கு தகுந்த முறையில் உள்ளதாக, உதவி விவசாய இஞ்சினியருடன் கலந்து ஆலோசித்து வாங்க வேண்டும். இப்படிப்பட்ட விலை உயர்ந்த கருவிகள் வாங்குவதற்கு முன்னால், உதவி விவசாய இஞ்சினியரின் திட்டவட்டமான ஒப்புதலைப் பெறவேண்டும்.

வாங்கின கருவிகளை நல்ல முறையில் பயன்படுத்தவும், சீரிய முறையில் பராமரிக்கவும் வேண்டிய விசேஷ ஏற்பாடுகளை பஞ்சாயத்து யூனியன்கள் மேற்கொள்ள வேண்டும். பராமரிப்புக்கான செலவுகள் பஞ்சாயத்து யூனியன் நிதிகளிலிருந்து செய்யப்படவேண்டும்.

6. கருவிகளைப் பாதுகாக்க பொதுவான இடம் (Community Implement Shed).—ஒன்று அல்லது இரண்டு கிராமங்களில், கருவிகளைப் பாதுகாக்க பொதுவான இடங்கள் கட்டிப் பராமரிக்கலாம் என்று சில யூனியன்கள் யோசனை தெரிவித்துள்ளன. இத்திட்டத்தின்கீழ் செய்யப் பட்டுள்ள நிதி வசதிகளின்கீழ், இரண்டு பெரிய கிராமப் பஞ்சாயத்துக்களில் கருவிகளைப் பாதுகாக்க பொதுவான இரண்டு இடங்கள் கட்டலாம். விதைகளையும் கொட்டை நீக்கி சலிக்கும் சல்லடை இயந்திரங்கள் போன்று எல்லா விவசாயிகளுக்கும் பயன் தரும் கருவிகளை இந்த இடங்களில் வைத்திருக்கலாம். இந்த இடங்களில் என்னென்ன கருவிகள் வைக்கலாம் இதற்கான கட்டிட அமைப்பு எப்படி இருக்கவேண்டும் என்பது பற்றிய விவரங்கள் எல்லாம் தனியாக அனுப்பப் படும்.

7. பஞ்சாயத்து யூனியன்கள் நாற்றங்கால் தோட்டங்கள் அமைத்தல்.—பஞ்சாயத்து யூனியன் அலுவலகம் உள்ள இடத்தில் அல்லது பஞ்சாயத்து யூனியன் அதிகார வரம்புக்குள் உள்ள இணைப்பாக உள்ள நிலத் துண்டுகளில் பயிரிட லாயக்காக உள்ள நிலத்தை பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பது இத்திட்டத்தின் நோக்கம். பயிர் செய்யக்கூடிய நிலப் பரப்பு 2½ ஏக்கர் அளவில் இருந்தால், ஒரு கிணறு தோண்டிக்கொள்ளவும், ஒரு பம்பு செட் பொருத்திககொள்ளவும் செய்யலாம். ஆனால் பயிரிடும் செலவு பஞ்சாயத்து யூனியன் பொது நிதிகளிலிருந்துதான் செய்யப்படவேண்டும்.

8. விஸ்தரிப்பு உதவிகள்—கண்காட்சிகள், போட்டிகள் நடத்துதல் போன்றவை.—இத்திட்டத்தின்கீழ், பஞ்சாயத்து யூனியன்கள, விவசாயம் விலங்கின வளர்ச்சி சம்பந்தமான ஓரிரு கண்காட்சிகளை நடத்தலாம். விவசாயத்தில் கையாளப்படும் புதிய முறைகளில் விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்கவும், உற்பத்தியைப் பெருக்குவதில், ஒரு போட்டி மனப்பான்மையை விவசாயிகளிடையே தோற்றுவிக்கவும் வேண்டி (பயிர் விளைச்சல் போட்டி அல்லாமல்) மற்றபடி விவசாயம், விலங்கின வளர்ச்சி சம்பந்தமான போட்டிகளை ஒவ்வோர் ஆண்டும் பஞ்சாயத்து யூனியன்கள் நடத்தலாம். இதற்கென்று ஒதுக்கப்பட்ட நிதியில், அந்தந்தப் பிரதேசத்திற்கு தகுந்த பயிர்ப் பாதுகாப்பு முறைகளை விளக்கும் சிறு வெளியிடுகள் அச்சடித்து, அவற்றை விவசாயிகளுக்கு இனமாக விநியோகம் செய்வதற்காக ரூ. 500 ஒதுக்கப்படலாம்.

ஆனால் இந்த வெளியீடுகளில் கண்டுள்ள விஷயங்கள் சம்பந்தமாக அந்த வெளியீடுகளை அச்சடித்து வெளியிடுவதற்கு முன்னால், அவை சரியாக இருக்கின்றனவா என்பதற்காக மாவட்ட விவசாய அதிகாரியின் அனுமதியைப் பெறவேண்டும்.

9. தனிப்பட்டோருக்கு பொலி இனக்காளைகள் விநியோகம் செய்தல்.—மூன்றாவது திட்டக் காலத்தில் என்ன நடைமுறை கையாளப்பட்டதோ, அதே நடைமுறையில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். பொலி இனக்காளைகளின் விலையில் 50 சதவிகிதத்துக்கு மேற்படாமல் நிதி உதவி அளிபபதற்காகத்தான் இத்திட்டத்திற்கு நிதி ஒதுக்கப் பட்டுள்ளது. கேந்திர கிராம பகுதிகளில் அல்லாத வட்டாரங்களில் அல்லது வட்டாரத்தின் பகுதிகளில் மட்டும் தான் இத்திட்டம் செயல்படுத்தப்படவேண்டும். இத் திட்டத்தின் கீழ் வெள்ளை, மற்றும் கறுப்பு நிற கால்நடைகளும் வழங்கப்பெறலாம். ஒரு கிராமப் பஞ்சாயத்துக்கு சாதாரணமாக ஒரு காளைக்கு மேல் வழங்கக்கூடாது. குறைந்த பட்சம் யூனியனில் உள்ள கிராமப் பஞ்சாயத்துக் களில் மூன்றில் ஒரு பங்காவது இத்திட்டத்தின்கீழ் வரும் படியான முறையில், பஞ்சாயத்து யூனியன் தனனுடைய திட்டத்தை தயாரிக்க வேண்டும். காளைகள் விநியோகம் செய்வதற்காக, கிராமப் பஞ்சாயத்துக்களைத் தேர்ந்தெடுக் கும்பொழுது, இது வரையில் காளைகளை விநியோகம் செய்யப்படாத பஞ்சாயத்துக்கு முதல் சலுகை காட்டப்பட வேண்டும்.

10. தீவன அபிவிருத்தித் திட்டம்.—பாசனம் பெற்று எப்பொழுதும் வளரக்கூடிய தீவனத்திற்குப்பயன்படக்கூடிய புல்வகைகள், செடிவகைகள்.—கால்நடைகளின் தீவனத் திற்காக, எப்போதும் வளரக்கூடிய புல், செடி வகைகளை உற்பத்திச் செய்தலே, இத்திட்டத்தின் நோக்கமாகும். துறையினரால் நடத்தப்படும் திட்டம் முன்பே அமலில் உள்ள கேந்திரக் கிராமப் பகுதிகள் அல்லாத வட்டாரங் களில் தான் இத்திட்டம் செயல் படுத்தப்பட வேண்டும். கினியாப்புல், பாரா நேப்பியர் போன்ற பாசனம் பெற்று எப்பொழுதும் வளரக்கூடிய புல் வகைகளையும், லூசர்ன் போன்ற செடி வகைகளையும் உற்பத்தி செய்வதற்காக ஒரு செண்டுக்கு இரண்டு ரூபாய் என்ற அளவில் நிதி உதவி அளிப்பதற்காக, இத்திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கப் பட்டுள்ளது. இந்த நிதி உதவியைப் பெறவேண்டுமென் றால், ஒருவர் குறைந்த பட்சம் 5 ஏக்கர்களில் தீவனப் புல் பயிர்களை உற்பத்தி செய்திருக்க வேண்டும். பயிர் விளைத்து, முதல் முறையாக அவை வெட்டப்படும்பொழுது தான், இந்த நிதி உதவியானது அளிக்கப்பட வேண்டும்.

11. கால்நடைகளுக்குக் கொட்டகை கட்டுதல்.—கால்நடைகள் தங்குமிடங்கள் நல்ல வசதி படைத்ததாக இருக்கவும் கால்நடைகளின் மூத்திரம், சாணம் ஆகியவை வீணாகப் போகாமல், அவை எருவாகப் பயன்படச் செய்வதுமே இத்திட்டத்தின் நோக்கம். கால்நடைக் கொட்டகை ஒன்று கட்ட, 150 ரூபாய்க்கு மேற்படாமல் 25 சதவிகித செலவை நிதி உதவியாக அளிப்பதற்குத்தான் இத் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஒரு நபருக்கு ஒரு கொட்டகைக்கு மேல் நிதி உதவி அளிக்கப்படக்கூடாது. கொட்டகை கட்டி முடித்த பிறகு தான, மானியத் தொகை அளிக்கப்பட வேண்டும். கிராமப் பஞ்சாயத்தும் இந்த நிதி உதவியைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இந்த நிதி உதவியைப் பெற வேண்டுமென்றால், இரண்டு அல்லது மூன்று கால்நடைகள் தங்குகின்ற அளவுக்கும் மூத்திரம் வீணாகாமல் சேகரிக்கின்ற வரையில் கடினமான தரை போட்டும், மழை, வெப்பம் தாக்காமல், உள்ளூர் ஆதாரங்களைக் கொண்டே போடப்பட்ட கூரையும் கொண்டதாக உள்ள ஒரு கால்நடை கொட்டகையை ஒருவர் கட்ட வேண்டும். கொட்டகைக்கருகில் கலவை எருக்குழி ஒன்றும் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

உள்ளூரில் கிடைக்கும் ஆதாரங்களைக் கொண்டே கட்டப் படக்கூடிய கொட்டகையின் மாதிரி அமைப்புகள், கொட்டகை கட்டுவோருக்கு பிரயோஜனமாக இருப்பதற்காக வேண்டி, தனியாக அனுப்பப்படும்.

12. செம்மறியாடுகள் விநியோகம் செய்தல்.—பஞ்சாயத்து யூனியன்கள் வழங்குகின்றவைகளுக்குப் பதிலாக தங்களுடைய செம்மறியாடுகளை பரிவர்த்தனை

செய்து கொள்ளுகிற பயன் பெறுபவர்களை, பஞ்சாயத்து தேர்ந்தெடுக்கும் விலங்கின வளர்ச்சித் துறையின் மூலமாக, மாவட்ட விலங்கின அதிகாரி ஒப்புதல் அளிக்கும் செம்மறியாடுகளை பஞ்சாயத்து யூனியன் வாங்கி, அவற்றை சகாய விலையில், ஒன்று 15 ரூபாய் என்ற விலையில் அவர்களுக்கு, பயன் பெறுவோர்க்குச் சொந்தமான செம்மறி ஆட்டை காயடித்த பிறகு விநியோகம் செய்யும்.

13. பரிவர்த்தனை முறையில் சேவல் குஞ்சுகளை விநியோகித்தல்.—உள்ளூர் பறவைகளின் தரத்தை உயர்த்துவதற்காக வேண்டி, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும், பொறுக்கி எடுக்கப்பட்ட இடங்களில் தீவிரமான முறையில் இத்திட்டத்தைச் செயலபடுத்த வேண்டும். இந்த பொறுக்கி எடுக்கப்பட்ட இடங்களில் விநியோகிக்கப்படுகின்ற சேவல் குஞ்சுகளில் குறைந்தபட்சம் மூன்றில் இரண்டு மடங்கினை வழங்கவேண்டும். இது தவிர, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனும் குறைந்தபட்சம் ஒரு கிராமத்தையாவது இதற்கென்று ஒதுக்கி, உள்ளூர் ரகங்களை தள்ளிவிட்டு, சீமைச் சேவல் குஞ்சு ரகத்தை புகுத்தி, அந்த கிராமத்தை ஒரு மாதிரி கோழிப் வளர்ப்பு கிராமமாக பெருககுவது விரும்பத்தக்கதாகும்.

14. தனிப்பட்ட முறையில் கோழி வளர்ப்போருக்கு பண உதவி அளித்தல்.—டீப் லிட்டர் கோழிப்பண்ணைப் பிரிவுகள் ஏற்படுத்துவதற்காக, தனிப்பட்ட நபர்களுக்கு 50 சதவிகித அளவில் நிதி உதவி அளிப்பதற்காக, இத்திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் பற்றிய விவரங்கள் தனியாக அனுப்பப்படும்.

15. கிராமப் பஞ்சாயத்துக்களில் கோழி வளர்ப்புப் பண்ணைகள் ஏற்படுத்துதல்—முந்தைய திட்டத்தைப் போலவே, இந்தத் திட்டத்தையும் அமல் நடத்த வேண்டும். ஒவ்வொரு பஞ்சாயத்தும் பெறக்கூடிய நிதி உதவியின் அளவை ஆயிரமாக நிர்ணயித்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும், இரண்டு கிராமப் பஞ்சாயத்துக்கள் இந்த வேலையை மேற்கொண்டு. மாதிரி கோழி வளர்ப்புப் பகுதிகளாக திகழ்கின்ற முறையில் செயல் புரிய அவைகளைத் தூண்ட வேண்டும்.

16. ஆண் பன்றிகள் விநியோகம்.—உள்ளூர் பன்றிகளின் தரத்தை உயர்த்துவதற்கு, இத் திட்டத்தின் கீழ் அரசாங்கப் பன்றி வளர்ப்பு நிலையங்களிலிருந்தோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனிப்பட்ட பன்றி வளர்ப்போரிடமிருந்தோ வாங்கப்பட்ட பன்றிகளை பன்றி வளர்ப்போருக்கு பன்றி ஒன்றுக்கு 10 ரூபாய் என்ற விலையில் விநியோகம் செய்ய வேண்டியுள்ளது. இதனால் வருகின்ற லாபத்தை, இதற்காக ஒதுக்கப்பட்டுள்ள அரசாங்க மானியத் தொகையிலிருந்து சரிக்கட்டிக்கொள்ள வேண்டும். ஒரு கிராமப் பஞ்சாயத்திற்கு ஓர் ஆண் பன்றிக்கு மேல் வழங்கக் கூடாது.

இணைப்பு—I-ல் குறிப்பிடாத திட்டங்கள்

1. குறைந்த விலையில் கிருமிநாசினிகளை விநியோகித்தல். மூன்றாவது திட்டத்தில், உணவுப் பயிர்களுக்கு அடக்க விலையில் 25 சதவிகித விலையிலும், வர்த்தகப் பயிர்களுக்கு 50 சதவிகித விலையிலும், கிருமிநாசினிகள் விநியோகிக்கப்பட்டன. இப்படிக் குறைந்த விலையில் கொடுப்பதில் உள்ள ஏற்றத்தாழ்வு பற்றி கோரிக்கைகள் எழுப்பப்பட்டன. கிருமிநாசினிகள் விநியோகிப்பதில் எல்லாப் பயிர்களுக்கும் ஓரே அளவான நிதி உதவியை நிர்ணயிக்கின்ற விஷயம் பரிசீலனையில் இருந்து வருகிறது. பூரா நிதி உதவியும் விவசாயத் துறையில் வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டிலிருந்து சமாளிக்கப்படும். இந்த விஷயம் பற்றி தனியாக உத்தரவுகள் விரைவில் பிறப்பிக்கப்படும்.

2. பயிர்ப் பாதுகாப்பு அணி.

ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு பயிர்ப் பாதுகாப்பு அணியை ஏற்படுத்தி, அவர்களுக்குப் பயிற்சியளித்து பராமரிக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என பஞ்சாயத்து யூனியன்களுக்கு யோசனை கூறப்படுகிறது. அப்படிச் செய்தால் பயிர்ப் பாதுகாப்பு இயக்கத்தை ஏற்று நடத்த இந்த அணியைப் பயன்படுத்திக்கொள்ளலாம். பயிர்களைத் தாக்கும் பூச்சிகள், நோய்கள் இவற்றைக் கண்டுபிடித்து, அவற்றைக் கட்டுப்படுத்தவும், பயிர்ப் பாதுகாப்புக் கருவிகளை உபயோகிக்கவும், பழுது பார்க்கவும், இந்த அணியினருக்கு பயிற்சி அளிக்கப்பட வேண்டும். இந்தத் திட்டத்தின்கீழ் எந்தவிதமான செலவும் ஏற்படக்கூடாது.

3. அடக்க விலையில் (தாதுநீர்) மினரல் (Mineral) மிக்சர் விநியோகம் செய்தல்.

விலங்கின மருந்தகங்கள் மூலம், மினரல் மிக்சர் அடக்க விலையில் விற்கப்படலாம். பொது நிதிகளிலிருந்து ரூ. 200—ஐ முன் பணமாக, மினரல் மிக்சர் வாங்குவதற்காக அளிக்கலாம் என்று பஞ்சாயத்து யூனியன்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது. விற்பனை ஆனபிறகு, இந்தத் தொகையை திரும்ப மறு ஒதுக்கம் செய்துகொள்ளலாம்.

இணைப்பு—III.

உற்பத்தித் திட்டங்கள் செயல்படும் அளவு விவசாயம்

1. விஸ்தரிக்கப்பட்ட சாகுபடித்திட்டம்

அ. பஞ்சாயத்துத் தோட்டங்களை ஏற்படுத்துதலும் பராமரித்தலும்.

ஆ. நாற்றங்கால்களை (Nurseries) பஞ்சாயத்து யூனியன்கள் ஏற்படுத்துதல்.

2. தீவிர சாகுபடித் திட்டம்

அ. விதைகளும் நாற்றுகளும்—

(1) கிராம சகாயக் பணி.

(2) காய்கறி நாற்றுகள், பழச்செடி நாற்றுகளைக் கொண்ட நாற்றங்கால்களை கிராம சேவக்குகள் ஏற்படுத்துதல்.

(3) நாற்றுகளையும், காய்கறி விதைகளையும் தனிப்பட்டோருக்கு விநியோகம் செய்தல்.

(4) யூனியன்கள் நாற்றங்கால்கள் ஏற்படுத்துதல்.

ஆ. எருவும் எரு இடுதலும்—.

(1) தனிப்பட்டவர்களுக்கு பசுந்தழை உர விதைகளை விநியோகித்தல்.

(2) கால்நடைக் கொட்டகை கட்டுதல், கால்நடைகளின் மூத்திரங்களையும் சாணங்களையும் பாதுகாத்தல்.

சி. உழுதல் : தரமான விவசாயக் கருவிகள்

(1) தனிப்பட்ட விவசாயிகளுக்கு விவசாயக் கருவிகள் வழங்குதல்.

(2) பஞ்சாயத்துகளுக்கு விவசாயக் கருவிகள் வழங்குதல்.

(3) பஞ்சாயத்துக்கள் வசம் உள்ள விவசாயக் கருவிகளை பழுது பார்த்தலும், பராமரித்தலும்.

(4) பஞ்சாயத்து யூனியன்களுக்கு கருவிகள் (விசையினால் இயங்குபவை, கனரகக் கருவிகள் தவிர)

(5) கருவிகளைப் பாதுகாக்க பொதுவான இடம்.

டி. நீர்ப்பாசனம்.—

(1) பஞ்சாயத்து யூனியன்களுக்கு கருவிகள்—விசையினால் இயங்குபவை.

(2) காலிக்ஸ் விசை டிரில், கையால் இயங்கக் கூடிய போரிங் செட்டும் வாங்குதல்.

இ. பயிர்ப் பாதுகாப்பு.—

(1) தனிப்பட்ட விவசாயிகளுக்கு கருவிகள் வழங்குதல்

(2) பஞ்சாயத்துகளுக்கு கருவிகள் வழங்குதல்.

(3) பஞ்சாயத்து யூனியன்களுக்கு கருவிகள் (விசையால் இயங்குபவை தவிர)

(4) பஞ்சாயத்து யூனியன்களுக்கு கருவிகள் விசையால் இயங்குபவை, விசை தெளிப்பான்கள் வாங்குதல்.

(5) பயிர்ப்பாதுகாப்பு அணி.

எஃப். வழங்கும் இடம்

விவசாய டெப்போ கிடங்கு கட்டுதல்.

விலங்கின வளர்ச்சி

அ. விலங்கின மருத்துவம்—

விலங்கின மருந்தகம் கட்டுதல்.

(அ) புதிதாக கட்டுதல்.

(ஆ) விரிவுபடுத்துதல் 1. முதல் கட்டம்.
2. இரண்டாம் கட்டம்.

ஆ. கால்நடை வளர்ச்சி.—

(1) தனிப்பட்டோருக்கு பொலி இனக் காளைகள் விநியோகம் செய்தல்.

(2) தீவன அபிவிருத்தித் திட்டம்.

(3) மிரைல் மிக்சர் (தாதுநீர்) விநியோகம்.

(4) கால்நடைத் தொழுவம் கட்டுதல்.

சி. ஆடு வளர்ச்சி.

செம்மறி ஆடுகள் விநியோகம்.

டி. கோழிப் பண்ணை வளர்த்தல் —

(1) சேவல் குஞ்சுகளை பரிவர்த்தனை முறையில் விநியோகம் செய்தல்.

(2) கோழிப்பண்ணை நடத்தும் தனிப்பட்டோருக்கு நிதி உதவி.

(3) கிராமப் பஞ்சாயத்துக்களில் கோழிப் பண்ணைப் பிரிவுகளை ஏற்படுத்துதல்.

ஈ. பன்றி வளர்ச்சி.—

ஆண் பன்றிகள் விநியோகம் செய்தல்.

(கிராம நல தல நிர்வாகத்துறையின் 26—8—1966 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 2064)

[49-ம் பக்கத் தொடர்ச்சி]

1966-ம் ஆண்டு டிசம்பர் மாத காலநிலை அறிக்கை மழை அளவு (மில்லிமீட்டர்களில்).

இடத்தின் பெயர்.	இம்மாத மழை அளவு.	சராசரியிலிருந்து மாறுபாடு.	ஜனவரி மாதம் 1-ம் தேதியிலிருந்து மொத்த மழை அளவு.
(1)	(2)	(3)	(4)
வட பிராந்தியம்			
சென்னை (மீனம்பாக்கம்) ..	110·0	—28·4	1646·6
திருர்குப்பம்*	128·3	+51·2	1596·1
வேலூர்	78·0	+11·5	1308·0
குடியாத்தம்*	45·2	+22·9	1005·4
கீழ்க்கரைப் பிராந்தியம்			
பாலூர்*	234·5	+69·8	1652·8
திண்டிவனம்*	166·1	+81·0	1868·9
கடலூர்	295·0	+104·7	1887·8
நாகப்பட்டினம்	258·0	—20·1	1143·0
ஆடுதுறை*	98·0	—71·4	1644.1
பட்டுக்கோட்டை*	147·0	— 0·2	1610·5
மத்திய பிராந்தியம்			
சேலம்	96·0	+69·8	1311·0
சேலம்*	46·8	+16·2	1343·3
கோயமுத்தூர்*	61·1	—2·2	751·8
கோயமுத்தூர்	54·0	+27·1	621·0
ஆளியார் நகர்*	99·4	+40·4	910·6
திருச்சிராப்பள்ளி	59·0	—6·8	1132·0
தென் பிராந்தியம்			
மதுரை	126·0	+ 74·9	543·0
பாம்பன்	126·0	— 66·8	369·0
கோவில்பட்டி*	94·8	+ 50·9	989.2
பாளையங்கோட்டை	153·0	+ 45·6	578·0
அம்பாசமுத்திரம்*	178·3	+ 48·1	700·0
நாகர்கோயில்*	185·4	+127·8	379·9
கன்னியாகுமரி*	50·0	— 8·0	562·0
மலைப் பிராந்தியம்			
கொடைக்கானல்	144·0	+ 12·9	590·0
கூனூர்*	114·5	— 56·1	1620·0
உதகமண்டலம்*	61·0	— 18·5	1604·8
நஞ்சைநாடு*	52·1	— 16·0	1525·5

* சென்னை விவசாய இலாகாவின் ஆராய்ச்சிப் பண்ணைகள்.

விவசாயச் செய்தி அலுவலரால் தொகுக்கப்பட்டு, தமிழ்நாடு அரசாங்க அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டு விவசாயத்துறை நெறியாளரால் வெளியிடப்பட்டது.



மாதிரிக் காய்கறித் தோட்டம்

தக்காண மக்காச் சோளம்

தேனாம்பேட்டை பொருட்காட்சியில்

சி. எஸ். எச். 1. சோளம்



மாதிரிக் காய்கறித் தோட்டம் அனைவரின் கவனத்தையும் கவர்ந்தது

எச். பி. 1. கம்பு

விவசாயப் பொறியியல்

Registered No. M 4646
©
தமிழ்நாடு அரசாங்கம்
1967

மாநில கவர்னர் திரு உஜ்ஜல் சிங், திரு. காமராஜ், மாநில விவசாய அமைச்சர் திரு கக்கன் உயர் விளைச்சல் ரகக் காட்சிக் கூடங்களைப் பார்வையிடுகின்றனர்.



சென்னை தேனாம்பேட்டையில் கடந்த ஆண்டு டிசம்பர் 15-ம் தேதியிலிருந்து 29–1–1967 வரை அகில இந்திய கைத்தொழில், சுதேசிக் கண்காட்சி நடைபெற்றது. அதில் விவசாயத்துறைக் கூடங்களை சிறப்புப் பார்வையாளர்கள் பார்வையிடுகின்றனர். உயர் விளைச்சல் ரகப் பயிர்கள், உயர் விளைச்சல் ரகத் திட்டம் ஆகியவற்றைச் சிறப்பாக விளக்கிய விவசாயக் காட்சிக்கூடம் அனைவரது கவனத்தையும் கவர்ந்தது.